OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 DEC 1938
MADRAS

ஸ்ரீராமஜெயம்

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து.

—ஸ்ரீ வீரராகவ கவி.

மலர்	பகுதான்ய ஸூ ஆவணி மீ	இதழ்
15	செப்டம்பர் 1938	9

திருமால் துதி

பார்மகள் துன்பம் படரா தொழித்த
நீர்மலி மேகநிறத்தனை நினைவாம். 1

அம்புவி மாந்தீர் அரவணை மாயன்
வம்பவிழ் தாட்டாமரை மருவீரே ! 2

செம்பொன் இலங்கை செகுத்த வல்வீரன்
தம்பதம் அடைமின் தரா தலத்தீரே ! 3

தண்டுழாய் சூடுந் தாமோதர னடி
கண்டினி மனமேகருதுவை தினமே ! 4

ஆயர்தம் குலத்தினில் அவதரித் தருளும்
மாயவனை நெஞ்சே வணங்கிடு மகிழ்ந்தே. 5

—ஸ்ரீ வீரராகவ கவி

பாரதியாரின் தமிழன்பு

[கவிச்சக்ரவர்த்தி பாரதியாரின் ஆப்த நண்பரும், அவராலேயே அன்புடன் பாடப்பெற்ற பெருமை வாய்ந்தவருமான துவளை ஸ்ரீ. உ. வே. கிருஷ்ணமாசாரியரால் எழுதப்பெற்றது இது.]

பாரதியார் அரவிந்தர் ஆச்ரமத்திற்கு அடிக்கடி போவதுண்டு. பாரதியார் எழுதியிருக்கும் நூல்களில், ஆங்கிலத்தில் "பொன்வாலுடைய குள்ளநரி" என்று பெயருள்ள ஒரு கட்டுக்கதை உண்டு. அதற்கு விலை அணு ஒன்று. அது 1913-14ல். அந்தக் காலத்தில் சென்னை ராஜீய விஷயங்களுக்கேற்ப எழுதப்பட்டது. பாரதியார் அதை கையெழுத்துப் பிரதியில் எழுதி முடித்ததும், பாபு அரவிந்தருக்கு அதை வாசித்துக் காட்டினார். அரவிந்தரும் அதைக் கேட்க கேட்க விடாநகைப் படைந்து, தான் சந்தோஷப்படுவதோடு திருப்தி அடையாமல், தன் கீழ் ஆச்ரமத்திலிருந்த எல்லா வாலிப வித்வான்களையும் கூப்பிட்டு, "பாரதியார் இங்கிலீஷில் எவ்வளவு அருமையாகக் கட்டுக்கதை எழுதியிருக்கிறார்?—அவரே வேறு வாசித்துக் காண்பிக்கிறார். இதைக் கவனிக்காமலும் கேட்காமலும் உங்களுக்குள்ளேயே ஏதோ பேசிக்கொண்டிருக்கிறீர்களே?" என்றார்—என்றெல்லாம் பாரதியார் என்னிடம் சொல்லியதுண்டு. பாபுவால் கொண்டாடப்பட்ட பிறகு அப்புத்தகம் உடனே அச்சிடப்பட்டுப் பிரசுரமாயிற்று. அது விஷயம், மயிலாப்பூரில் அப்போது பிரசித்தி பெற்றிருந்த டாக்டர் எம். ஸி. நஞ்சுண்டராவ் அவர்கள் கேள்விப்பட்டு, 500 பிரதிகளுக்கு ஆர்டர் அனுப்பினாராம். பாரதியார் புதுவையில் ஆங்கிலத்தில் பிரசுரித்த இந்நூலைக் கொண்டாடி இங்கிலீஷில்—பி. ஏ. எம்., ஏ. பட்டம், உத்தியோகம் பெற்ற பலர் கடிதங்கள் எழுதினார்கள்.

இத்தகைய கடிதங்களில் ஒன்றைப் பிரித்து வாசிக்கையில் நான் அவரை 'என்னய்யா கடிதம்' என்று கேட்டேன். அதற்கு அவர் சொன்னதாவது:—"போகச்சொல். விதவைப் பசங்களை; நான் என்னுடைய சொந்த பாஷையில் என்னுடைய முழு மூளையுங் கசக்கிப் பிழிந்து "பாஞ்சாலி சபதம்" எழுதியிருக்கிறேன். அது நன்றாயிருக்குது என்று சொல்லி, ஒருவனாவது ஒரு கடிதங்கூட எழுதவில்லை. "பாஞ்சாலி சபதத்தை" நீ ஒருவன்தான் வாசித்து வருகிறாய். ஏதோ அன்னிய பாஷையில் ஒரு கதை புஸ்தகம் எழுதினேனாம். அதைக் கொண்டாடி எத்தனை பேர் எத்தனை கடிதம் எழுதுகிறார்கள்." என்று சொன்னார்.

இதிலிருந்து பாரதியாரின் தமிழன்பின் பெருமை நன்கு விளங்குகிறதல்லவா?

83026

வெளிநாட்டுச் செய்திகள்

கியர், கிளச் இல்லாத மோட்டார்!

கியர், கிளச் முதலியவை இல்லாத ஒரு மோட்டாரை, பியாரோ செலோ்னி என்ற இத்தாலியர் கண்டு பிடித்திருக்கிறார். அது வேலை செய்யும் விதத்தை கேம்பிரிட்ஜில் ஆசிரியர் லியா என்பவர் விவரமாக பல விஞ்ஞானிகள் முன்னிலையில் காட்டினார். இந்த மோட்டார் 65,000 மைல் பிரயாணம் செய்திருக்கிறதாம்.

ரயிலுக்குள் ரயில் புகுந்தது

நியூயார்க் பாதாள ரயில்வேயில் நின்றுகொண்டிருந்த ஒரு ரயிலுக்குள் இன்னொரு ரயில் புகுந்துவிட்டது. 3 பேர் மாண்டனர். 50 பேர்களுக்குக் காயம்.

10 லக்ஷம் பேர் தேவை

இவ்வருஷக் கடைசிக்குள் விமானப்படை தற்காப்புக்கு 10 லக்ஷம் ஆட்களை முதற்படியாகச் சேர்த்தாக வேண்டுமென்று சர்க்கார் எல்லா ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் உத்தரவு அனுப்பியிருக்கிறார்கள். இதுவரை சேர்ந்திருப்பது 5-லக்ஷம். 'தாக்கப்பட்டால் தற்காப்புக்கு இந்நாட்டு மக்கள் தயார் என்பதற்கு அறிகுறியாக அமோகமாய் ஆட்கள் சேரவேண்டும்' என்று சர்க்கார் கேட்கின்றனர்.

பிரிட்டனில் கட்டாய ராணுவ சேவை?

ராணுவப் பயிற்சியில்லாத, அல்லது சொல்ப ராணுவப் பயிற்சி பெற்றவர்கள் தொழில்முறை அல்லது இதர கல்விகளில் தேர்ச்சிபெற்றவர்களாயிருந்து, 31-வயதுக்கு மேல் 55-வயதுக்கு உட்பட்ட எல்லோரும் அவசர ரிசர்வ் படையில் அதிகாரிகளின் பதவியை வகிக்க தங்களைப் பதிவுசெய்து கொள்ளலாம் என்று யுத்த இலாகா அழைத்திருக்கிறது.

ஐயோ யூதர்களே!

மற்றுமோர் நிர்ப்பந்தமா?

வயது வந்த யூத ஆண்கள் இஸ்ரேல் என்றும், பெண்கள் ஸாரா என்றும் கட்டாயம் தம் பெயர்களுடன் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று ஹிட்லர் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார். யூத குழந்தைகளின் பெயர்களும் அவர்கள் யூதர்கள் என்று தெரியும்படி வியக்தமாயிருக்க வேண்டும். யூத அடை மொழிகள் எல்லா வர்த்தக சர்க்கார் கடிதப்போக்குவரத்திலும் கட்டாயம் இருந்தே தீரவேண்டும்.

18326.

உள்நாட்டுச் செய்திகள்

11 போலீஸார் கைது

கலகம் செய்து கொள்ளையிட்டதாக, கக்வான், பில்ஹூர் போலீஸ் ஸ்டேஷன்களைச் சேர்ந்த 11 போலீஸ் கான்ஸ்டேபிள்களும் 4 சௌக்கிதார்களும் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

ஆகஸ்ட் 2-ந் தேதி நடுநிசியில், மோசடி சாமான்கள் வைத்திருந்ததாக சில செம்படவர்களைக் கைது செய்த பின், தொடர்ந்தாற் போல சௌரி கிராமத்தினுள் புகுந்து, கிராமவாசிகளைத் தாக்கியதே அவ்விதமான நடவடிக்கைக்குக் காரணம்.

பத்மா நதியில் வெள்ளம்

பத்மா நதி உடைப்பு மராமத்து வேலையில் ஒத்தாசை செய்து கொண்டிருந்த ஸ்ரீ. மக்லியாட் என்ற கிறிஸ்தவ மிஷனரியை வெள்ளம் 200 அடிவரை உருட்டிச் சென்றுவிட்டது. ஆனால், அவர் மரத்தைப் பிடித்துக்கொள்ளவே மீட்கப்பட்டார். அவர் மணல் மூட்டைமீது நிற்கையில் பிரவாகம் உருட்டியதாம்.

லாட்டரி டிக்கட்கள் விற்பனை ஒரு குற்றம்

சென்னை விளம்பர மந்திரி பின்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். "இந்தச் சர்க்காரின் உத்தரவு இல்லாமல், கோவா லாட்டரி டிக்கட்டுகளும் இதர லாட்டரி டிக்கட்களும் இம் மாகாணத்தில் வினியோகிக்கப்பட்டு விற்பனையாகி வருகின்றன. லாட்டரி டிக்கட்டுகளை எவருக்கும் விற்பனைசெய்வது இ. பி. கோ. 294 (ஏ) செக்‌ஷன் கீழ் ஒரு குற்றமேயாகும். அவ்வித டிக்கட்கள் விற்போர் தண்டனைக்கு ஆளாவார்கள்."

தேசியக் கொடியைக் கண்டு கிலி

"நாபா காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் சர்தார் குர்பசான் சிங், வக்கீல் ஸ்ரீ. ஹரிதயாள சிங் உள்பட 25 காங்கிரஸ்காரர்களுக்கு மேலாக நாபா சமஸ்தான போலீஸாரால் கைது செய்யப்பட்டனர்" என்று ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

இவர்கள் அனைவரும் தேசியக் கொடியேற்று விழாவில் கலந்து கொண்டதற்காகவே கைது செய்யப்பட்டனர். எந்த விழா நடத்தவும் [illegible]ர்க்காரின் அநுமதி பெறவேண்டுமென்று சமஸ்தான சட்டம் ஒன்று [illegible]றுகிறது.

2500 தொழிலாளர் டிஸ்மிஸ்

ஆதம்ஜி சணல் ஆலையில் (பால்லி) இரவு வேலை நிறுத்தப்பட்டதன் விளைவாக சுமார் 2500 தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். இவர்கள் அனைவருக்கும் சம்பளம் கொடுக்கப்பட்டு விட்டதாம்.

பத்திரிகைகளுக்குத் தடையேன்?

நிஜாம் சர்க்கார் மீது கூறப்படும் குற்றச்சாட்டுகளை நிராகரித்து, சர் அக்பர் ஹைதரி சமஸ்தானத்தின் அரசியல் முன்னேற்ற நம்பிக்கையை நிரூபிக்கிறார்.

"அரசியல் சீர்திருத்தக் கமிட்டி நியமிக்கப்பட்டிருப்பதே, நிஜாம் சர்க்கார் அரசியல் சீர்திருத்தத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறது என்பதை நிரூபிக்கிறது.

பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து வரும் 15 பத்திரிகைகள் தடுக்கப்பட்டதன் காரணம், அவை வகுப்புத் துவேஷத்தைச் சமஸ்தானத்தினுள் புகுத்த முயற்சித்ததே ஆகும்" என்கிறார்.

சாப்பாட்டில் அஜாக்கிரதை!

விஷம் உள்ளவை என்பது தெரியாமல் காட்டுக் காளான் வகை ஒன்றைக் கறிவைத்துச் சாப்பிட்டதால், சென்ற 15 தினங்களில் 4 குடும்பங்கள் மாண்டன.

லான்ட்ஸ்டனில் பள்ளிக்கூட காவல்காரன் இதைப் பிடுங்கிச் சமைத்துச் சாப்பிட அவனும் அவன் மனைவியும் 7-வயது பையனும் மாண்டனர்.

பூரியில் 6 கிராம வாசிகள் இவ்வாறு மடிந்தனர். சென்றவா[illegible] 8 பேருள்ள ஒரு குடும்பமும் அவர்கள் வீட்டிற்கு வந்திருந்த 5 வி[illegible] தினரும் இதற்குப் பலி.

மின்சாரக் கம்பெனி-முனிசிபாலிட்டி தகரா[illegible]

சூரத்தில் ஆகஸ்ட்டு 22-ந் தேதி மாலையிலிருந்து இரவு 9-மணி[illegible] ஒரே இருட்டு. மின்சார கம்பெனி கரண்ட் சப்ளை செய்ய [illegible] விட்டதுதான் காரணமாம்.

முனிஸிபாலிட்டி பாக்கி செலுத்தாததனால் ஏற்பட்ட தெ[illegible] பின்னர் கலெக்டர் தலையிட்டு விஷயத்தைக் கவனிப்பதாகச் சொ[illegible] 9-மணிக்கு அப்புறம் ஊருக்கு வெளிச்சம் கிடைத்தது.

காங்கிரஸில் பலாத்காரமா?

காந்திஜியின் கண்டனம்

"காங்கிரஸ்காரர் பலாத்காரச் செயல் புரிவதாக வந்துள்ள சில புகார்களை மகாதேவ தேசாய் என்னிடம் தெரிவித்திருக்கிறார்.

அமைதியான மறியலா?

அமைதியான மறியல் என்று சொல்லிக்கொண்டு, பலாத்கார வழிகளில் இறங்கிவிடுகிறார்கள் என்பது ஒரு புகார். உதாரணமாக, மனிதச் சுவர்போல வரிசையாக நின்றுவிடுகிறார்கள். அந்த மனிதச் சுவரைக் கடந்து செல்வோர் காயமடையாமலோ, மறியல்காரருக்குக் காயமுண்டாக்காமலோ கடக்கமுடியாது. அமைதியான மறியலின் கர்த்தா நான் தான். இத்தகைய மறியலை ஒரே ஒரு இடத்தில் கூட நான் ஆதரித்ததாய் எனக்கு ஞாபகமில்லை. தர்சனு சத்யாக்கிரகத்தை எனக்கு விரோதமாய் உதாரணங் கூறுகிறார் ஒரு நண்பர். தர்சனு உப்பளத்தை நாம் வசப் படுத்திக்கொள்ள வேண்டுமென்றே நான் யோசனை கூறினேன். அந்த யோசனை இங்கே பிரயோகமாகாது. தர்சனுவில், சர்க்காருக்கு விரோதமாய் உப்பளத்தை வசப்படுத்திக் கொள்வதே நமது நோக்கமாயிருந்தது. அச் செயலை மறியல் என்று சொல்ல முடியாது. ஆனால், தொழிலாளர் எதிரே நின்று அவர்களை வேலைக்குப் போகவிடாது தடுப்பது கலப்பற்ற பலாத்காரமே யாகும். அந்த முறையைக் கைவிட வேண்டும். இத்தகைய மறியல் நடந்தால், ஆலை முதலாளிகளும் பிற தொழிற்சாலைச் சொந்தக்காரர்களும் போலீஸ் உதவியை நாடுவது நியாயமே யாகும். சம்பந்தப் பட்ட காங்கிரஸ்காரர் கேட்காவிட்டால், காங்கிரஸ் சர்க்கார், அப்படிப் போலீஸ் உதவி யளிக்கக் கடமைப்பட்டதே யாகும்.

..ு புகார்கள்

மற்றோர் புகார் என் கவனத்துக்கு வந்திருக்கிறது. மாகாணக் ..கிரஸ் கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்ட கிளைக்காங்கிரஸ் கமிட்டி ..றை, சில காங்கிரஸ்காரர் சேர்ந்து ஆக்ரமித்துக்கொண்டுவிட்டார் ..். இது மன்னிக்கமுடியாத ஒழுங்கீனமாகும்.

..லர் கூச்சல் போட்டும் வேறு தொல்லைகள் விளைவித்தும் கூட்டங் ..லைக்கிறார்களாம். இது மூன்றாவது புகார்.

..தலாளி வகுப்பையே திட்டி, அவர்களைக் கொள்ளையிடும்படி ஜனங் ..லர் தூண்டுகிறார்கள் என்பது நான்காவது புகார்.

ஒழுங்கீனமா? பலாத்காரமா?

இவை யாவும் பலாத்காரமும் ஒழுங்கீனமுமே யாகும் என்பதில் சந்தேகமில்லை. இத்தகைய ஒழுங்கீனம் வரவர அதிகரித்துக் கொண்டிருப்பதாக எனக்குத் தகவல் எட்டுகிறது. பழைய ஆட்சியில் முதலாளிகளுக்கு நியாயம் கிடைத்ததென்றும், இப்போது காங்கிரஸ் ஆட்சியிலோ முதலாளிகளுக்கு அநியாயமே கிடைப்பதன்றி வசையும் அவமானமும் கூட லபிக்கின்றன என்றும் மிகுந்த மனக் கசப்புடன் புகார் செய்யும் ஓர் கடிதம் என்னிடம் வந்திருக்கிறது.

பிரிட்டிஷ் ஆட்சி முதலாளிகளுக்குச் சலுகை காட்டுகிறதென்பதில் ஐயமில்லை. பட்டினியால் வாடும் கோடிக்கணக்கான ஏழை மக்களுக்குப் பூர்ண நியாயம் தேடுவதையே நோக்கமாகக் கொண்ட காங்கிரஸோ, முதலாளிகளுக்குச் சலுகை காட்டமுடியாது. ஆனால், காங்கிரஸ் எதுவரையில் அஹிம்சா தர்மத்தைத் தனது அஸ்திவாரக் கொள்கையாக வைத்துக்கொண்டிருக்கிறதோ அதுவரையில், அது பலாத்கார ஆக்ரமண வழியைக் கடைப்பிடிக்கலாகாது; எந்த வகுப்பு ஜனங்களையும் நிந்திக்கவோ, அவமானம் செய்யவோ இடங் கொடுக்கவும் கூடாது; எந்தக் காங்கிரஸ்காரனோ, காங்கிரஸ் சபையோ, சட்டத்தைத் தாங்களே அமுல் செய்துவிடவும் இடமளிக்கக்கூடாது.

> பலாத்கார மறியலையோ, பலாத்காரத்துக்குத் தூண்டும் பிரசங்கங்களையோ காங்கிரஸ் சகித்துக்கொண்டிருக்க முடியாது.

அஹிம்ஸையில் சலிப்பு ஏற்பட்டுவிட்டதா?

காலாகாலத்தில் பலாத்காரத்தைத் தடுக்காவிட்டால், காங்கிரஸ் உள்ளுக்குள்ளேயே மக்கி மடிந்துபோகும். மாகாண கமிட்டித் தலைவர்களும் ஸ்தலக் கமிட்டிகளின் தலைவர்களும் சிறிதும் கால தாமதமின்றி இந்தத் தீமையை வேருடன் கல்லி யெறியவேண்டும். அப்படி யில்லையானால், பொதுவாகக் காங்கிரஸ்காரருக்கெல்லாம் அஹிம்சா தர்மத்தில் சலிப்பேற்பட்டுவிட்டதானால், காங்கிரஸ் சட்ட திட்டங்களில் க[illegible] முதல் விதியைத் திருத்தி விடுவதே, சம்பந்தப்பட்ட சகலருக்கும் [illegible]துக்கும் நன்மையாகும். அந்த உன்னத ஸ்தாபனம், அசத்தியத்[illegible] பலாத்காரத்தையும் மறைக்கும் போர்வையாகவே சத்தியத்தையும் அ[illegible] தர்மத்தையும் உபயோகிக்கிறது என்ற பேச்சு மாத்திரம் பிறக்க[illegible]தரலாகாது.''

—'' ஹ[illegible]

நூதன குறள்

சூது

துன்பம் பலவாக்கித் தூய புகழ்கெடுத்தும்
இன்மை தராதோ இது. 1

சூதும் இடமும் தொழிலும் விடாவரசர்
யாதும் இலராவர் இங்கு. 2

சூதென்னும் மூதேவி சூழ்ந்தார் இருமையும்
தீதென்ப வெய்தாரோ சொல். 3

செல்வமும் நற்குணமும் சேரக் கெடுக்கும்
பல்வகையாற் சூதாடின் பாழ். 4

பொருளைக் கெடுப்பதுடன் பொய்ம்மையை யேற்றும்
அருளைக் கெடுக்கும் அது. 5

இருமையினும் துன்பம் இயற்றுநெடுஞ் சூது
பொருவரோ வேந்தர் புகல். 6

ஊணுமுடையு முறுகல்வி கீர்த்தி பொருள்
மாணுறுமோ சூது கொளின். 7

சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூது
மறுமை யிழப்பிக்கும் மற்று. 8

இருமைப் பயனும் இழந்தும் இருஞ் சூதன்
அருமையுடல் விருப்பா னற்று. 9

கலங்கித் தெளியும் கருத்துடையார்க் கன்றே
இலங்கும் எழில்ஞானம் இங்கு. 10

—திரு. ராகவாசாரியர்.

இந்திய மாதர்களின் நிலைமையும் கடமையும்

ராஜாஜியின் புத்திமதிகள்

1. "உங்கள் கணவன்மார்களை வரவிற்கு மிஞ்சிய செலவு செய்யச் சொல்லாதீர்கள்.

2. நகைப் பித்தை உங்களிடமிருந்து ஒழித்துவிடுங்கள்.

3. கைக் குத்தலரிசியை உபயோகித்துச் சமைத்துப் போடுங்கள்.

4. சாத்யமான வரையில் உங்கள் குழந்தைகளுக்கு நீங்களே எழுதப் படிக்கச் சொல்லிக்கொடுங்கள்."

"உங்கள் எல்லோருக்கும் குடும்பப் பொறுப்பு என்னும் கடமை தினசரி வாழ்க்கையிலிருக்கிறது. அதில் குழந்தைகளை வளர்ப்பது முக்கியம்.

எங்கும், ஆண்கள் ஸ்திரீகளைக் கொடுமையாக நடத்தி ஏமாற்றி வருவதாயும், ஆகையால் சம உரிமைக்குப் போராட வேண்டுமென்றும் ஒரு பிரசாரம் நடந்து வருவது உங்களுக்குத் தெரியும். எங்கும் உலகத்தில் பல மாறுதல்கள் நிகழ்ந்து வருவதைப்போல், பெண்கள் உலகத்திலும் பல மாறுதல்கள் விளைந்து வருகின்றன. ஆனால் மேனாட்டு ஸ்திரீகள் நிலைமைக்கும், நம் நாட்டு மாதர் நிலைமைக்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். இந்தத் தேசத்து ஸ்திரீகள் மற்ற தேசத்து மாதர்களைவிட கௌரவமான ஸ்தானத்தில் இருக்கிறார்கள் என்னும் உண்மையை நான் சொன்னால், சிலர் விரும்பாம லிருக்கலாம். ஆனால், அது உண்மையை மறுக்கக் காரணமாகாது.

எழுதப் படிக்கத் தெரிந்துகொள்ளுதல் என்ற அளவுக்குக் கல்வி, ஸ்திரீகளிடையே பரவாமலிருந்தாலும், நம் நாட்டு ஸ்திரீகள் அந்தஸ்து சமூகத்தில் உயர்வானதே. எழுதப்படிக்கத் தெரிந்துகொள்ளவில்லை என்ற காரணத்திற்காக ஸ்திரீகள் விசனப்படத் தேவையில்லை. அதனாலேயே எழுதப் படிக்கத் தெரிந்தவர்களைவிட தாங்கள் தாழ்ந்தவர்களென்றும் கருதவேண்டாம்.

கல்வி வேறு. படிப்பு வேறு. கல்வியானது புத்தி ஆத்மா சிறப்பு பெற சீர்பட்டு நிற்பது. வெறும் எழுதப்படிக்கத் தெரிந்திருப்பது மட்டி அதைத் தந்துவிடாது.

தண்ணீர்மட்டும் ஆகாரமாகிவிடாது. ஆனாலும் தண்ணீரும் அவ மானதுதான். ஆயினும் அதைவிட உணவு முக்கியமானது. அதைப்போ எழுதப் படிக்கத் தெரிவது மட்டில் கல்வியைப் பெற்றதாகாது.

மேனுட்டில், எப்படி பல் தேய்ப்பது, குளிப்பது, உண்பது முதலி யனவெல்லாம் புஸ்தகங்களில் கூறப்பட்டிருக்கும். ஆனால், இந்தச் சிறிய விஷயங்களெல்லாம் நம் நாட்டில் சிறுவர் சிறுமிகளுக்கும் தெரியும். ஆனால், நாம் அதை உணராமலிருப்பதற்குக் காரணம் மிகவும் சகஜமானவைகளாகப் போனதே யாகும். எப்படி சதா ஜலத்தில் உள்ள மீன் தான் கடலில் வசிப் பதை உணர்வதில்லையோ அப்படியே இந்த விஷயமும்.

எங்காவதுஓரிடத்தில் ஸ்திரீகள் புருஷர்களால் கொடுமையாய் நடத்தப் படலாம். ஆனால், அது எல்லாக் குடும்பங்களிலும் நடக்கும் விஷயமல்ல. எப்படி தாயாரைக்கூட துன்புறுத்தும் பிள்ளைகளிருக்கிறார்களோ, இப்படித்தான் இதுவும். இதைக்கொண்டு எப்படி எல்லா பிள்ளைகளும் தாயார்களைக் கொடுமை செய்கிறார்களெனச் சொல்ல முடியாதோ, அப்படியே ஸ்திரீகள் கொடுமையாக நடத்தப்படுகின்றனர் என்பதும்.

குடும்பப் பொறுப்புக்கு அவசியமான பொதுக் கல்வி (அறிவு)யுடன் எழுதப் படிக்கத் தெரிந்து கொள்வதும், டென்னிஸ் முதலியன விளையாடு வதையும் மேற்கொள்ளலாம். ஆனால், அதற்குத் தகுந்த உடை வசதி சௌகரியமிருக்கிறதா என்பதை உணர்ந்து நடக்கவேண்டும். ஸ்திரீகள் குடும்பத்தில் தங்களுக்குள்ள பொறுப்பை ஏற்க தைரியமும், உற்சாகமும் கொண்டவர்களாக இருத்தல் அவசியம். தம் குடும்பம் சந்தோஷகரமாக திருப்தியுடன் நடப்பதைக் கண்டுமட்டில் சும்மா இருந்துவிடக்கூடாது. தங்கள் சகோதரிகளும், துன்பம் கொடுமை ஆபத்துக்கு உட்படுத்தப்பட் டால் அதைத் தடுக்கவேண்டும். அடுத்தபடியாக தங்கள் குழந்தைகளுக்குப் பல விஷயங்களைச் சொல்லிக்கொடுப்பதன்மூலம் சுலபமாக அவர்களுக்குக் கல்வி கற்பிக்கலாம்.

இந்திய ஸ்திரீகள் தாராளமாகப் பழகும் மனோபாவம் வழக்கம் உடை யவர்க ளல்ல. ஆனால், 'இக் குறை எங்களிடமில்லை' யென நீங்கள் கூறினால், நான் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்கிறேன். நமது ஸ்திரீகள் தங்கள் குடும்பமே உலகமென நினைப்பதால், அவர்களுக்குப் பொறுமை குறைவு. ஆனால் ஒற்றுமையாயும், பலர் இம்மாதிரி சங்கங்களில் கூடிப் பழகுவதின் மூலமும் அக் குறையையும் நீக்கிக் கொள்ளலாம்.

காங்கிரஸ் கொள்கையைப் பரப்ப பெண்கள்

கிராமப் பிரதேசங்களிலுள்ள பெண்களுக்குக் காங்கிரஸ் கொள்கையை பிக்கவும் கதர் அபிவிருத்திக்கும் வங்க மாகாண காங்கிரஸ் கமிட்டி னுடன் இணைக்கப்படும் பிரத்யேக பெண்கள் ஸ்தாபன மொன்றை டுத்தத் தீர்மானித்துள்ளது.

விரைவில் விஜயம் செய்ய வருகிறான்!

மதுரை வீரன்

நடிகர்கள்:

வி. ஏ. செல்லப்பா, டி. பி. ராஜலக்ஷ்மி

எம். எம். சிதம்பரநாதன்	வி. எ. கணேசன்	மாஸ்டர் ராஜா	ராஜேஸ்வரி
மல்கோவா மீனாக்ஷிசுந்தரம்	பயில்வான் வெங்கோப ராவ்	வி. எஸ். மணி	ஆதிலக்ஷ்மி
டி. பி. ராஜகோபால்	மாஸ்டர் கோவிந்தராஜன்	எம். எ. ராஜாமணி	கமலாபாய்
டி. வி. சுந்தரம்	ரங்க ராஜு	பி. ஆர். மங்களம்	பி. சாரதாம்பாள்
ஆவுடையப்ப பிள்ளை	பசுபதி	எஸ். ஆர். ராஜலக்ஷ்மி	பேபி தர்மு
ஸ்டன்ட் ராஜு	அப்பனையங்கார்	டி. ராஜம்மாள்	பங்கஜம்மா
பாக்ஸிங் பத்மநாபன்	டாக்டர் சுப்ரமணிய அய்யர்	ருக்மணிபாலா	

டைரெக்டர்: பி. வி. ராவ் உதவி டைரெக்டர்: நாராயணசாமி அய்யர்

சங்கீத டைரெக்ஷன்: டி. பி. ராஜகோபால்

ராஜு பிலிம்ஸ் அண்ட் ராஜம் டாக்கிஸ் தயாரிப்பு

விவரங்களுக்கும், பிரதேச உரிமைகளுக்கும் எழுதவும்:—

தி ராஜு பிலிம்ஸ் லிமிடெட்.,

81, பூனமல்லி ஹைரோட், :: கீழ்ப்பாக்கம், மதராஸ்.

டெலிபோன்: 2781. தந்தி: 'பிலிம்ஸ்ராஜு'

ஆனந்த மடம்

[அல்லயன்ஸ் கம்பெனி: மைலாப்பூர் விலை. 1—4—0. "ஜகன்மோகினி" ஆபீஸிலும் கிடைக்கும்.]

சில புத்தகங்கள் படிக்க எடுக்கும்போதே வெறுப்பு தட்டுகிறது. சிலவற்றை எடுத்தால் முடியும் வரை கீழே வைக்க மனம் வருவதில்லை. "ஆனந்தமடம்" பின்னே சொன்ன வகையைச் சேர்ந்தது என்று கூறினல் மிகையாகாது. பங்கிம் சந்திர சட்டோபாத்யாய வங்காளியில் எழுதியதைத் தமிழர்கள் எல்லோரும் படித்து இன்புறும்படியான எளிய நடையில் ஸ்ரீ. டி. என். குமாரஸாமி எழுதியிருக்கிறார். இது வங்காளத்தில் நடந்த சந்நியாசிகள் கலகத்தைப்பற்றி சித்தரிக்கும் ஓர் கதை. கற்பனு சக்தியால் இதன் ஆசிரியர் இன்னும் நன்ருக விவரித்து இருக்கிறார். ஜீவானந்தன், பரமானந்தன், தீராநந்தன், சாந்தா இவர்கள் எப்படி வெள்ளையர்களை ஆட்டிவைத்து வெற்றி பெற்ருர்கள் என்பதைப் படிக்கும்போது நம்மையறியாமல் ஓர் ஆவேசமும் உற்சாகமும் வருகிறது. அச் சந்நியாசிகள் "வந்தே மாதர" கீதத்தை எவ்வாறு மதித்தார்கள் என்பதற்குச் சான்று பவானந்தன் சாகும்போது கூட தன் காது கேட்கும்படி "வந்தே மாதரம்" என்று ஒருதரம் சொல்லுங்கள் என்று கூறியதே யாகும். சாந்தி பகைவர்களின் கூடாரத்தில் உளவுக்காகச் சென்று மேனேஜரைப் பார்ப்பதும் அங்கு நடக்கும் சம்பாஷணையும் நம்மை குலுங்கக் குலுங்க நகைக்க வைக்கிறது. கடைசி சண்டையில் ஜயித்த பிறகு ஜீவாநந்தனும் சாந்தியும் கைகோர்த்துக்கொண்டு வெளியே போகையில் அவர்கள் மறுபடியும் திரும்பி வருவாரோ என்று நம்மையும் அறியாமல் சொல்லிவிடுகிறோம். இக் கதையை படித்த முடித்த பிறகு அச் சந்தானர்களுக்கு எவ்வளவு தூரம் மாத்ரு பக்தி, தேசபக்தி, பிறரிடம் அடிமைப்பட்டு இருப்பதைக் காட்டிலும் சண்டை போட்டாவது விடுதலை அடையவேண்டும் என்ற அவா இருந்தது என்பது வெள்ளிடை மலை.

இப்புத்தகத்தில்தான் நமது தேசீயப் பாட்டாகிய "வந்தேமாதரம்" எழுதப்பெற்றது என்பதனல் இப் புத்தகம் இன்னும் விசேஷ மகிமையை அடைகிறது.

நவநீதகிருஷ்ணன்

மூன்ரும் பதிப்பு] [ரூ. 2.

“இந்த நாவலில் தற்கால தமிழர் சமூக வாழ்க்கையை வெகு சாமர்த்தியமாக இதன் ஆசிரியை சித்தரித்திருக்கிருர். கதைப்போக்கில் மிகவும் இயற்கையாயுள்ள பல சம்பவங்களைப் புகுத்தியிருக்கிருர்...............வாசகர்கள் முன்பு நம் நாரீமணி களின் பயபக்தியுடன் கூடிய பெருந்தன்மையான நோக்கங் களையும், சிறந்த குணங்களையும் பளிச்சென எடுத்துக் காட்டும் விதமாய் சில நிகழ்ச்சிகளை யமைத்திருக்கிருர். சிறந்த படிப் பினையுடன்—முக்கியமாக ஸ்திரீகளுக்கு—இந்தப் புத்தகம் பெரியதோர் ஞானபோதினியாக விளங்குகிறது. மிகவும் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது ”

—“ ஹிந்து ”

கௌரீமுகுந்தன்

இரண்டாம் பதிப்பு] [ரூ. 1-12

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் இயற்றியுள்ள கௌரீமுகுந்தன் என்னும் புத்தகம் வெறும் நவீன மன்று. ஸரோ ஜாமணி, மனோகரன் இருவரும் முதலில் யாருமற்ற அனுதை களாக விருப்பதும், வறுமையின் கொடுமையால் அவர்களடையும் துன்பமும் உருக்கமாய் எழுதப்பட்டுள்ளன......தன் தாய் மரணத்தறுவாயில் எழுதிய ஓர் கடிதத்தால் தானே முகுந்த னென்னும் இளவரசன் என்பதை யறிந்து, படையுடன் சென்று விரோதியை வென்று, தான் காதலித்த லலிதா என்ற பெண் மணியை மணந்து தனது சகோதரியாகிய கௌரியைச் சத்திய சீலனென்னும் இளவரசனுக்கு மணம் செய்விப்பது இவையெல் லாம் படித்தே இனிமையை உணரத் தக்கன.

கதையோடு நில்லாமல் இதன் ஆசிரியை, சில தர்மங்களையும் தக்கவிடங்களில் உபதேசிக்கத் தொடங்குகிருர். கொடை, அன்பு, தெய்வபக்தி, செங்கோன்முறை முதலியவற்றின் பெருமையைக் காட்டுவதோடு, கற்பு, சிநேகம் போன்ற பல நற்குணங்களை அனுஷ்டிக்க வேண்டிய அவசியத்தை ஆசிரியை விளக்கியிருக்கிருர். ஆண் பெண் இருபாலரும் படிக்கத் தக்க இனிய எளிய நடையில் இந்த நவீனம் எழுதப்பட்டிருக்கிறது.

—“ சுதேசமித்தரன் ”

1938 ௵ ஸெப்டம்பர் 7-ஆம் தேதி

குறிப்பு:—6வது பக்கத்தில் குறித்துள்ள 6-30 மணியை 8-40 என்று கவனிக்கக் கோருகிறோம்.

---

4 டாக்கி நாவல்கள்!

ராஜமோஹன்—ரூ. 1—4

நீங்கள் வெகு நாட்களாக ஆவலுடன் எதிர்பார்த்த இரண்டாம் பதிப்பு தயாராகி விட்டது. 'பணமா, குணமா? அந்தஸ்தா, அன்பா? தாயின் சேவையா அல்லது தன் சுக வாசமா?'...இவை போன்ற பல கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் அற்புதமான கதை.

அனாதைப் பெண்—ரூ. 1—4

மனத்தை யுருக்கிக் கண்ணீரைப் பெருக்கச் செய்யும் பலவித சம்பவங்கள் நிறைந்த மகத்தான நாவல். புதிய இரண்டாம் பதிப்பு. 36 அழகிய டாக்கீ ஆப்டோன்படங்களுடன் வெளிவந்து விட்டது.

நளினசேகரன்—அணா 8.

செருக்காலழிந்த சீமாட்டி ஒருத்தியின் வாழ்க்கையையும், அடியார்க்கு அடியவனும், மிடிதீர்க்கும் மித்திரனுமான ஒருவனின் அபூர்வ ஜீவியத்தையும் சித்திரிக்கும் சமூக சீர்திருத்த, தேசிய நாவல். கலிகால தெய்வம் கண்மூடியல்ல; 'தன்வினை தன்னைச் சுடும்; இல்லற வாழ்வே நல்லறமாகும்' என்னும் உண்மைகளை நிரூபிக்கும் கதை. இரண்டாம் பதிப்பு வெளிவந்து விட்டது.

தியாகக் கொடி—ரூ. 2

சம நிலைத் தொண்டின் உயர்வையும், தியாக புத்தியையும் புகட்டும் நவீனம். எப்பேர்ப்பட்டவரும் பிரமிக்கும் துப்பறிதல்......மிகச் சிறந்ததென எல்லோராலும் கொண்டாடப் பட்ட கதைப் போக்கையுடையது.

அஹிம்ஸையும் பாஸிஸமும்

காந்திஜியின் விளக்கம்

காங்கிரஸின் வேலைகள் என்னவென்பதைத் தெரிந்து கொள்வோம். காங்கிரஸின் வளர்ச்சி, நிர்வாகம் சம்பந்தப்பட்டவரையில், உலகத்திலுள்ள எந்த ஜனநாயக ஸ்தாபனத்தையும் போல், காங்கிரஸும் ஒரு ஜனநாயக ஸ்தாபனம்தான். ஆனால், இப்போதிருக்கும் ஏகாதிபத்திய வல்லரசுகளில், மிகவும் வல்லமை வாய்ந்த ஒன்றுடன் போராடுவதற்காக இந்த ஜனநாயக ஸ்தாபனம் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, வெளி வேலைகளுக்கு, அதைச் சைன்யத்துடன்தான் ஒப்பிட வேண்டும். அந்தச் சமயத்தில் அதற்கு ஜனநாயகத்தன்மை கிடையாது. தனக்குக் கீழுள்ள பல்வேறு ஸ்தாபனங்கள்மீது, கட்டுப்பாட்டைச் சுமத்தவும், அதை நிறைவேற்றி வைக்கவும், மத்ய ஸ்தாபனத்துக்கு அதிகாரங்கள் இருக்கின்றன.

"சட்ட மறுப்பு ரூபத்தில், போராட்டம் நடந்து கொண்டிருக்கும் போது நீங்கள் சொல்லுவது சரிதான். ஆனால், சட்ட மறுப்பு நிறுத்திவைக்கப்பட்டிருக்கும்போது, அது எப்படிப் பொருந்தும்?" என்று சிலர் கேட்கிறார்கள்.

ஆனால், சட்ட மறுப்பு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்றால், யுத்தம் நிறுத்திவைக்கப்பட்டது என்று அர்த்தமில்லை. இந்தியர்களால் தயாரிக்கப்பட்ட ஒரு அரசியல் அமைப்பு வந்த பிறகுதான் யுத்தம் நிற்க முடியும். அதுவரையில் காங்கிரஸ் ராணுவத்தைப் போல்தான் இருக்க வேண்டும்.

ஜனநாயகத் தன்மை வாய்ந்த பிரிட்டன், இந்தியாவுக்காக ஒரு விசித்திரமான அரசியலைச் சிருஷ்டித்திருக்கிறது. அதன் உண்மையான சொரூபத்தைக் கவனித்தால், அது நல்ல கட்டுப்பாடுடன் அமைக்கப்பட்ட ஒரு ராணுவ ஆதிக்கமே தவிர வேறில்லை என்பது புலனாகும்.

உண்மையான ஆதிக்கம் சம்பந்தப்பட்டவரையில் மந்திரிகள் வெறும் பொம்மைகளே. இன்று அவர்களுக்கு, 'சலாம்' போடும் கலெக்டர்களும், போலீஸ்காரர்களும், அவர்களுடைய உண்மையான எஜமானர்களாகிய கவர்னர்கள் ஒரு வார்த்தை சொன்னால், மந்திரிகளைப் பதவியிலிருந்து நீக்கி, அவர்களைக் கைது செய்து, 'லாக்கப்'பில் வைத்துவிடுவார்கள். இந்திய சர்க்கார் சட்டத்தை வேலை செய்வதற்காக காங்கிரஸ் பதவி யேற்றுக் கொள்ளவில்லை; இந்தியர்களாலேயே தயாரிக்கப்பட்ட ஒரு உண்மையான

சட்டத்தைக்கொண்டு வரும் நாளைத் துரிதப்படுத்துவதற்கே காங்கிரஸ் பதவி ஏற்றுக்கொண்டிருக்கிறதென்று நான் சொல்லுவதற்குக் காரணம் இதுதான்.

ஆகவே, யுத்தம் புரியும் ஒரு இயந்திரமாக சிருஷ்டிக்கப்பட்ட காங்கிரஸ், எல்லா நடவடிக்கைகளையும் மத்ய ஸ்தாபனத்திலிருந்துதான் நடத்த வேண்டி யிருக்கிறது. எவ்வளவு உயர்ந்த பதவியிலிருக்கும் காங்கிரஸ்காராயிருந்தாலும், ஏனென்று கேட்காமல் கீழ்ப்படிய வேண்டுமென்று காங்கிரஸ் எதிர்பார்க்கிறது. வேறெந்த விதமாகவும் போராட்டத்தை நடத்தமுடியாது.

இது கலப்பற்ற பாஸிஸம் என்று சொல்லுகிறார்கள். ஆனால், பாஸிஸம் என்பது வெறும் பட்டாக்கத்தி என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். பாஸிஸமாயிருந்தால், டாக்டர் கரேயின் தலை போயிருக்கும். பாஸிஸம் ஒரு மூலை என்றால், அதற்கு நேர் எதிர்த்த மூலை காங்கிரஸ். ஏனென்றால், காங்கிரஸின் அடிப்படை பரிசுத்தமான அஹிம்ஸை. கறுப்புச் சட்டை வீரர்களிடமிருந்து காங்கிரஸ் அதிகாரம் பெறவில்லை.

காங்கிரஸ் ஆக்ஷியின் கீழ் டாக்டர் கரே நாகபுரி வீரராயிருக்கமுடியும். நாகபுரியிலும் இதர இடங்களிலும் உள்ள மாணவர்களும், ஜனங்களும் என்னையும், காரியக் கமிட்டியையும் இஷ்டப்படி திட்டலாம்; அஹிம்ஸா முறையைப் பின்பற்றுகிற வரையில், இந்த ஆர்ப்பாட்டக்காரர்களின் ஒரு ரோமத்தைக்கூட யாரும் அசைக்கமாட்டார்கள்.

அதுதான் காங்கிரஸின் கீர்த்தி; அதுதான் காங்கிரசின் பலம்—பல ஹீனமல்ல. அந்த அஹிம்ஸா முறையின் மூலந்தான் காங்கிரஸ் தன் ஆதிக்கத்தைப் பெறுகிறது. எனக்குத் தெரிந்தவரையில், முற்றிலும் அஹிம்ஸா முறையில் நடக்கும், முக்கியமான அரசியல் ஸ்தாபனம், உலகத்திலேயே காங்கிரஸ் ஒன்றுதான். டாக்டர் கரே உள்பட, யார் காங்கிரஸில் இருந்தாலும், அவர்களுடைய மனப்பூர்வமான கீழ்ப்படிதலைக் காங்கிரஸ் பெற முடியுமென்பதே, எப்போதும் காங்கிரஸின் பெருமையா யிருக்கட்டும்."

நமது விளம்பர விகிதம்

ஒரு பக்கத்துக்கு ஒரு முறை		ரூ.	12	0	0
அரை பக்கத்துக்கு	,,	,,	6	8	0
கால் பக்கத்துக்கு	,,	,,	4	0	0
உள்ளட்டைக்கு ஒரு முறை		,,	15	0	0

நீண்ட கால விளம்பரங்களுக்குத் தனிச் சலுகை காட்டப்படும்.

மானேஜர்.

ஸ்ரீஜெயந்தி கொண்டாட்டம்.

[அகில இந்திய ரேடியோவுக்காக ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால் எழுதப்பட்டு, அன்னாருடைய கோஷ்டியினரால் 20-8-1938-ல் நடத்தப்பட்டது.]

ஒரு ரிஷி :—மகரிஷே! இன்றென்ன நம்மையறியாத ஆனந்தம் உண்டாகிறது. இதற்குக் காரணம் என்ன ?

மற்றொரு ரிஷி :—பூபாரத்தை நீக்கும்பொருட்டும், துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனார்த்தம் எம்பெருமான் ஆயர்பாடியில் எசோதை மகனாய் அவதரிக்கப் போகின்றார். அதுதான் ஆனந்தம்.

முதல் ரிஷி:—ஓகோ! அதற்குத்தான் நாரதமுனிவரும் பூலோகம் வந்திருக்கிறாரா!

வசனம்.

(யாதவர்களின் கொண்டாட்டம்.)

யாதவர்கள் சந்தோஷத்துடன் கூவுவது.

எசோதைக்கு மகன் பிறந்துவிட்டான். மேளம் வாசியுங்கள். யாதவ குலத்திற்கு ஜோதி உதயமாகிவிட்டது. எசோதைக்கு மகன் பிறந்துவிட்டான்.

மேளம் வாசித்தல்

கோபி :—மாதவி ! இன்றைக்கு என்ன இத்தனை ஆரவாரம்?

மாதவி :—இது தெரியாதா ! நம்ப எசோதைக்குப் பிள்ளைக் குழந்தைபிறந்திருக்காம். அதான் எல்லோரும் ஆனந்தக்கூத்தாட்று.

வேணி :—அப்டியா ! அப்படின்னு நாமும் கும்மி கோலாட்டம் எல்லாம் போடலாமே !

கோபியர்கள் :—ஆஹா ! அப்படியே போடலாம்.

வேணி :—வனஜா ! ஸரோஜா ! பங்கஜா! எல்லாரும் வாருங்க; கும்மி கோலாட்டம் எல்லாம் போடலாம்.

ஆ

(கும்மி பாட்டு—பெரியாழ்வார் திருமொழி)

வண்ண மாடங்கள் சூழ்திருக் கோட்டியூர்
கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்
எண்ணெய் சுண்ண மெதிரெதிர் தூவிட
கண்ணன் முற்றம் கலந்தளா றாயிற்றே. (1)

ஓடுவார் விழவா ருகந் தாலிப்பார்
நாடுவார் நம்பிரா னெங்குத்தா னென்பார்
பாடுவார்களும் பல்பறை கொட்ட நின்று
ஆடுவார்களு மாயிற்றாய்ப் பாடியே. (2)

பேணிச் சீருடைப் பிள்ளை பிறந்தினில்
காணத் தாம்புகுவார் புக்குப் போதுவார்
ஆணொப்பாரிவன் நேரில்லைகாண் திரு
வோணத்தா னுலகாளு மென்பார்களே. (3)

கோபி :—கும்மி போதும் ; கோலாட்டம் போடலாம்.

உறியை முற்றத் துருட்டிநின் றாடுவார்
நறுநெய் பால்தயிர் நன்றாகத் தூவுவார்
செறிமென் கூந்த லவிழத் திளைத்து எங்கும்
அறிவழிந்தன ராய்ப்பாடி யாயரே. (1)

கொண்ட தாளுறி கோலக் கொடுமழு
தண்டினர் பறியோலைச் சயனத்தர்
விண்ட முல்லை யரும்பன்ன பல்லினர்
அண்டர் மிண்டிப் புகுந்துநெய் யாடினர். (2)

செந்நெ லார்வயல் சூழ்திருக் கோட்டியூர்
மன்னு நாரணன் நம்பி பிறந்தமை
மின்னுநூல் விட்டுசித்தன் விரித்தஇப்
பன்னுபாடல் வல்லார்க் கில்லை பாவமே. (3)

(யாதவர்கள் ஆனந்தமாகப் பாடுவது.)

ஆனந்த மானந்த மாச்சுதே நந்த
கோபன் மகனைக் காண வாய்ச்சுதே
ஆயர் குலத்திற் கெல்லாம்
அதிர்ஷ்டம் பிறந்ததே (ஆ)

சிங்கார தோரணங் கட்டுவோம் எங்கும்
மங்கள வாத்தியங்கள் கொட்டுவோம்
சங்கநாதம் செய்து சர்க்கரை வழங்குவோம் (ஆ)

மாதவி :—இன்னுமா அலங்காரம் முடியல்லே! எசோதை குழந்தைக்குத் தொட்டில் போட்ராளாம். நாழியாய்விட்டது. சீக்கிரம் வாருங்கள்.

கோபி :—இதோ வந்துட்டேம்மா !

வேணி :—நான் அப்பவே தயாராயிட்டேனே !

கோபி :—எசோதா ! உன் பாக்யமே பாக்யம். குழந்தேன்ன இப்படியல்லவா இருக்கணும்! அவன் கண்ணைப் பார்த்தால் கண்ணு என்று பெயர் வைக்கலாம்போலிருக்கு.

மற்றவர்கள் :—ஆமாம் ! அப்படித்தானிருக்கு.

எசோதை :—உங்களிஷ்டப்படியே கண்ணு ! கிருஷ்ணு என்று பெயரிடுகிறேன்.

ஒரு கிழவி :—எசோதா ! குழந்தையின் வலக்காதில் பெயரைச் சொல்லி தொட்டிலில் விடு.

எசோதை :—ஆகட்டம்மா ! கிருஷ்ணு ! கிருஷ்ணு ! கிருஷ்ணு ! (தொட்டிலில் விடுதல். ஓசை கேட்பது.)

தாலாட்டு—பெரியாழ்வார் திருமொழி.

மாணிக்கங் கட்டி வயிர மிடைகட்டி
ஆணிப் பொன்னாற்செய்த வண்ணச் சிறுத்தொட்டில்
பேணி யுனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே தாலேலோ வையமளந்தானே தாலேலோ ! (1)

சங்கின் வலம்புரியுஞ் சேவடிக் கிண்கிணியும்
அங்கைச் சரிவளையும் நாணு மறைத்தொடரும்
அங்கண் விசும்பி லமரர்கள் போத்தந்தார்
செங்கட் கருமுகிலே தாலேலோ தேவகிசிங்கமே தாலேலோ. (2)

(இங்கு ஒரு கோபி பாடும் தனிப்பாட்டு.)

எசோதா :—ஆலத்தி கொண்டாருங்கள்.

கோபிகள் :—இதோ வெச்சிருக்கோம்மா.

(எல்லோரும் சேர்ந்து ஆலத்திப் பாட்டுப் பாடுதல்.)

மங்களம்—ஸ்ரீராகம்

பல்லவி

செங்கமலக் கண்ணனுக்கு மங்களம் பாடுவோம் (செ)

அநுபல்லவி

பங்கயத்தாளனுக்குப் பார்புகழ் லோலனுக்கு
சங்கை தவிர்க்கவந்த மங்காத ஜோதிச்சுடர் (செ)

சரணம்

திகட்டாத தெள்ளமுத தீங்கனி வாயனுக்கு
இகபரவின்பம் தரும் எதுகுலபூஷணா (செ)

(யாதவர்களும் கிருஷ்ணனும் மாடு மேய்த்தல்)

கண்ணன் :—குழலூதுதல். அதையே பாடுதல்.

பாட்டு

மாடுகன்று மேய்த்திடுவோம் மகிழ்ச்சியாக தோழரே!
ஓடிடாமல் மடக்கித்துரத்தி யோட்டிமரத்தில் கட்டுவோம்
ஆடைத் தயிருடன் பலஊறுகாய் வகைகளும்
ஓடைநீரில் புசித்துஉள்ளக் களிப்புடனே பாடுவோம்

யாதவன்:—டேய்! இந்த கண்ணன் பய இத்தினியுண்டு மூங்க கொழலே வச்சிகிட்டு இண்ணுத்தான் ஊது ஊதுன்னு ஊதராண்டா: அத்தே கேட்டுகிணு மாடுங்கல்லா அவன் பின்னாலேயே ஓடுதுபார்ரா: அவன் இன்னு மந்திரங் கிந்திரம் போட்டுட்ரானு.

மற்றொருவன் :—நீ இண்ணதாஞ் சொல்லு. அந்த கிஷ்டன் மூஞ்சே பாத்தா ஜிலு ஜிலு ஜிலு ஜிலுன்னு மினுக்குதுடா! இந்த கிஷ்டன் பய நேத்தி காத்தாலே தான் பறந்தாபேலக் கீது இதுக்குள்ளார இத்தினி பெரியவனுயி நம்பளோடேயே மாடு மேய்க்க வந்துட்டானேடா! இன்னு ஆச்சிரம் பாத்தியாடா....டேய்! டேய்! மொட்டகொம்பு பசு ஓடுதுடா! ட்ருடுர்....பிடி....பிடி....

ஒரு பாட்டு

காளேங்களா, கடேரிங்களா
சண்ணன் பாட்டு கேட்டு ஓட்ரீங்களா
ஓடாதேங்கோ ; ஒளியாதிங்கோ,
ஒதேகிதே வாங்காதே ஓடியாந்திடிங்கோ.

வசனம்

அடே கண்ணு! ஓடாதே, நில்லு. மாடெல்லாம் ஒன் பின்னாலே ஓடியார்து....டுர்ரே.

கிருஷ்ணன்:—தோழர்களே! சூரியனும் அஸ்தமிக்கபோருன். நாம் எல்லாம் வீட்டுக்கு போகலாம். நீங்க எல்லாம் என் கூட வாருங்கோ எங்கம்மாவை கேட்டு நிறைய பக்ஷணம் வாங்கிதறேன்.

யாதவர்கள் :—டே! டே! கிஷ்டன் வூட்லே பக்ஷணம் குடுக்கிறாங்களாம் வாங்கடா.

(வீடு திரும்பிய பின்னர்)

எசோதை :—கிருஷ்ணு! கிருஷ்ணு! வா! வா! ஒளியாதே! மறையாதே. என் கண்ணல்ல. வாடா ராஜா....ஐயோ! மறுபடியும் மறைந்து விட்டாயே! ஆ! அதோ கிருஷ்ணன் வந்துவிட்டான்.

மாயக்கிருஷ்ணனே நீ எங்கு மறைந்தாய் மாதவா!
உன்னை நேயமுடன் தேடியலேந்தேன் வா வா யாதவா!
நந்தகுமாரா வா வா! நவநீதசோரா வா! வா! (மா)

ஆயர்க்கொழுந்தே வாவா! என்னுவிக்கமுதே வாவா
ஆனிரைமேய்த்த செல்வனேநீ அன்பாய் வந்திடாய் (மா)

வசனம்

கண்ணு! ஓடாதே! நில்லு. இதோபாரு. இங்கேவா! இங்கே வந்தால் என்ன தருவேன் தெரியுமா!

பாட்டு

கண்ணுவாடா! கண்மணியே கேசவமுராரே
கிருஷ்ணுவாடா என்துரையே மாதவமுராரே (க)

காய்ச்சிய பாலுந்தரேன் கற்கண்டு வெண்ணெதரேன்
கட்டித் தயிருடனே கனிவகையுந் தந்திடுவேன் (க)

அப்பங் கலந்தலட்டு அக்காரம் பாலில் கலந்து
ஒப்பிலாச் சிற்றுண்டியும் சீடையுடன் நான்தருவேன் (க)

கிருஷ்ணன் :—அம்மா! பக்ஷணங்கள் எனக்கு மட்டுமா! கோபாலர்க்களுக்கு கடயாது?

எசோதை :—கண்ணு! எல்லாருக்கும் இருக்கு. கூப்பிடு. இன்று நீ பிறந்த நாளல்லவா! உன் தோழர்களுக்கெல்லாம் கொடுத்து நீயும் சாப்பிடு; வாடா ராஜா! (முத்தமிடல்)

கிருஷ்ணன் :—வாருங்கோ! கோபாலர்களே! வாருங்கோ; பக்ஷணம்! பக்ஷணம்!

கோபாலர்கள் :—கண்ணு! டேய்! டேய் கண்ணு! எனக்கு இன்னுங் கொஞ்சண்டா! எனக்குடா!

(எல்லோரும் கொட்டை விட்டும் சுப்புக்குட்டியும் சாப்பிடுவது, தட்டு முட்டுகளை உருட்டுவது.)

எல்லோருமாக சேர்ந்து கோரஸ்—பாட்டு.

தேவாதிதேவ கிருஷ்ணு! ஸ்ரீவாஸுதேவ கிருஷ்ணு!
தேவகிபால கிருஷ்ணு! ஸ்ரீவேணுலோல கிருஷ்ணு!
மாயாவதார கிருஷ்ணு! மனமோகனுங்க கிருஷ்ணு!
ச்யாமளரூப கிருஷ்ணு! ஜ்யோதிப்ரதாப கிருஷ்ணு!

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாக்கி ஜேய்!

1938-ஆம் ஸெப்டம்பர்மீ 7-ஆம் தேதி

அன்று மாலே 6-30 மணிக்கு, சென்னையிலுள்ள அகில இந்திய ரேடியோவில் நமது ஆசிரியை ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகியம்மாள், தாமே கவனஞ் செய்துள்ள அடியிற்கண்ட பாடல்களைப் பாடுவார்.

1. ராகம்—மாயமாளவகௌள: தாளம்—ரூபகம்.

பல்லவி.

ப்ரோசுடகு வேறெவரு பரம பாவன ராமா (ப்)

அனுபல்லவி.

காசினைன நீவேகாக, கைவிடிசின நீவேகனு (ப்)

சரணம்.

ரகுவம்சோத்தாருடா ரமணீயகாத்ருடா
பகலேகசந்தவில்லி நகுமோமுதோ நன்னு. (ப்)

—சுகந்தபுஷ்பம் - பக்கம் 74.

2. ராகம் : சங்கராபரணம்—ஆதி தாளம்.

பல்லவி.

கருணநிதே கமல லோசன! கருணிஞ்சவைய்யா
கரிராஜபோஷா! (க)

அனுபல்லவி.

தருணினிமுர வினிதயதோனு
வரமிச்சி காசின பரம தயாள (க)

சரணம்.

மந்தகாஸவதன வாரிஜசரண!
அந்தமைன அரவிந்தமுகலோலா
சிந்ததீர்ச்சி ப்ரோவ ஸ்ரீ வாசுதேவா!
பந்தமேலராரா, சுந்தராங்க தீரா. (க)

—சாமளநாதன் - பக்கம் 158.

3. அஸாவேரி ராகம்—த்ருபுடை தாளம்.

கானல் நீரல்லவோ மானிட வாழ்க்கை!
கருத்திலறிவதில்லையே (கா)

ஹீன ஜென்மந்தன்னை ஹீன மென்றறியாமல்
வானக் கோட்டைகள் கட்டி வாழ்க்கையை நம்பாதே (கா)

தோன்றுவன வெல்லாம் தோற்றத்தில் பலியாது
தோன்றிய தோற்றமே தோல்விக்குத் துணையாம் (கா)

கிட்டாத பொருள் தன்னைக் கிட்டிட ஆசை கொல்லும்
எட்டியதாய் எண்ணி ஏங்கி ஏமாறுதே (கா)

நாடுவ தொன்றும் நடப்பது ஒன்றும்
நாடகமாம் இதை நன்கறிவாய் நெஞ்சே (கா)

மானிலமளந்திட்ட மாயாவதாரனின்
ஊனமில் அருளொன்றே உற்ற பெருந் துணை (கா)

அஞ்ஞான இருள் தன்னை அகற்றி யுன் வாழ்க்கையை
சுஞ்ஞான ஒளி பெற்றுச் சுகமுறுவாய் நெஞ்சே.! (கா)

—மாயப்ரபஞ்சம் - பக்கம் 41.

4. ராகம்—சஹானா ; தாளம்—ரூபகம்.

பல்லவி.

மொரவினலேதா நீரஜாக்ஷ நாது (மொ)

அனுபல்லவி.

மறவக இதி சமயமவுனு ! பிருதுஜேஸே வேளகாது
கருணாசமுத்ரா மனஸுசு கரிகிவேக ப்ரோவராரா (மொ)

சரணம்.

புவனபிதாயனிபேரு கலிகினபுருஷோத்தமா
பவமு தீர்சி ப்ரோவநின்னு விடசிப்ராதுகுன்னதா பலுகு
தவமுனுலஹ்ருதயமுனுண்டே! ஸரஸ கோதா நாயகா !
நவரத்னக்ரீடதரா ! நாமொரவினி வேக ரார. (மொ)

—சாமளநாதன் - பக்கம் 362.

5. ராகம்—ஸாவேரி : தாளம்—ஆதி.

(" திருத்தணிகை மலையில் "—என்ற மெட்டு)

பல்லவி.

மலர் மங்கையே ! புவன ரக்ஷகியே !
மனக் குறையைத் தீராய் கண்பாராய்! (மலர்)

அனுபல்லவி.

அலகில் வினைகளை நான் பலவிதம் செய்துள்ளம்
கலங்குகின்றேன் கதி இலை யுன்னை யன்றியே (மலர்)

சரணம்.

வகை யறியாமலே திகைத்திடும் ஏழைக்குன்
நகை முகங் காட்டி என்னகத் துயர் நீக்கிட
ஜகதோத் தாரகி ! பகைவர்போல் பார்த்திடல்
தகுமோ ! உனக்கிது தருமந்தானோ ! (மலர்)

—வாழ்க்கையின் நாதம் - பக்கம் 70.

6. ராகம்; அடாணு—தாளம்: ரூபகம்.

பல்லவி.

மன்னிஞ்சி ப்ரோவுமையா மரகதாங்கனு! நாது
லெக்கலேனி தப்புலன்னி சக்கதனமுதோ ஜூசி (ம)

அனுபல்லவி.

கன்னதல்லி தன்றியன்ன கனிகாமுன பாந்தவுலு
அன்னியு நீவேயனி நெர நம்மியுன்னானு க்ருஷ்ணா! (ம)

சரணம்.

ஜன்மிஞ்சின நாடிமொதலு சதிருக்மிணீ ரமண நீது
ஜலஜதள பாத முலனு சந்ததமு பட்டினானு
மன்மதரூபுடைனஸ்ரீ மங்கள கோதா நாயகா!
மதிலேக நேஜேஸின பாப க்ருத்யமன்னியுமறசி வேக. (ம)

—சாமளநாதன் - பக்கம் 358.

7. சுருட்டி ராகம்—ஆதி தாளம்.

பல்லவி.

பொறுமையே உன்னைக் காக்கும் அதே உன்றன்
பெருந்துயர்தனை நீக்கும் (பொ)

அனுபல்லவி.

வறுமையும் துன்பமும் பிறவியின் நிழலாம்
மரும மறிந்து நல்லறிவு கொள்வாய் உயர் (பொ)

சரணம்.

பகைமையும் கோபமும் பாபக் குன்றமல்லவோ
இகபர மிரண்டிலும் இழிவுறச் செய்திடும்
ஜகமளந்தோன் பதம் சரண் புகுந் தனுதினம்
அக முருகத் துதித்தால் தகர்த்திடும் அனைத்தையும். (பொ)

—மாயப்ரபஞ்சம் - பக்கம் 167.

8. ராகமாலிகை.

ஆனிரை மேய்ந்தாட ஆச்சியர் மகிழ்ந்தாட
வானவர் துதித்தாட வளர்கன் றோடியாட
தேனதாய் குழலையூதும் கோபாலன் சிரமாட
கானத்தின் இசையாட மானிலம் முற்றுமாட. (1)

நெத்தியில் திலகமாட நீலமயில் தோகையாட
முத்துமாலை அசைந்தாட முற்றிலும் அணிகளாட
சுற்றிலும் பாலராட சொகுசு பீதாம்பரமாட
ஒத்தை உருமாலாட உல்லாஸ கண்ணனாட. (2)

—ஜீவியச்சுழல் - பக்கம் 90.

27

'சமயத்திற்கு முன்பே சரியாக வரும் சுரேந்திரன் ஏன் இன்று இன்னும் வரவில்லை? என்ன காரணம்?' என்று டைரெக்டர் வினவினர்.

'என்ன காரணமோ தெரியவில்லை.' இத்தனை நேரம் பார்த்து விட்டு இப்போதுதான் நிர்மலாதேவி, தன் காரையே அனுப்பி இருக்கிருர்கள். சீக்கிரம் வந்து விடுவார்—என்று உதவிடைரெக்டர் பதில் கூறினர்.

நிர்மலா அந்தப் பங்களாவின் மெத்தை வராண்டாவில் நின்று வீதிப் பக்கமே பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுடைய யோசனைகள் ஒன்றிரண்டல்லாமல் பற்பல விதமாகச் சிதறுண்டு கிடந்தன. "ஏன் இன்னும் கார் வரவில்லை?" என்று எண்ண மிட்டுக் கொண்டிருக்கையில் கார் வந்து பங்களாவின் முன், நிற் பதைக் கண்டாள். சுரேந்திரன் மிகவும் வாடி வருந்திய முகத் துடன் இறங்கி வருவதைக் கண்டதும் என்ன உடம்போ என்று சற்றுத் திகைத்தவாறு ஹாலுக்குள்ளிருக்கும் தன் விடுதிக்கு வந்தாள்.

சுரேந்திரன் ஒரு மாதிரியான தோற்றத்துடன் வந்து எப் போதும் உட்காரும் தன்னிடத்தில் உட்கார்ந்தான். அச் சமயம் எல்லோரும் காப்பி பலகாரம் சாப்பிடப் போய்விட்டதால், சுரேந் திரன் வந்ததை யாரும் கவனிக்கவில்லை. நிர்மலா அவ்விடம் வந்து, "என் இன்று தாமதம்? உடம்புக்கு ஒன்றுமில்லையே! அந்தப் பாட்டு, பாடமாக வில்லையே என்று கவலையா?"—என்று கேட்டாள்.

சுரேந் :—நிர்மலா! கிராமபோன் உலகத்தில் சங்கீத மூலம் உன்னல் பரிமளிக்கின்றேன். இந்தச் சினிமா உலகத்திலும் உன்னல் பரிமளிக்கலாமென்றும், என் கஷ்டம் விடுதலையாகிவிட்டதென்றும் எண்ணினேன்....இதோ இக் கடிதத்தைப் பாரு. உனக்கே யாவும் விளங்கும்—என்று கூறியபடியே கடிதத்தை அவளிடம் கொடுத் தான்.

நிர்மலா கடிதத்தை வாங்கித் தனக்குள் படித்துக்கொண்டாள். சுரேந்திரனை ஒரு தரம் பார்த்தாள். அக் கடிதத்திலுள்ள விஷயங்களின் உணர்ச்சி முற்றும் சுரேந்திரனின் முகத்தில் பிரதிபிம்பிப்பதைத் தெரிந்துகொண்டாள். சுரேந்திரன் எதுவும் பேசாமல் கவலையே வடிவமாய் உட்கார்ந்திருந்தான். நிர்மலாவுக்கு என்ன பேசுவது என்பதே தெரியவில்லை. அவளும் ஒரு க்ஷணநேரம் அப்படியே பிரமித்துவிட்டாள்.

இதற்குள் காப்பி சாப்பிடப் போயிருந்தவர்களெல்லாம் வந்து விட்டார்கள். ஒத்திகையும் ஆரம்பித்துவிட்டது. அதற்குமேல் அவர்களின் சம்பாஷணையும் முடிந்துவிட்டது. அன்று சுரேந்திரன் மனத்தில் உத்ஸாகம் இல்லாமலேயே ஒத்திகையில் நடித்தான். சுரேந்திரனுடைய நடிப்பு அன்று மிகவும் மோசமாயிருந்ததை நிர்மலா அறியாமலில்லை. இத்தனை நாள் ஒத்திகையில் வெகு நன்றாக நடித்த சுரேந்திரன் இன்று நடிப்பே தெரியாதவன்போல் நடிப்பதைப் பார்க்க டைரெக்டருக்குக் கோபம் வந்துவிட்டது. சற்றுக் கடுமையான குரலில், "இதென்ன நீ என் பொறுமையைச் சோதிக்க நினைத்தாயா? உன்னுடைய நடிப்பையும் பாட்டையும் இதுகாறும் சரியாகச் செய்தும் நீ இன்று வேறு யார் யாருடைய பாடங்களையோ ஒப்பிக்கிறாயே! உனக்கென்ன மூளைக் கலக்கமா? நானும் இதுவரையில் இரண்டொரு சமயத்தில் உன் மாறுதல்களைக் கவனித்திருக்கிறேன். அப்போதெல்லாம் அதை நான் லக்ஷியம் செய்யவில்லை. எனக்கு வந்துள்ள பல கடிதங்களின் உண்மையும், நேரில் சொல்லிய வார்த்தைகளின் உண்மையும் இப்போதுதான் தெரிகிறது. ஷூட்டிங் ஆரம்பிப்பதற்கு இன்னும் இரண்டு தினங்கள்தான் இருக்கின்றன. இத்தனை சமீபத்தில் இம்மாதிரி செய்தால் என்ன செய்வது? முதலாளியின் பணமும் என்னுடைய சிரமமும் சமுத்திரத்தில் கரைத்த சர்க்கரையைப் போலத்தான் முடியும்போலிருக்கிறது" என்று அவர் சிடு சிடுப்பாய்ச் சொல்வதைக்கேட்ட சுரேந்திரனின் மன வேதனை ஏற்கெனவே உள்ளதைக் காட்டிலும் ஆயிரம் பங்கு அதிகரித்து விட்டது. "சார்! சார்! டைரெக்டர் சார்! நீங்கள் சொல்வது ஒன்றுமே புரியவில்லையே! நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே! என்

நீங்கள் ஏதேதோ வித்தியாசமாகச் சொல்கிறீர்களே ?" என்று அவன் கேட்பதெல்லாம் அவருடைய காதில் விழவே இல்லை; தம் போக்காகச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்.

நிர்மலாவுக்கும் மனத்தில் பெரிய குழப்பமும் திகிலும் உண்டாகியது. எதற்காக இவர் திடீரென்று இப்படி காய்ந்து விழுகிறார் என்பது தெரியாது தவிக்கிறாள். மற்ற நடிகர்களில் பலருக்கு இந்தச் சமயம் பெரிய சந்தோஷமாயும் திருப்தியாயுமிருந்ததால், ஒருவர் முகத்தையொருவர் பார்த்துக்கொண்டே குசு குசுவென்று பேசி நகைக்க வாரம்பித்தார்கள். இதைப் பார்க்க சுரேந்திரனின் உள்ளம் அனலிடைமெழுகென்று உருகவாரம்பித்தது.

டைரெக்டருக்கு முன்பு இச்சிறிய நடிகர்கள் எல்லாம் என்ன செய்ய முடியும்? எனினும் சுரேந்திரன் மிக்க வணக்கத்துடன், "சார்! என்ன காரணத்தினால் இம்மாதிரி சொல்கிறீர்கள் ? யார் தங்களுக்கு என்னைப்பற்றி என்ன எழுதியிருக்கிறார்கள்? என்ன சொல்லி இருக்கிறார்கள் ? தயவுசெய்து சொல்லுங்கள்" என்று கெஞ்சிக்கேட்டான்.

அதே சமயம் முதலாளியும் டைரெக்டரிடம் வந்து "என்ன சமாசாரம் ? பாதி ஒத்திகையில் இம்மாதிரி கலவரம் வந்தால், நடிகர்களின் மனம் கலங்கி நடிப்புக் குறைந்துவிடாதா ? என்ன காரணம்பற்றி நீங்கள் இப்படிப்பேசுகிறீர்கள்" என்று கேட்டார்.

டைரெக்டர்:—நான் ஒன்றும் அநியாயமாய்ச் சொல்லவில்லை. இன்று இவர் பாடம் சொல்லிய அழகை நீர் கவனிக்கவில்லையா ? இதோ! இக் கடிதத்தைப் பாரும்—என்று ஆத்திரத்துடன் ஒரு கடிதத்தை வீசி எறிந்தார்.

முதலாளி, அதை எடுத்துப் படித்துவிட்டு முகம் சுளித்துப் போய் கடிதத்தைக் கையில்வைத்துக்கொண்டே 'நிர்மலா நீயாவது எங்களுக்கு ரகஸ்யத்தைச் சொல்லவேண்டாமா ? பணம் என்றால் அதை நீ கிள்ளுக்கீரையாய் நினைத்துவிடலாமா ! இதோ இக் கடிதத்தைப் படித்துப்பாரு' என்று நிர்மலாவின் கையில் அதைக் கொடுத்தார்.

சுரேந்திரனின் இதயம் படபடவென்று துடிக்கிறது. நிர்மலா கோபத்துடன் அந்தக் கடிதத்தை வாங்கிப் படித்தாள். தயங்காமல் உடனே அதைச் சுரேந்திரனின் கையில் கொடுத்தாள். சுரேந்திரன், கைகள் வெடவெடவென்று நடுங்கியபடியே, கடிதத்தை வாங்கிப் படிக்க வாரம்பித்தான்.

"அன்பார்ந்த டைரெக்டர் சார்!

முன்பின் தெரியாதவனும் சம்பந்த மில்லாதவனு மான நான் இக்கடிதத்தை எழுதுவதால், உமக்கு வியப் பின் மீது வியப்பாகவிருக்கலாம். நானும் கூடிய விரைவில் ஒரு டைரெக்டராக வரப்போகிற நிலைமையிலிருப்பவன்; ஆதலால், டைரெக்டர்களின் பெயருக்கு ஹானிவராத படியும் அபிவிருத்திக்கு வேண்டிய நன்மைகளையும் நாம் தேடிக்கொள்ள வேண்டியது அத்தியாவசியமல்லவா! ஆகையால் தான் இதை எழுதுகிறேன்.

சார்! இதுவரையில் நீர் பெயரளவில் பல படங்கள் எடுத்திருந்தபோதிலும் ஒன்றுவது வெற்றிபெற்று உமக் குக் கீர்த்தியைக் கொடுக்கவில்லை என்பதை நீரே மறுக்க முடியாது. இந்தப் படத்தில்தான் நீர் முழு வெற்றியை யும் எதிர்பார்க்கிறீர் என்பதும் எனக்குத் தெரியும். இந்தக் கதை ஓர் நடிகையினுல் எழுதப்பட்டதென்று முதலாளி பெருமையடித்துக் கொள்கிருர். ஆனுல், தேவதாசிகளின் குலத்தைப்பற்றிக் கேவலமாயும் இழிவுபடுத்தியும் தூற்றி யும் இக்கதையில் கொண்டுவந்திருப்பதால், தேவதாசி களின் எதிர்ப்பு மிகவும் பலமாக விருக்கப் போகிற தென்பது ஞாபகம் இருக்கட்டும்.

இது ஒருபுறமிருக்க, நீர் கதாநாயகனுகத்தேர்ந்தெடுத் துள்ள மனிதனின் யோக்யதையையோ, குணவிசேஷத் தையோ, தேக நிலைமையையோ நீரும் உமது முதலாளி களும் சற்றும் கவனிக்கவில்லை. அந்த மனிதன்மீது எனக்கு யாதொரு விரோதமோ, பகையோ கிடை யாது. அவரைப்பற்றி எனக்கு நேரில் பழக்கமும் இல்லை. எனினும் அவருடைய சகல விஷயங்கள் மட்டும் எனக்கு வெகு நன்ருகத் தெரியும்.

அந்த மனிதன் சற்றும் மான அவமானமின்றியும் பாப புண்ணியத்திற் கஞ்சாமலும் தன்னைப் பெற்ற பிதா வசூலித்த சர்க்கார் பணத்தைத் திருடி தாறுமாறாக துர் வினியோகம் செய்ததுமல்லாமல், அந்தப் பணத்தைத் தகப்பனுரே திருடியதாக சகலவிதமான சாக்ஷிகளையும் தானே ஜோடித்துப் பெற்ற தகப்பனைச் சிறைக்கு அனுப்பிவிட்ட மகா தீரபுருஷன்; அவன்பிதா இன்றும் சிறையில் தவிக்கின்ருர். ஒரு கீர்த்தி போதுமா?

இச்செய்கையிலிருந்து பணத்திற்காக அம்மனிதன் எதை வேண்டுமாயினும் செய்யத் துணிந்தவன் என்பது விளங்குகிறது. பணத்தின் பேராசையினுல் முதலாளிக்கோ, உமக்கோ அல்லது நடிகர்களுக்கோ எந்தச் சமயம் எத்தகைய ஆபத்தையும் உண்டாக்கக்கூடும். அந்த விஷயத்தில் உஷாராயிருங்கள்.

மேலும் அவன் தேக ஸ்திதி என்ன தெரியுமா ?

அடிக்கடி சித்த ஸ்வாதீனமற்றுவிடும். தாறுமாருகப் பேசிக் கூத்தடிப்பான். சிலசமயம் காக்காய் வலிப்புவந்து உதைத்துக்கொண்டு விழுந்துவிடுவான். அவனுடைய பாட்டனுக்குப் பயித்தியம் பிடித்திருந்ததாம். அதோடு தான் அவர் இறந்தாராம். அதனுல்தான் இவனுக்கும் இம்மாதிரி வந்திருப்பதாயும், இன்னும் நீடித்து முற்ற வில்லை என்றும் அவனுடைய சொந்த மனிதர்களே சொல்கிருர்கள்.

இத்தனை லக்ஷணங்களிலுள்ள மனிதன் நடித்து உமக்கு எத்தகைய கீர்த்தியைக் கொடுப்பானென்று பாரும். உமது பெயர் கெடாதவிதம் பார்த்துக்கொள்ளும். தொழிலாளி என்ற முறையில் இதை நான் எழுதுகிறேன். வித்தியாசமாக நினைக்கவேண்டாம்.

இங்ஙனம்,

உண்மை விளம்பி."

இந்தக் கடிதத்தைப் படித்தவுடனே உண்மையில் சுரேந்திரனின் மூளை குழம்பிப்போய்விட்டதென்றே சொல்லலாம்,

"ஹா கடவுளே!" என்ற ஒரே வார்த்தை அவன் வாயி லிருந்து வந்தது. அடுத்த நிமிடம் சற்றுத் தெளிவுபெற்றான். அவன் மனக்கொதிப்பின் வேகத்தை அவனால் அடக்கமுடியவில்லை; வாய் திறந்து பேசவும் முடியவில்லை.

கண்ணில் ஜலம் அருவிபோல் ஓடுகிறது. தன்னிரு கைகளையும் உயரத் தூக்கி எல்லோருக்கும் ஒரு கும்பிடுபோட்டான். அடுத்த விநாடியே திரும்பிப் பார்க்காமல் பித்தன்போல் தடதடவென்று வீதியை நோக்கி நடக்க வாரம்பித்தான்.

அங்கிருந்த எல்லோருக்கும் ஒன்றுமே விளங்கவில்லை. யார் யார் மனோபாவம் எப்படி இருக்கிறதோ அதேமாதிரி தோன்ற வாரம்பித்தது. டைரெக்டரும் சில நடிகர்களும் தன் குட்டு வெளி யாகி விட்டதனால்தான் அவன் ஓசைப்படாமல் இப்படி ஓடி விட்டான். நிற்பதற்கு முகமில்லை என்று நினைத்துக் கூற வாரம்பித்த னர். நிர்மலாவின் இதயமோ துடிக்கின்றது. முதலாளியின் மனம் இப்படியுமின்றி அப்படியுமின்றித் திரிசங்கு சொர்க்கம்போல் அலையத் தொடங்கியது. ஒத்திகை பாதியில் நின்றது. அங்குக் கலவரமும் உண்டாகியது.

28

சுரேந்திரன் தத்தளித்த மனத்துடன் வீதியில் நடக்கும் பரிதாபத்தைப் பால்கனியிலிருந்து பார்த்த நிர்மலா வுக்கு மிக்க பயமும் திகிலும் பிடித்துக்கொண்டன. கண்டிப்பாய் இது ஏதோ விபரீதத்தில்தான் கொண்டுவிடப் போகிறது. மோட்டாரும், இதர வண்டிகளும் போவதுகூடத் தெரியாமல் நடந்துசெல்கையில் எப்படி விபத்து நடக்காதிருக்க முடியும்? இச்சமயம் நாம் எவ்விதம் பார்த்துக்கொண்டிருப்பது என்ற எண்ணங்கள் மாறி மாறி அவள் மனத்தில் போராட வாரம்பித்தன.

கடிதத்தில் கண்டுள்ள விஷயங்கள் உண்மையாக விருக்குமா? இத்தனை நாட்களாக நம்முடன் பழகும் மாதிரியில் இத்தகைய குணங்கள் இருப்பதாகச் சற்றும் ஊகிக்கக்கூட இடம் இல்லையே! அவருடைய தகப்பனார் சிறையிலிருப்பது இதுவரையில் தெரியாதே! "இல்லாது பிறக்குமா, அள்ளாது குறையுமா?" என்ற பழமொழியின்படி இந்தக் கடிதத்திலுள்ள விஷயங்கள் எல்லாம் வெறும் பொய்யாக இருக்கமுடியுமா?

இதில் ஏதோ விசேஷந்தான் இருக்கவேண்டும். எனினும் இச்சமயம் அவர் செல்லும் அலங்கோலத்தைப் பார்த்துக்கொண்டு நாம் சும்மா விருப்பது தருமமா? இல்லை! இல்லை!! அவருக்கு ஆபத்து நேராது பார்த்துக்கொள்வது என் கடமையல்லவா? என் உள்ளத்தைக் கொள்ளைக் கொண்ட உத்தம புருஷர் அவரல்லவா! தன் அன்பையும் எனக்கு அர்ப்பணம் செய்துள்ள மஹாபுருஷர் அவரல்லவா? எது எப்படியாயினும் அவரை நாம் இச்சமயம் தேறுதல் கூறித் தேற்றியே யாகவேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டதால், "நான் வருகிறேன்" என்று கூறிக்கொண்டே செல்ல வாரம்பித்தாள்.

இதற்குள் சற்று அதிகார தொனியில் டைரெக்டர் "நிர்மலா! நில்லு. எங்கே போகிறாய்? மீதி ஒத்திகைகள் நடக்க வேண்டாமா? போகிற ஜோரைப்பார்த்தால், தடபுடலாக விருக்கிறதே! நீ இங்கு எனக்குக் கட்டுப்பட்டவள் என்பது ஞாபகமிருக்கட்டும்" என்று சற்று முடுக்காகச் சொன்னார்.

இதைக் கேட்ட நிர்மலாவின் முகம் கோபத்தால் ஜ்வலித்தது. "சார்! அதிகமாகப் பேசவேண்டாம். உமக்கு நான் என்றும் கட்டுப்பட்டவளல்ல வென்பது ஞாபக மிருக்கட்டும். நிர்மலா ஏமாறுகிறவ ளல்ல. முக்கியமான கதாநாயகன் இல்லாமல் நீர் யாரைக்கொண்டு ஒத்திகையை நடத்த முடியும்? ஆகையால், நான் அநாவசியமாக இங்குத் தங்க முடியாது" என்று சற்றும் தாக்ஷண்யமின்றி முடுக்காகப் பதில் கூறினாள்.

டைரெக்டர் :—ஓகோ! நீ கட்டுப்பட்டவளல்லவா! உன் கீழ் எல்லோரும் பொம்மைகள் என்று பார்த்தாயா? கதாநாயகன்! பேச்சைப் பாரு. கதாநாயகனு அல்லது....

183026.

நிர்மலா :—நிறுத்தும். உம்முடைய அதிகப்பிரஸங்கித்தன ஆட்சிக்கு இது இடமல்ல. உமதுவேலை, நடிப்பு கற்றுத் தருவதும், அதை வெற்றிகரமாக முடிப்பதுந்தான். தெரிந்ததா! வீணாக உளற வேண்டாம்.

டைரேக்:—உளறுவது நீயா; நானா? இனிமேல் கதாநாயகன் அவனல்ல. அது ஞாபகமிருக்கட்டும். மணியாவது நானாவதுதான் கதாநாயகன்.

நிர்மலா :—சே! சில முதலாளிகள் சொல்கிறபடி நடப்பதில்லை என்று உலகத்தில் சொல்வது உண்மையாகிவிட்டது....முதலாளி! இதைப்பற்றி நீர் என்னிடம் வீட்டில் வந்து பேசிக்கொள்ளலாம். நான் இங்கு நிற்கமுடியாது—என்று கூறியவாறு சடக்கென்று வீதிக்கு வந்து, தன் காரை ஓட்டிக்கொண்டு கிளம்பிவிட்டாள்.

முதலாளி ஒன்றும் தோன்றாது விழிக்கிறார். தான் போட்டுள்ள பணம் வருமா? வீணாகப் போய்விடுமா? என்ற பயம் பிடித்துக்கொண்டது. "நிர்மலா! நிர்மலா!" வென்று அழைத்தும் அவள் லக்ஷ்யம் செய்யாது போய்விட்டதானது அவருடைய பயத்தை அதிகரிக்கச் செய்துவிட்டது. மற்ற சில்லரை நடிகர்களுக் கெல்லாம் ஏதோ பிழைப்புக் கிடைக்குமென்று எதிர்பார்த்து வந்ததற்குப் பிழைப்பில் மண் விழுந்துவிடுமோ என்ற பயமும்பீதியும் ஒருங்கே உண்டாகி விட்டன.

ஸ்டுடியோவை விட்டு வெளியே வந்த நிர்மலா வீதியில் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே வண்டியை ஓட்டிச் சென்றாள். பின்னால் வரும் ஓர் பெரிய மோட்டார் லாரி, 'பம்! பம்' என்று பலமாக ஹாரன் செய்தும் சுரேந்திரனின் கலக்கத்தில் அவனுக்கு ஒன்றுமே தெரியவில்லை. "நான் காருண்ய குணத்தையும், பரோபகார சிந்தையையும் முன்னிட்டுச் செய்த காரியத்தின் பலன் இப்படியா முடிவைக் கொடுத்தது? ஆம். கட்டாயம் இதை வேண்டுமென்றே எதிரிகள் செய்திருக்கிறார்களேயன்றி எந்த டைரெக்டரும் இவ்விதம் துணிந்து செய்யமாட்டான். இருக்கட்டும். பங்காரு! உனக்கு நான் செய்த நன்மைகள் உன்னால் தீமையாகக் கருதப்பட்டு, என்னைக்கொல்ல முயற்சித்தபோதிலும்

எல்லாம் வல்ல இறைவனின் கருணு விலாசத்தில் நன்மையாகவே பதிவாகி இருக்குமென்பதில் ஐயமில்லே. உன்னேயும் என்னேயும் என்னப்பன் பார்த்துக்கொள்வான்.”

என்று ஏதேதோ எண்ணமிட்டபடியே போகையில் மோட்டாரின் ஹாரனே எப்படிக் கவனிக்க முடியும்? பித்தன் போல் தள்ளாடி நடந்தவாறு செல்கையில், லாரி இவன் சமீபத்தில் வந்துவிட்டதைக் கண்டதும் ஜனங்கள், “ஐயோ! ஐயோ! ஒத்திப் போய்யா! ஒத்திப்போ! ஐயோ! லாரி வந்து விட்டதே!” என்று கத்தினர்கள். இமை கொட்டும் நேரத்திற்குள் இந்தக் கலவரத்தில் பின்னும் நிலே கலங்கி பிரமித்துவிட்ட சுரேந்திரன் தாறுமாருக ஓட வாரம்பித்தான். லாரியும் வெகு சமீபத்தில் வந்துவிட்டது. 50 மைல் வேகத்தில் காரை விட்டுக் கொண்டுவரும் நிர்மலா சுரேந்திரனின் எதிர்ப்புறமாகக் காரைத் திருப்பி ஓட்டிக்கொண்டு வந்து லாரியை நிறுத்தும்படி கையால் சமிக்ஞை காட்டிக் கொண்டே சுரேந்திரனே இழுத்துக் காரில் போட்டுக்கொண்டாள்.

இந்த அதிசயத்தைக் கண்ட ஜனங்களும் லாரிக்காரர்களும் அபாரமான வியப்படைந்துவிட்டார்கள். “இன்னும் ஒரு க்ஷண நேரம் தவறியிருப்பின், அந்த மனிதன் லாரிக்கு இரையாகி யல்லவோ கண் மூடியிருப்பான்? மோட்டாருடன் அந்தப்பெண்ணுங்கூட நசுங்கி இருப்பாள். நல்லவேளே மயிர்க்காலில் உயிர் கெட்டியா யிருந்துதான் தப்பினர்கள். என்ன தைரியம் அந்தப் பெண்ணுக்கு? ஒரு வலிவு மிகுந்த ஆண்பிள்ளேயை ஒரே இழுப்பாக இழுத்துக் காரில் போட்டுக்கொண்டுவிட்டாள் என்ருல், அவள் மனேவலிமை எத்தகையதா யிருக்கவேண்டும்?”....என்றெல்லாம் ஜனங்கள் பேசிக்கொண்டார்கள்.

காரில் சுரேந்திரனே இழுத்துத் தள்ளிக்கொண்டு தைரியமாக காரை ஒரு திருப்பு திருப்பி ஓட்டிக்கொண்டு செல்லும் நிர்மலா “உம். கடவுளின் கிருபை இல்லாதிருப்பின் இன்று உம்முடைய கதி என்னவாகி இருக்கும்? இப்படித்தான கண்மூடித்தனமாக நடப்பது? எத்தகையோருக்கும் உயிர் வெல்லமல்லவா?”....என்று கேட்டாள்.

அதிர்ச்சியினால் ஒரேயடியாய் பிரமை பிடித்து உட்கார்ந்திருந்த சுரேந்திரன் வண்டி நகர்ந்த பிறகும் வாய்பேசாது மவுனப் பதுமை போலானான். நிர்மலா மேற்கூறியவாறு கேட்டதும் பேந்தப்பேந்த விழித்துப்பார்த்தபடியே "நிர்மலா! நிர்மலாவா?...." என்று வியப்புடன் கேட்டான். நிர்மலாவும் பரிதாபத்துடன் "ஆம்! நிர்மலாதான். ஏன் ? எதற்காக இப்படி உலகமே முழுகிவிட்டதுபோல் நடந்துவந்தீர்கள் ? உயிர் போய் விடுமாயின் பிறகு...."

சுரேந் :—ஐயோ ! பிறகாவது பிறகு. நான் இனி உலகிலிருக்க லாயக்கற்றவன். எப்படியாவது என்னுயிர் போய் விடுமாயின், நான் பரம சந்தோஷ மடைவேனே ! நீ ஏன் என்னை வந்து இழுத்துத் தள்ளவேண்டும் ? மின்னல் கொடிபோன்றுள்ள நீ மேருவைப் போன்ற என்னை இழுத்துத் தள்ளுவதற்கு உனக்கு யானையின் பலம் எங்கிருந்து வந்தது? என் தலை விதிதான் உனக்கு அத்தகைய பலத்தைக் கொடுத்ததேயன்றி வேறில்லை. நிர்மலா ! நிர்மலா ! என்னை ஏன் நீ காப்பாற்ற வந்தாய் ? சொல்லு. சொல்லு."

நிர்மலா :—ஹா ! அப்படியா ஆய்விட்டது உமது மனம்? நான் ஏன் காப்பாற்றினேன் என்று கேட்கிறீர்? என் கடமையை நான் செய்தேன். தெருவில் இத்தகைய விபத்து எனது விரோதிகளுக்கு ஏற்பட்டிருப்பினும் நான் காப்பாற்றத் தயங்கமாட்டேன். குஷ்டரோகியாக விருப்பினும் நான் காப்பாற்றி விட்ட பிறகுதான் செல்வேன். அங்ஙனமிருக்க சுரேந்திரரே !........

சுரேந் :—நிர்மலா ! நிறுத்து ; நிறுத்து. உன் பரிசுத்தமான இதயத்தில் இதுகாறும் என்னையும் பரிசுத்தவான் என்றே எண்ணி இருந்தாய். கடவுளறிய நான் பரிசுத்தவான், நிரபராதி என்பதை நான் மறுக்கப் போவதில்லை. கடவுளும் மாற்றிவிட மாட்டார். ஆனால், பொதுஜனங்களிடையே என்னைப் பற்றிய அபிப்பிராயம் இம்மாதிரி பரவி வருவதை என்னால் சகிக்க முடியவில்லை. அதை நினைக்கையிலேயே என் தலை சுழலுகிறது.

நிர்மலா :—சுரேந்திரரே ! ஏன் வீணாக அலட்டிக் கொள்கிறீர்கள் ? எனக்கு ஒரு விஷயமும் தெரியாது. அதைத் தெரிந்து கொள்ளலாமாயின் விவரமாகச் சொல்லும்.

சுரேந் :—நிர்மலா! உன்னுடைய நிர்மலமான இதயத்தில் இப்போதே ஒரு கரும்புள்ளி விழுந்துவிட்டது. அதை இன்னும் ஸ்தாபிக்கவா வேண்டும். நிர்மலா! நான் நிரபராதி என்பதை நீ பூர்ணமாக நம்புவதாயின் சொல்லத் தடையில்லை. என்னை நம்பு கிருயா? சொல்லு.

நிர்மலா :—ஆம். முற்றிலும் நம்புகிறேன். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறல்லவா பதம். தைரியமாகச் சொல்லும்— என்ருள்.

அதன்பிறகே சுரேந்திரன் பழய கதைகளை எல்லாம் ஒன்று விடாமல் கூறி, "நிர்மலா! நான் விஷத்தை அமிருதமாக எண்ணி, பாம்புக்குப் பால் வார்த்ததுபோல் ஆபத்தில் உதவி செய்த தானது என் குடும்பத்திற்கே கொள்ளி வைத்துக்கொண்டதுபோ லாயிற்று. அந்தப்பாவியின் குணம் மாறிப் பாதகத்தை விளைவிப் பான் என்று தெரியாது நான் மோசம் போய்விட்டேன். இதைத் தவிர மற்ற எல்லாம் சுத்த பொய் என்பதைக் கடவுளறியச் சத்தியமாகச் சொல்லுகிறேன்.

நிர்மலா :—அடாடா! வீணை அபவாதத்திஞலா உங்கள் தகப் பனர் சிறைவாஸம் செய்கிருர்? ஐயோ! என்ன அநியாயம்! இக் கடிதத்தை வேண்டுமென்று யாரோ விரோதிகள் எழுதியதாகத் தெரிகிறதேயன்றி வேறில்லை. கடவுள் இருக்கிருர் என்று எல்லா வற்றிற்கும் நம்பும் நீங்கள் இதற்குமட்டும் ஏன் நம்பாது இவ்விதம் மனம் உடைந்து சாகவேண்டும்? தைரியமாகவிரும். அசட்டுத் தனமாக எதுவும் செய்துவிடக்கூடாது; தெரிந்ததா?

சுரேந் :—நிர்மலா! இந்த வீண் படாப்பழி அவமானம் வெடி வெடித்ததுபோல் ஸ்டூடியோவில் திடீரென்று பரவிவிட்டது. அங் கிருக்கும் அத்தனை பெயர்களின் மூலம் இச்செய்தி ஊரெல்லாம் பரவப்போகிறது. மனிதனுக்கு மானம் பெரிதா? பிராணன் பெரிதா? உள் ரகஸ்யம் யாருக்குத் தெரியும்? அதோடு என்னை இனிமேல் நடிக்கச் சேர்த்துக்கொள்ளமாட்டார்கள். இனி எனக்கு எந்த வகையிலும் தொழிலும் கிடைக்காது. நான் எப்படித்தான் உயிர் வாழமுடியும்? நிர்மலா!....நீயாவது ஜாக்கிரதையாக....

நிர்மலா :—சரி! சரி! உம் கருத்தை யறிந்தேன். உம்மை அவர்கள் நடிப்பிலிருந்து நீக்கிய பிறகு நான் அங்கு நடிப்பே னென்று கனவுகூடக் காணவேண்டாம். அதற்குத் தக்க வழியில் நடந்துகொள்ள எனக்குத் தெரியும். கடவுள் சரியான வழி காட்டு வார். நீர் கவலைப்படவேண்டாம். உமது வீடும் வந்துவிட்டது. நான் போய் வருகிறேன். நாளையதினம் உம்மை வந்து பார்க் கிறேன்" என்று கூறிக்கொண்டே சுரேந்திரனின் வீட்டு வாசலில் காரை நிறுத்தினாள்.

சுரேந்திரன் இறங்கி உள்ளே சென்றான். நிர்மலாவும் வந்த னங் கூறிப் பின் காரை ஓட்டிக்கொண்டுபோய்விட்டாள். சுரேந் திரன் வந்தது தெரியாது தன்னறையில் போய் படுத்துக்கொண் டான். நிர்மலா காரில் போகும்போது வழியில் தன் இனத்தார் களின் வீடு வந்ததும், திடீரென்று அவ்விடத்தில் போய் பார்த்து, நடக்கும் ஊழலை அப்படியே படத்திற்கு எழுதவேண்டும் என்ற எண்ணம் வெகு நாளாக விருந்ததால், நேரே அங்கு சென்றாள்.

29

நடைப்பக்கம் போகும்போதே ஏகப்பட்ட பேர்கள் பேசுங் குரல் கேட்டது. வீதியிலிருந்த வேலைக் காரி, "உள்ளே போம்மா! அல்லா அம்மாளும் வந்திருக்காங்க. போங்க" என்றாள். நிர்மலாவுக்கு உள்ளே போக இஷ்டமில்லை. வேலைக்காரியைத் தளுக்காய் அனுப்பிவிட்டுத் தான் ஒரு வினாடிப்பொழுது அங்கு நின்றாள். அப்போது உள்ளே யிருந்து வந்த வார்த்தைகள் அவள் காதில் கேட்டன. அதாவது:-

"நாம் இந்தச் சமயம் பேசாமலிருப்பதைப் போன்ற முட் டாள்தனம் வேறு எதுவுமே இல்லை. அந்த ஜாணுண்டு சிறுக்கி உயர்தரமான தேவதாசி குலத்திலேயே பிறந்துவிட்டு அந்தக் குலத் தைத் தூற்றித் தெருவிலிழுத்துச் சிரிப்பதென்றால், அதைவிட அவ

மானம் நமக்கு என்னவேண்டும்? நம் குல பழக்கவழக்கம் தர்மம் முதலியவற்றை அனேகவிதமான முறையில் கேவலப்படுத்தியும் இல்லாத பொல்லாதவைகளை நம் ஜாதியில் நடப்பதாகக் காட்டியும் அந்தக் கழுதை கதையெழுதி அதைப் படமாகக் கொண்டு வருவது, நாம் பார்த்துச் சகிப்பதா! இதை யொருநாளும் சகிக்க முடியாது. கட்டாயம் நாம் எல்லோரும் எதிர்த்துப் போராடி இதை எந்தவிதமாகவாவது தடுக்க முயற்சிக்கவேணும்" என்று ஆவேசத்துடன் ஒரு குரல் கிளம்பியது.

மற்றொரு குரல் பின்னும் உக்ரத்தோடு பேசத் தொடங்கி, "இதுமட்டுமல்ல. குல ஸ்திரீகளாம் குலஸ்திரீகள். அவர்களின் புருஷருக்குத் திருப்தியாக நடந்துகொண்டு அவர்களை வீட்டை விட்டு வெளியேறுதபடி பார்த்துக்கொள்ளக் கையாலாகாத கழுதைகள், தேவதாசிகளின் வீடு செல்லும் புருஷர்களை நிந்திக்கவும், தாசிகளைத் திட்டவும், கண்டபடிப் பேசி விளக்குமாற்றால் அடித்தும் காறியுமிழ்ந்தும் ஏசுவதுபோல் ஒரு காக்ஷி வரைந்திருக்கிறாளாம். எந்தக் கழுதை, தன் ஜாதிக்குத் தானே இத்தகைய அவமானத்தையும் இழுக்கையும் தேடிக்கொள்ளும்?

அதோடு எந்தக்குலப்பெண்ணுக்குத் தலை பதினாயிரமாகத் துள்ளி விட்டது நம் ஜாதியை விளக்குமாற்றால் அடிப்பதற்கு? புருஷரை ஏன் அந்தக் கழுதைகள் தாசிவீடு செல்ல விடவேண்டும்? புத்தி எங்கே போச்சு? அடக்கி ஆளக் கையாலாகாத முண்டங்களுக்கு ஒரு வீறுப்பா! என்ன பாடாவது பட்டு இந்தப் படத்தைத் தடுத்து விட்டுத்தான் மறுவேலை பார்க்கவேணும்" என்றது.

இவைகளைக் கேட்டுக்கொண்டு நிற்கும் நிர்மலாவின் ரத்தம் கொதிப் பெடுத்துக்கொண்டது. திரும்பி வந்த வேலைக்காரி எங்கே தான் நிற்பதை உள்ளே சொல்லிவிடுவாளோ என்ற பயத்தால் அவள் கையில் ஒரு ரூபாயை வைத்து மூடி, "பேசாமல் வீதியிலேயே நில்லு" என்று சைகையினால் காட்டிவிட்டுத் தான் ஓரமாக நின்று கவனிக்க வாரம்பித்தாள்.

வேறொரு குரல் பின்னும் அதிகரித்த உக்ரத்துடன் பேசத் தொடங்கி, "இந்த விஷயத்தில் நாம் வெறும் தீர்மானத்தை மட்டும்

செய்துகொண்டிருந்தால் போதாது. அந்த மானங்கெட்ட கழுதை நிர்மலாவுக்குச் சரியானபடி பாடங் கற்பிக்கும் வழியைச் செய்து விட்டால் எல்லாம் தானகவே நின்றுவிடுகிறது; அவ்வளவுதான். தெரியுமா? அதற்குச் சரியான வழியும் நான் கண்டுபிடித்து வைத்திருக்கிறேன். அதோடு இன்னென்று; அவள் வீட்டில் எந்த நல்லது கெட்டது வந்தாலும் நாம் எல்லோரும் கட்டுப்பாடாக எட்டிப்பார்க்காமலிருந்து ஓயிலாம்பாளின் கண்ணில் விரலைவிட்டு ஆட்டவேண்டும். கோவில் மானியமும் தர்மகர்த்தாவால் பறிமுதல் செய்யப்பட்டுவிட்டது. அந்த மரியாதை போய்விட்டதே ஓயிலாம்பாளுக்கு மிக்க விசனமாயிருப்பதாக ஜீவா சொன்னுள். சரியானபடி அவள் மூக்கை யறுத்துவிட்டால் கர்வம் தலைகீழாய் உருண்டுவிடும். சரிதானே" என்றது.

இன்னெரு குரல், "அந்தக் கழுதை, மானஹீனமில்லாமலே கௌரவம் கண்ணியமில்லாமல் கொள்ளையடித்துவிட்டு ஜெயிலில் கூழும் களியும் தின்றுகொண்டிருக்கும் கைதியின் மகன்மேலல்லவா கண் வைத்திருக்கிறதாம். இது என்ன அவமானம் பார்த்தாயா? குடியைக் கெடுக்கும் கோடாரிக் காம்பு என்பது இந்தப் பாவிக்குத்தான் சரியாயிருக்கிறது. குலத்திற்குப் பெருமை அளிக்க முன்வராத துஷ்டை இழிவுபடுத்த முன் வந்தால், யாரால் சகிக்க முடியும்? இன்னென்று நான் கேட்கிறேன்.

தேவடியாள் வீடு செல்லும் புருஷரின் மனைவிகளில் எத்தனையோ பேர்கள் அவன் தொலைந்தான் என்று சந்தோஷமாக இருப்பதோடு தேவடியாள்களுக்குமேல் நடத்தையிலிருக்கிறார்கள். இதையவளால் ஏன் வெளிப்படுத்தமுடியவில்லை? எந்த மனைவி அழுது சாவதை இந்தக் குடிகெடுத்த கழுதை பார்த்தது என்கிறேன்" என்று ஆவேசத்துடன் சொல்வதைக் கேட்ட நிர்மலாவுக்கு அதற்கு மேல் பொறுமையாய் இருக்கமுடியாது ஆத்திரம் உச்ச நிலைமையை அடைந்துவிட்டது.

திடீரென்று பாயும் புலிபோல் அக்கூட்டத்தின் முன்னல் ரணவீர சண்டியைப்போல் தோன்றி, "ஆஹ்ஹா! கூட்டமா போட்டு என் மூக்கை யறுக்கப் போகிறீர்கள்? உலகத்திலேயே காரி

யுமிழந்து கைகொட்டிச் சிரித்து குலமகள் வயிறெரிய சாபமிட்டுத் தூற்றும் குலம் உங்கள் தேவடியாள் குலத்தைவிட வேறு குல மிருக்கிறதா? வெகு உன்னத முறையில் ஆரம்பித்து உங்களைப் போன்ற சண்டாளர்களின் செய்கையால் மானமழிந்து பொரு ளீட்டுவதிலேயே நோக்கங்கொண்டு அலையும் பேய்க் குணத்தினுல் இன்று இந்நிலைமைக்கு அக்குலம் வந்துவிட்டது என்பதை உங்க ளால் மறுக்கமுடியுமா ?

பாபாத்மாக்களே ! என் மூக்கை மட்டும் அறுத்தாலும் சரி! என் தலையையே வெட்டிக் கொலை செய்தாலும் சரி! என் சரீரத் தில் ஆவி இருக்கும்வரையில் இந்தப் பாழாப்போன ஜாதியின் ஹீனத் தொழிலை வேரறுத்து அதைப் புதுப்பிக்க நான் கங்கணங் கட்டிக்கொண்டு செய்தே தீருவேன் தெரியுமா ? எந்தக் குலமகள் அழுவதை நான் பார்த்தேன் என்று கேட்கிறீர்கள்? அழுவது மட்டுமல்ல. தன்னருமைக் கணவரை உங்களுக்கு அடிமையாக்கி விட்டதோடு, தங்கள் பிராணனையும் உங்களுக்குப் பலியாக அனேகர் கொடுத்திருக்கிறார்கள்.

குலமகள், தேவடியாளைப் போல் வாழ்க்கை நடத்துவதாக உங்கள் ஊத்தை வாயால் பேசுகிறீர்களே! அந்தப் பாதகமும் உங்க ளால்தான் சில இடத்தில் நடக்கலாமேயன்றி வேறல்ல. அவர் களின் பொருளை நீங்கள் அபகரித்துக் கொண்டதன் விதியால் எங்கோ ஒருவர் இருவர் தாமும் கெட்டுப்போ யிருக்கலாம். இதனுல் எல்லாக் குலமக்களையும் சொல்வது உங்கள் திமிர் படைத் தத்தனமேயன்றி வேறில்லை. குலமக்களின் குடிகெடுக்கும் வேர்ப் புழுகு தேவதாசிகளின் ஜாதிதான் என்பதை எந்தக் கோவிலில் வேண்டுமாயினும் நான் சத்தியம் செய்வேன். நீங்கள் இல்லை என்று செய்வீர்களா? குப்பையில் விழுந்து புரளவேண்டாம்; ஒழுங்காக விருங்கள் என்று கூறுவது உங்களுக்கு எட்டிக் காயாகவா இருக் கிறது? எத்தனை பெண்களின் வயிறெரிந்து விடும் கண்ணீரை நீங்கள் பார்க்க வேண்டுமோ அதை நானே காட்டுகிறேன். அப்போதாவது உங்கள் மனம் இளகுமா? குற்றத்தை யறிந்து வருந்துமா? இக்கேடு கெட்ட செய்கையிலிருந்து திருந்துவீர்களா ?" என்று இவள் சரமாரியாகப் பேசுகிறாள்.

திடீரென்று நிர்மலா அங்கு வருவாள் என்பதை இவர்கள் அறியவில்லையாதலால், உக்ரத்தோடு வரும் இவளைப் பார்த்ததும் எல்லோருக்கும் திக்கென்று தூக்கி வாரிப்போட்டது. மேலும் இவள் விடாது தங்கள் மீது குற்றங் கூறித் திட்டுவதைக் கண்டு சகிக்க மாட்டாது அபாரமான ஆத்திரமும் பகையுங் கொண்டு வேட்டை நாய்கள் பாய்வதுபோல், நிர்மலாவின் மீது அத்தனை விழி களும் ஒரேகாலத்தில் பாணம்போல் பாய்ந்தன.

அடுத்த நிமிடமே சிலர் கண்ணு மண்ணும் தெரியாத கோபத் தினால் நிர்மலாவின் வார்த்தைகளைக் காதில் வாங்காமல், 'தடார் புடார்' என்று அவளை அடிக்க வாரம்பித்தார்கள். அந்த அடி யையும் லக்ஷ்யம் செய்யாது நிர்மலா தன் அபிப்பிராயத்தைச் சர மாரியாகப் பொழிவதை நிறுத்தவில்லை. ஒருத்தி நிர்மலாவின் தலை மயிரைப் பிடித்து உலுக்கு உலுக்கு என்று உலுக்கியவாறு "ஏண்டீ! தடிப்பிணமே! மான ஹீன மற்ற ம்ருத்யுவே! காக்கை குருவி முதலிய பக்ஷி ஜாதிகள் கூடத் தங்கள் தங்கள் இனத்திற்கு எத்தனையோ பெருமையாகப் பாடுபட்டுக் கட்டுப்பாடாக விருக் கின்றன. மனித ஜென்மம் எடுத்த நீ அதனிலுங் கேடுகெட்ட நிலைமையில் இருப்பதை யாரடீ சகிப்பார்கள்? நீ இந்த மாதிரி அக்கிரமம் செய்வதை விடப்போகிறாயா, இல்லையா?" என்று கேட்டாள்.

நிர்மலா :—என்னைக் கொலை செய்தாலும் சரி. நீங்கள் செய்யும் அக்கிரமத்தை நான் வெளியிட்டு உங்களை அவமானப்படுத்தி இந்தக் குலத்தின் அழுக்கைப் போக்கி இன்னும் கீழ்க்கிளையாக உள்ள பெண்களுக்காவது ஒழுங்கான வாழ்க்கை முறையைக் கட்டாய மாகக் கடை பிடிக்கும்படியான சட்டமும் ஏற்படுத்திவிட்டுத்தான் மறு காரியம் செய்யப்போகிறேன். ஊம். என்னை இங்கேயே இப்போதே கொன்று விடுங்கள். அதற்கு நான் பின்வாங்க வில்லை" என்று மரம்போல் நின்றாள்.

இதற்குள் அங்குக் கூடியிருந்த சிறு பெண்களில் சிலர் எழுந்து ஓடி வந்து, நிர்மலாவை அடிப்பதைத் தடுத்து, "போதும்! நிறுத் துங்கள். இங்குக் கூட்டம் போட்டு என்னதான் புரட்டிவிடப்

போகிறீர்கள் என்பதைப்பார்க்கவே நாங்களும் வந்தோம். நிர்மலா வின் காரியமும் அவள் செய்வதுந்தான் சரியாகவும் கௌரவமாக வும் இருக்கிறது. இந்த மாதிரி மானங்கெட்ட பிழைப்புப் பிழைக்க இனி நாங்களும் இசையமாட்டோம். எங்களுக்கு இனி உங்கள் போதனை வேண்டாம்.

நிர்மலா! உன் காரியத்திற்கு நாங்களெல்லாம் ஆதரவு கொடுக் கிறோம். உன்னிஷ்டப்படியே நாங்கள் ஒழுங்கான முறையில் வாழ்க்கையை நடத்துகிறோம். ஒருவனை மணந்துகொண்டு குல மகளைப்போல் மானமாய் ஜீவிக்க இந்த நிமிஷம் முதல் விரதம் எடுத் துக் கொள்கிறோம். நம் கீழ்க் கிளைகளாவது நல்ல மார்க்கத்தில் வாழட்டும் என்ற ஆசை வெகுநாட்களாக எங்களுக் கிருந்துவந்தும் உன்னைப்போல் தைரியமாகச் செய்யும் சக்தி இன்மையினால் கோழைத்தனமாக உழன்று வந்தோம். இனிமேல் எங்களுக்கும் தைரியம் வந்துவிட்டது. வா; வீட்டிற்குப் போகலாம். நல்லதைச் செய்யும் உனக்கு இந்த அறிவிலிகளால் கிடைத்த சன்மானம் போதும்" என்று கூறியதைக் கேட்டதும் நிர்மலாவின் மனம் குளிர்ந்து, இதயத்தில் ஒரு புதிய ஜீவசக்தி உதயமாகியது. அந்தப் பெண்களை அணைத்துக்கொண்டாள்.

இந்த விபரீதக் காக்ஷியைக் கண்டு மனம் சகியாத மற்ற வர்கள் 'லபோ திபோ' வென்று அடித்துக்கொண்டு பின்னும் அதிக மாகக் கூச்சலிட வாரம்பித்தார்கள். நிர்மலா அத்தனை அடிகளையும் பட்டுக்கொண்டு பதிலுக்கு அவர்களை ஏதும் அடித்தோ, திட்டியோ செய்யாமல், உடனே தன்னுடன் சேர்ந்த மற்ற பெண்களை அழைத்துக்கொண்டு, தன் காரில் வீட்டிற்குச் சென்றாள்.

அதற்குமேல் அங்குக் கூடியவர்களுக்கு மனக்கொதிப்பும், தங்கள் கக்ஷி தோல்வியுற்றதைப் பற்றி வயிற்றெரிச்சலும் சகிக்கக் கூடவில்லை. 'இனி நாம் என்ன செய்வது?' என்று ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு கேட்டார்கள்.

உடனே ஒருத்தி கைகளையும் கால்களையும் நீட்டி மடக்கி பெரிய அபிநயம் செய்தவாறே, "இனிமேல் செய்வதாவது. ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. ஏற்கெனவே படித்துப் பட்டம் பெற்

றுள்ள சில பெண்கள் நம்ஜாதிக்குச் சட்டமும், திட்டமுங்கொண்டு வருவதாகப் பாடுபட்டு வருகிறார்கள். இந்த சமயம் இந்த மாதிரி ஆபாஸமான படமும் வந்துவிட்டால், நம் ஜாதியே பூண்டற்றுப் போய்விடும். அதோடு நம் பிழைப்பு அதோகதி யாகிவிடும். ஆதலால், எப்படியாவது நாம் அந்த நிர்மலாவுக்குப் பயித்தியம் பிடிக்கும்படிக்குச் செய்துவிட்டால், எல்லாம் சமாப்தியாகி விடும். தெரிந்ததா?" என்றாள்.

வேறொருத்தி :—ஆமாம்; ஆமாம். அது மிகவும் உத்தமமான காரியம். நம்ப மாரியப்பனிடம் சென்று அந்த மருந்தை வாங்கி எப்படியாவது ஆகாரத்தில் கலந்து கொடுத்துவிட்டால் தீர்ந்தது எல்லாம்....ஆகாரத்தில் யாரைக்கொண்டு கலக்கச் செய்வது?

மற்றொருத்தி :—என்! ஜீவாவுக்கும் நிர்மலாவுக்குந்தான் இப்போது ஆகாதே. அவளையே பிடித்தால் ரெண்டாம்பேர் அறியாத படி ரகஸ்யமாக காரியம் முடிந்துவிடுகிறது. அவளைவிட வேறு யாரும் இதற்குச் சரியானவர்களல்ல. என்ன சொல்கிறீர்கள்?

இதை எல்லோரும் ஆமோதித்தார்கள். அவர்களில் ஒருத்தி ஜீவாவின் வீட்டிற்குச் சென்று அவளை எப்படியாவது சரிப்படுத்தி விடுவதென்று, மகாநாட்டில் தீர்மானமாகிவிட்டது. இதோடு அந்தச்சதியாலோசனைக் கூட்டமும் முடி வடைந்தது. எல்லோரும் தம் தம் வீடு நோக்கிப் புறப்பட்டார்கள்.

30

சுரேந்திரன் வீட்டிற்கு வந்து தன்னறையில் படுத்தவன் எழுந்திருக்கவே இல்லை. அவனுடைய மனம் அளிந்த புண்ணாகித் தாங்க முடியாத வேதனையில் தவிக்கிறது. இந்த அபவாதம் ஊர் முற்றும் பரவி விடப்போகிறதே என்ற பெரிய கலக்கம் அவன் நெஞ்சை அள்ளித் தத்தளிக்கச் செய்கிறது. பழய காலத்துச் சம்பவங்கள் முற்றும் அவன் கண் முன்பு தாண்டவமாடத் தொடங்கின.

இந்த நிலைமையில் அவன் தத்தளித்துக்கொண்டிருக்கையில், உள்ளிருந்து அவன் தாயாரும் மற்றையோரும் பேசும் வார்த்தைகள் அவன் காதில் விழுந்ததும் ஆயிரம் அம்புகளைப் பாய்ச்சி அவனுடைய வேதனையைக் கிளறுவதுபோல் தோன்றியதால், இன்னும் இடிந்துபோய் உட்கார்ந்துவிட்டான். உள்ளே நடக்கும் சம்பாஷணைகளாவன :—

"நான் என்ன செய்வது? கல்யாணம் எப்படியும் முடிந்துவிடுமென்றுதான் நினைத்தேன். அவர்களிடம் நான் எந்த விஷயத்தையும் சொல்லாமல் வெகு ரகஸ்யமாக மூடி வைத்தும் எப்படிதான் தெரிந்ததென்று எனக்கே புரியவில்லை. இன்று காலையில் நான் எத்தனை உத்ஸாகத்துடன் சென்றேன் தெரியுமா! இன்று மாலையே அவர்கள் நிச்சயதார்த்தம் செய்ய வருவதாகவன்றோ சொல்லியிருந்தார்கள். அதனால் வெகு சந்தோஷத்துடன் செல்லும் போதே அவர்களைப் பார்த்ததும் இடிவிழுந்தது போலாய்விட்டது. நான் என்ன சொல்வேன் போ!" என்று ஒரு கிழவி ராஜத்தினிடம் கூறினாள்.

ராஜம் இடைமறுத்து, "ஐயோ! என்ன சொன்னார்கள்? உங்களை ஏதாவது"....என்று இழுப்பதற்குள் கிழவி, ராஜம்! என்னை ஏதாவது என்று ஏன் இழுக்கிறாய்? என்விதி இருந்ததுபோல் வசை மூட்டையே வாங்கிக்கொண்டேன். என் தலையைக் கண்டவுடனே 'பாட்டி! போதும், போதும்; உங்கள் உயர்தரமான சம்பந்தத்தின் ப்ரபாவம் போதும். எத்தனை நாளாக எங்களை இத்தகைய படுகுழியில் தள்ள யோசனை செய்துகொண்டிருந்தீர்கள்? பெண்ணுக்குத் தகப்பனார் சிறுவயதிலேயே எங்கேயோ ஓடிவிட்டதாகச் சொல்லி ஏமாற்றப் பார்த்தது எந்த ஊர் நியாயம்?

நிஜமாகச் சொல்லுங்கள்; பெண்ணின் தகப்பனார் ஓடியா போய்விட்டார்? சர்க்கார் பணத்தை விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டுக் களியுங் கூழும் ஆனந்தமாகச் சாப்பிட்டுக்கொண்டு தவம் செய்கிறார்லவா? போயும் போயும் ஒரு திருடனின் பெண்ணையா நாங்கள் கல்யாணம் செய்துகொள்ளவேண்டும்? அதோடு பெண்ணின் அண்ணன் பக்காச் சோதாவாமே! அவன் சினிமாக்காரியுடன் சேர்ந்து

கொண்டு குடித்துக் கூத்தடிக்கிறானும். அப்பப்பா! இந்த ஆபாஸ சம்பந்தம் எங்களுக்கு வேண்டாமம்மா! எங்க பிள்ளை பிரும்மச் சாரியாகவே இருந்தாலும் இருக்கட்டும்; இம்மாதிரி சம்பந்தம் செய்யமாட்டோம்' என்று கண்டிப்பாகச் சொல்லியதுடன் நில்லாமல், 'நீ மரியாதையாய் எழுந்து போகிறாயா? இல்லாவிடில்' ....என்று ஆரம்பித்தார்கள். என் குலை நடுக்கமெடுத்துக்கொண்டது. உடனே நான் மறுபேச்சின்றி வீட்டிற்கு வந்து சேர்ந்தேன். இதை உன்னிடம் எப்படிச் சொல்வது என்று அஞ்சியே இத்தனை நாழிகை வராதிருந்தேன். நீ அவர்களின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கப் போகிறாயே என்றுதான் வந்தேன். ராஜம்! நான் என்ன செய்வேன் சொல்லு. உன்னைப் பார்த்தால் என்வயிற்றில் சங்கடம் செய்கிறது. நானும் இதுவரையில் எத்தனையோ இடம் பார்த்து விட்டேன். இந்த விஷயத்தில் உன் பிள்ளையுந்தான் அக்கரை காட்ட வேணும். அவன் நாளைக்குநாள் கூத்தாடியாக ஆகிக்கொண்டிருக்கிறானே என்னசெய்வது?" என்றாள்.

இவ்வார்த்தைகளைக் கேட்கும்போது சுரேந்திரனின் நெஞ்சு படுக்கென்று அடித்துக்கொள்கிறது. 'தான் செய்துவிட்ட ஒரு காரியம் எத்தனைதூரம் குடும்பத்தைப் பாதிக்கிறது' என்று நினைத்து நினைத்து உருகுகிறான். அவன் தாயாருக்கு இந்த விஷயத்தைக் கேட்டதும் மனம் முறிந்துவிட்டது. இந்த இடத்திலாவது காரியம் கட்டாயம் கைகூடும் என்று நம்பி இருந்ததற்கு இம்மாதிரி மோசமாகி விட்டதே. இனி என்னசெய்வதென்று பெருங் கவலை பிடித்துக்கொண்டது.

"பாட்டீ! இனிமேல் நான் என்னசெய்வதென்று எனக்குத் தெரியவில்லை. என் மனக்கவலைக்கு முன்பு உலகமே இருண்டுவிட்டது போலத் தோன்றுகிறது. சுரேந்திரன் எந்த விதமாகவாவது சம்பாதித்துக் குடும்பத்தைக் காக்கவேண்டியே பிளேட்டு கொடுத்தான்; இப்போது சினிமா ஆடுகிறான். இக்காலத்தில்தான் சினிமா ஆடுவதும் உத்தியோகம் செய்வதுபோன்ற கௌரவமாகவிருக்கிறதே! இதில் இளப்பம் ஒன்றுமில்லையே! மற்ற எந்த வழியில் அவன் சம்பாதித்தால் இந்தத்தொகை வரமுடியும் நீங்களே சொல்லுங்கள். அவன்மீது சொல்லும் புகாரெல்லாம் வீண்பழி என்று

நான் நிச்சயமாகச் சொல்லுவேன். அவன் படும் வேதனை சகிக்க முடியவில்லை; குழந்தைதானே அவன். அவன் என்னசெய்வான் பாவம்!" என்று தன் தாயார் கூறும் அமுதமொழிகள் சுரேந்திரன் காதில் விழும்போது அவன் மனப் புண்ணுக்கோர் மருந்து போட்டதுபோல் தோன்றியது. அன்னையின் அணைகடந்த பாசத்தை எண்ணி உள்ளம் பூரித்தான்.

இதுவரையில் மௌனமாயிருந்த அலமுவின் குரல் இப்போது கிளம்பியது. "ஆமாம்மா. நீ என்றும் அவனைக்குழந்தை, குழந்தை என்று சொல்லிக்கொண்டே இருந்தால் என்ன லாபம்? என்றைக்கும் குழந்தையாகவே இருந்தால், என் கதி போவதெப்படியம்மா? கோயிலா, குளமா, ஓர் கல்யாண வீடா எங்கேயும் போக ஆசை கிடையாது. எங்கு சென்றாலும் என்னைப் பரிகசித்தும், 'கொள்ளையடித்தவன் மகளாம்; யாரும் கட்டமாட்டேனென்கிறார்களாம்; திண்டாடுகிறது' என்று பேசும்போதும் என் பிராணனே போய் விடும்போலிருக்கிறது. இத்தகைய அவமானத்தை நான் எத்தனை நாளைக்குச் சகிப்பது? எல்லாம் இந்த அண்ணாவினால் வந்த வினைதானே!" என்று கடுகடுத்துக் கூறினாள்.

இவ்வார்த்தைகளும் சுரேந்திரனின் காதில் விழாமலில்லை. ஆயிரந் தேள் கொட்டி அவதிப்படுவதுபோல் இருக்கிறது. அவன் என்ன செய்வான் பாவம்! அதற்குள் அவன் தாயார், "அலமு! அண்ணாவுக்கென்ன உன்மீது ஆசை இல்லை என்று பார்த்தாயா? அவனுடைய நிலைமையை அறியாமல் பேசி விடுகிறாயே! உன் பொருட்டாகத் தானே அவன் சினிமாவில் ஆடி பணம் சேகரிக்க முற்பட்டிருக்கிறான். கையில் பணமில்லாது அவன் எவ்விதம் உன் விவாகத்தைச் செய்யமுடியும்? அவன் மனம் நோகும்படியாகப் பேசிவிடாதே" என்றாள்.

அலமு:—அம்மா! நீ எப்போதும் அண்ணனுக்குப் பரிந்து பரிந்து பேசித்தான் அவனுக்கு அடியோடு குடும்பக் கவலையே இல்லாதபடி செய்துவிட்டாய். சதா சர்வகாலமும் அந்தத்தேவடியாளுடன் திரிந்துகொண்டே இருப்பதை ஊரே பார்த்துச் சிரிக்கிறதை நீ அறியவில்லையா? நேற்று வந்தாரே அவர் அண்ணனைப் பற்றி என்ன சொன்னார் என்பதை மறந்துவிட்டாயா?

ராஜம்:—அலமு! ஏது நீ அண்ணன்மீது இத்தனை கடுமையாகப் பேசுகிறாய்? உனக்குக் கல்யாணம் செய்து சீருடன் அனுப்பிவிட்டால், அப்போது அண்ணன் நல்லவனாகி விடுவானே? "நிர்மலா என்ன தேவடியாள் ஜாதியில் பிறந்துவிட்டாளே யன்றி, அவளைத் தேவடியாள் என்றுசொல்லமுடியுமா? அவளுடன் சேர்ந்து படித்தாலும் விளையாடினாலும் என்ன குற்றம்" என்று முன்பெல்லாம் நீ கேட்டாயே. இப்போது அந்த வார்த்தை எங்கே போயிற்று?

அலமு:—என்ன அம்மா நீ இப்படி எல்லாம் பேசுகிறாய்? நானும் அவளும் சின்ன பெண்ணாயிருக்கும்போதே சேரக்கூடாதென்று கட்டுதிட்டம் செய்த நீ இப்போது அண்ணன் பெரியவனாகி விட்ட பிறகு அம்மாதிரி தேவடியாளுடன் திரியும்போது பேசாமலிருப்பது நல்லதா? அந்த மோகத்தில்தான் அவன் என்னைப்பற்றிக் கொஞ்சமும் கவனிக்காமலிருக்கிறான். அவன் இவ்விதம் தேவடியாள் பின்னோடு சுற்றிக்கொண்டிருந்தால், என்னை இந்த ஜென்மத்தில் யாரும் கட்டுவதற்கே வரமாட்டார்கள். இது நிச்சயம். நானும் அவமானத்துடன்தான்சாகவேண்டும். ஏற்கனவே 'அங்குநின்றாள், இங்கு நின்றாள். அவனைப் பார்த்தாள், இவனைப் பார்த்தாள்' என்ற அபவாதச் சொல் காதைத் துளைக்கிறது. இன்னும் கூடிய சீக்கிரத்தில் அதற்குமேற்பட்ட அபவாத வார்த்தைகளும் வந்துவிடும். அப்படிவருமாயின், அடுத்த க்ஷணத்தில் என்னை உயிருடன் காண முடியாது என்பது ஞாபகமிருக்கட்டும். அம்மா! நான் ஏதோ அதிகமாகப் பேசிவிட்டதாக நீ நினைக்கலாம். என் மனக்கவலை எனக்குத் தானே தெரியும். பெற்றதாயாருடன் சொல்லாது வேறு யாருடன் சொல்வது? இத்தனைநாள் நான் இதுவிஷயமாகப் பேசினேனா! இதோ பாரு. எந்தக் கம்மனாட்டி சோதா ராஸ்கலோ மொட்டைக் கடிதம் எழுதி இருக்கிறான் பாரு—என்று கூறி, ஒரு கடிதத்தை வீசி எறிந்தாள். ஒருவிதமான கலக்கத்துடன் ராஜம் அதை எடுத்துப்படிக்க வாரம்பித்தாள்.

"என் கண்ணே அலமு!

நான் வீதியில் போகும்போதும் வரும்போதும் என் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் மோகனாங்கி

யைப்போல் நீ சேவை அளிப்பதைக் காணக்கான என் இருதயம்பொங்கிப் பூரிக்கிறது. எத்தனை நாளைக்கு இம் மாதிரிபார்க்கமுடியும்? நீயும் நானும் சந்தித்துப் பேசும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையாதலால், இதை நான் எழுதுகிறேன். நானும் உன் அண்ணனைப் போலவே சினிமா நடிகன்தான். இதுவரையில் 5 படங்களில் நடித்திருக்கிறேன். தற்கால நாகரிகமோ மிஞ்சிக்கொண்டே வருகிறது. உன் அண்ணன் ஒரு தேவடியாளுடன் நடிப்பதையும் பாடுவதையும் சொர்க்க போகமாக நினைக்கிறான். ஆனால், நான் அப்படி நினைக்கவில்லை. நீயும் நானும் சேர்ந்து நீடித்த 'ஹீரோ-ஹீரோயினாகி' விடலாம். பல படங்களில் நடித்துச் சீக்கிரத்தில் பணக்காரர்களாகி விடலாம். மனம் ஒத்துவிட்டால் வேறு எதுவும் பார்க்கவேண்டாம். உனது சம்மதத்தை எழுதி நாளை நான் வீதியில் போகும்போது என்முன்பு அதை வீசி எறிந்துவிடு. பிறகு நான் நேரே வீட்டிற்கு வருகிறேன். இதை வித்யாசமாய் நினைக்காதே. எப்படியும் உன் பிதா ஜெயிலிலிருப்பதும், உன் அண்ணன் விஷயமும் ஊர் முற்றும் தெரியும். ஆதலால், உன்னை யாரும் மணக்க முன்வரமாட்டார்கள் என்பது நிச்சயம். நீ தயங்காது எனக்குப் பதில் கொடு.

இங்ஙனம்,
உன் மீது உயிரையே வைத்திருக்கும்,
அன்பன்"

இதைப் படித்த ராஜத்திற்குத் தேகமே பற்றிஎரிவதுபோலான வேதனை உண்டாகிவிட்டது. அலமுவின் ஆத்திரத்தின் உண்மை நன்றாகத் தெரிந்துவிட்டது. அலமுவை அன்புடன் அணைத்துக் கொண்டு, "அலமு! என் மூடத்தனத்தினால் நான் உன் நிலைமையறியாது பேசிவிட்டேன் கோபித்துக்கொள்ளாதே! அண்ணன் வந்தவுடனே நான் அவனிடம் சண்டைபிடித்தாவது உனது நன்மைக்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன். ஊரில் எங்குப் பார்த்தாலும் அண்ணனைப்பற்றிப் பேச்சே இருப்பதை நான் அவ்வளவாக அறிய

வில்லை. இரண்டோரிடத்தில் காதில்பட்டும் லக்ஷ்யஞ்செய்யாமல் இருந்துவிட்டேன்.

அலமு! இனி என்னவானாலும் சரி! பிச்சை எடுத்தாவது மானத்துடன் பிழைக்கலாம். அந்தத் தேவடியாள் சகவாஸத்தில் உன் அண்ணன் உழலுவதை நான் இனி சகிக்கமாட்டேன். நீ கவலைப்படாதே! அண்ணன் வரட்டும்" என்று அபாரமான கோபத்துடன் கூறினாள்.

இந்தத் தொனியைக் கேட்கும்போதே சுரேந்திரனின் நெஞ்சு படபடத்தது. அவனால் அங்கு உட்காரவே முடியவில்லை. தன் தாயும் சகோதரியும் எழுந்துவந்து தன்னை என்ன கேட்பார்களோ! எவ்விதம் திட்டுவார்களோ! இந்தச் சமயம் தான் இங்கிருந்தால், அவர்களின் ஆத்திரம் அதிகரிக்கும். அதனால் வீண் கலவரமே உண்டாகும். ஆகையால், மெல்ல நழுவிவிடுவதே சரி என்று எண்ணி, வீட்டைவிட்டு வெளியே போய்விட்டான்.

31

பூபோன்ற மெல்லிய சரீரத்தையுடைய நிர்மலாவுக்கு இந்த அடியின்பாதை வீட்டிற்கு வந்த பிறகுதான் அதிகமாக உண்டாகியது. கைகளிலும் முகத்திலும் கிழங்கு கிழங்காக வீங்கிவிட்டது. அம்மாடீ என்று படுத்து விட்டாள். சுரேந்திரனைப்பற்றிய கவலை அவள் மனத்தை விட்டு அகலவே இல்லை. அவன் மனங் குழம்பி இருந்த நிலைமையில், என்ன செய்துவிடுவானோ! இச்சமயம் தனக்கு இத்தகைய ஆபத்து நேர்ந்தது என்பதைக் கேட்டு என்னவிதமாகப் பதறுவானோ என்ற எண்ணமே மனத்தில் எழும்பி வேலை செய்துகொண் டிருந்தது.

அவளுடன் வந்த பெண்கள் எல்லாம் அவளைச் சுற்றி உட்கார்ந்து தேகத்தைத் தடவிக் கொண்டிருந்தார்கள். அச்சமயம் ஜன்னலால் எதிர் வீட்டை நோக்கிய நிர்மலாவின் ஆனந்தம்

இதயம் நிரம்பியது. கூடவிருந்த பெண்களை நோக்கி "அதோ பாருங்கள். என்ன சந்தோஷமான காட்சி பாருங்கள். குழந்தையை வைத்துக்கொண்டு தம்பதிகள் குலாவும் ஆனந்தத்தைப் பாழாப்போன நம் ஜாதியில் என்றுவது காணமுடியுமா? "தாசிப் பிள்ளைக்குத் தகப்பன் யாரு?" என்கிற பழமொழியை நினைத்துப் பார்த்தால், நம் தேகம் அவமானத்தினால் குன்றிப்போகவில்லையா? மனித வாழ்க்கையின் பிரதானம் பணந்தானா? மான அவமானமில்லையா? நாம் எல்லோரும் ஒன்றுகூடி ஒரு சங்கத்தை ஸ்தாபித்து, தாசிகளின் கூட்டத்தையே அதில் கூட்டி, தாசிகளின் ஊழல்களை விளக்கிக் கூறி, உங்களைப்போன்ற சிறு பெண்களின் மனத்தைத் திருப்பி, பழைய துர்ப்பழக்கத்தை யொழித்து, சீரிய ஒழுக்கத்துடன் வாழும்படி நான் என்னுயுளுக்குள் செய்து முடிக்காவிட்டால், என் நெஞ்சு வேகாது. ஒருகால் நான் இறந்துவிட்டாலும் என் கோரிக்கையை நீங்கள் நிறைவேற்றித் தருவதாக வாக்குக் கொடுங்கள். அப்போதுதான் என் இதயம் நிம்மதியாகும்" என்று கெஞ்சியவாறு மனத்திலுள்ள ஆவல் முற்றும் காட்டிக் கேட்டாள்.

கூடவிருந்த பெண்கள், "என்ன நிர்மலா இப்படிப் பேசுகிறாய்? இனி நாங்கள் உன் நிழல் போன்றவர்கள் என்பதை மறந்து பேசாதே. 'நம் ஜாதியின் அவக்கேட்டை யொழித்து சீர்திருத்தம் செய்யுங்காலம் எப்போதாவது உதயமாகாதா? அதற்கென யாரேனும் அவதரிக்க மாட்டார்களா?' என்று நாங்கள் சிலசமயம் ஏங்கி எதிர்பார்த்தது உண்டு. அது உன்னால் இப்போது சீர்பெறுங்காலம் வந்திருக்கையில், நீ ஏன் அதைரியமாகப் பேசுகிறாய்? கடவுள் உனக்கு யாதொரு குறையும் கொடுக்கக் கூடாதென்று நாங்கள் வேண்டுகிறோம்" என்று தைரியங் கூறினார்கள்.

ஒயிலாம்பாள் ஜீவா வீட்டிலிருக்கும் சமயம் நாலைந்து தேவதாசிகள் ஒன்றுகூடி அங்கு வந்து ஒயிலாம்பாளை நோக்கி, அதட்டிய குரலில், "ஏண்டீ! மானங்கெட்டப் பிணமே! உனக்கு ஜாதி அபிமானங் கூடச் சந்தியில் போய்விட்டதா? கேவலம் சாணுண்டு சிறுக்கி தலை விரித்தாடுவது, அதை நீயும் பார்த்துக்கொண்டு தாளம் போடுவதா? உனக்குச் சுயமரியாதை கிடையாதா? ஹீனயம் கிடையாதா? உன் ஜாதியைக் கண்டபடி காறியுமிழ்ந்து

பலர் ஏசும் முறையில் தூஷித்தால், அது உன் தேகத்தில் பொத்த வில்லையா?

இந்தப் படம் வெளிவந்தால், அதைப் பார்த்துப் பொதுஜனங்கள் சாணியைக் கரைத்து உன் தலையில் கொட்டும்போது நீ எங்கே நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகப்போகிறாய்? உனக்கு வெட்கமில்லை? தூத்தூ! கோட்டான்போல் விழிக்கிறாயே! முன்பே ஒரு தரம் உனக்கு நாங்கள் எச்சரித்தும் நீ எருமைமாடுபோல் உரைக்காதிருந்துவிட்டாய்! முதலில் உன் பெண்ணை அடக்கி, இந்தப் படத்தைத் தடுக்கப் போகிறாயா? இல்லாவிட்டால், வந்த ஆபத்து வரட்டுமென்று அனுபவிக்கப் போகிறாயா?

இதைப்பற்றி இப்போதுதான் நாங்கள் ஒருகூட்டம் போட்டு இந்தப் படத்தைத் தடுக்கவேண்டுமென்று பேசிக்கொண்டிருக்கையில், அதை எப்படியோ அந்த ராக்ஷஸி தெரிந்துகொண்டு உள்ளேவந்து கூட்டத்தையும் தடுத்துக் கையில் அகப்பட்டதை எல்லாம் எடுத்து எங்களைத் தாறு மாறாக அடித்து நொறுக்கி, வாயில் வந்தபடி எல்லாம் திட்டி ஹதம் செய்துவிட்டுப் போயிருக்கிறாள். இதை நாங்கள் சும்மா விடப்போவதில்லை. அவள்மீது கேஸ் எடுத்துத் தக்க சாக்ஷியுடன் நிரூபித்து அவளைச் சிறையில் வைத்து, கண் குளிரக் காணவிட்டால் பாரு. அவள் அந்தப் படத்தை நிறுத்துவதாயின் நாங்கள், ஒருவாறு மன்னித்து அவளை விட்டு விடுகிறோம். இல்லையேல், இது வெகுதூரம் போய்விடும். ஜாக்கிரதை!

எங்கள் வீட்டுக்கு வரும் ஆண்பிள்ளைகளெல்லாம் சொரணை கெட்ட கட்டைகள் என்று பார்த்தாயா? அவர்களையும் இழிவு படுத்தி அவமானம் செய்வதால் அவர்களெல்லாம் அசாத்யமான வைரம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு வேளை நிர்மலாவைக் கொன்று விட்டாலும் விடலாம். நீ தான் ஜாதி யபிமானமில்லாது நாய்போல் இருப்பினும் நாங்கள் அதை மறந்து ஐயோ பாவமென்று உன்னிடம் சொல்லுகிறோம். நீ ஜாக்கிரதையாய்ப் பிழைக்க வழி தேடு. இல்லையேல், உன் ஜீவியச் சுழல்படி அலைந்து மடிந்துபோ" என்று மூச்சுகூட விடாமல் பிலு பிலு என்று பிடித்துக்கொண்டு, உலுக்கிவிட்டார்கள்.

ஒயிலாம்பாளுக்கு ஒன்றுமே தோன்ருது கலங்கிவிட்டது. தன் மகள் செய்வதுதான் ஒன்றுமே அவளுக்குப் பிடிக்கவில்லை. அதோடு இத்தனை பெயர்களையும் அடித்துவிட்டாள் என்பதைக் கேட்டதும் அவள் தேகமே கிடுகிடென்று ஆடியது. வாய்க் குளறியவாறு 'என்ன! நிர்மலாவா உங்களை அடித்தாள்? நிஜமாகவா!' என்று கேட்டாள்.

வந்தவள் :—அடாடா! என்ன மாமாலமடீயம்மா! நிர்மலா வாம்; நிர்மலா. பெயரைப் பாரு. பரமதரித்திர மூதேவிக்குத் தன லக்ஷ்மி என்று பெயராம். துர்க்குணமும் தூராக்ருதமும் குடி கொண்டிருக்கும் சனியனுக்கு நிர்மலா வென்ற பெயரைப் பாரு. நிஜமாகவா அடித்தாள் என்று ஏதோ வியப்புக் கடலாடி எழுந் திருக்கிருயே! இதோ பாரு; எங்கள் கை வளையல்கள் உடைந்து அவைகள் பொத்தி ரத்தமும் வந்துவிட்டது. கழுத்துச்சங்கிலியைக் குண்டோதரிபோல் இழுத்து அறுத்துவிட்டாள். முகத்தைப்பாரு; எத்தனை இடங்களில் நகத்தால் கிழித்த காயமிருக்கிறது. இத்தனை அழகான பெண்ணைப் பெற்றதற்கு உனக்கு வாய்கூட ஒரு கேடா! ஊம். என்ன சொல்லப்போகிருய்?

ஒயிலா :—காந்தம்! நீ இவ்வளவு கோபமும் ஆத்திரமும் காட்டாதே. நான் என்னதான் செய்வேன்? நம்ப ஜாதி என்ருலே- அதிலும் நம்பஜாதியின் பழக்கம் என்ருல்—அவளுக்கு விஷமாக விருக்கிறது. ஒரு கச்சேரியா! ஆட்டமா! பாட்டா! சதிரா! ஒன்றும் கிடையாது. ஜாதி வழக்கப்படி தனுக்கு மினுக்காக விருந்து எல்லோரையும் வலை போட்டு காசு சம்பாதிக்கவும் வக் கில்லை. அவள் பிழைப்பு எப்படித்தான் நடப்பது. இக்காலத்தில் இந்தச் சினிமாவிலாவது சேர்ந்தால் பணம் வருமே என்று பாடு பட்டேன். அவள் நம்ப ஜாதிக்கே உலைவைத்துக் கதை எழுதப் போகிருள் என்று எனக்குத் தெரியுமா?

எத்தனையோ கதைகளில் தேவடியாள் வீடு சென்று மைனர்கள் சொத்துக்களை யழித்துவிட்டார்கள் என்று வர வில்லையா? கோவலன், டம்பாச்சாரி இன்னும் சில நாவல்கள், முதலியனபோலிருக்குமென்று நினைத்தேன். அவள் இதையே

அடிப்படையாகக்கொண்டு செய்கிருள் என்பது தெரிந்ததும் இந்த ஒயிலாம்பாளா சும்மாவிருப்பாள்? அவளுக்கு இந்த ஜாதி யபிமானம் செத்துவிட்டதென்று பார்த்தீர்கள்? நேரில் சொல்லிப் பார்த்தேன்; கேட்கவில்லை.

அந்தக் கொள்ளைக்காரனின் மகன்மீது இவள் கொண்டிருக்கும் ஆசை எனக்குத் தெரியும். அவனை நீக்கிவிட்டால், உடனே கதை நின்றுபோகும்; இவள் வேறு யாருடனும் நடிக்கமாட்டாள் என்று யோசனை செய்துகொண்டு, பல கடிதங்கள் எழுதி முதலாளிக்கும் டைரெக்டருக்கும் போட்டுவிட்டேன். இன்று ஸ்டுடியோவில் ஒரே கலாட்டாதான். இனி உங்களுக்குப் பயம் வேண்டாம். வீணாக கேஸ் எடுத்தும் கோர்ட்டுக்கு இழுத்தும் அவமானம் செய்யாதீர்கள். எனக்காகப் பொறுத்துக் கொள்ளுங்கள்.

ஜீவா :—அத்தே! உன் முன்யோசனை காரியங்களெல்லாம் பகல் கனவாய் முடியும்போலத்தான் இருக்கிறதாம். மணியுடனாவது டைரெக்டருடனாவது அவள் நடிக்கத் தயாராயிருந்து நடித்துவிட்டால், அப்போதென்ன் செய்வீர்கள்? நம்முடைய பிழைப்பை நாமே கெடுத்துக்கொண்டதாக வல்லவோ ஆய்விடும்.

வந்தவர்கள் :—ஆமாம்; ஆமாம். ஒயிலாம்பாள்! எப்படியாவது இதை வெளிவரமுடியாதபடி நிறுத்தினாலொழிய நாங்கள் விடப்போவதில்லை; தெரிந்ததா! சரியானபடி யோசித்து முடிவு சொல்லு. நாங்கள் நாளைக்கு உன்னை வந்து பார்க்கிறோம்—என்று கூறியபடியே ஜீவாவை ஜாடையாக அழைத்துவிட்டு வெளியே வந்தார்கள்.

ஜீவாவும் ஓடிவந்தாள். அவள் கைகளைக் காந்தா பிடித்துக்கொண்டு, “ஜீவா! நம்முடைய சுயமரியாதையையும் மானத்தையுங் காப்பாற்றிக் கொள்வதற்கு நீ முக்கியமாக ஒரு உபகாரம் செய்ய வேண்டும். உன்னால்தான் அக் காரியம் ஆகவேண்டும். என்ன சொல்கிறாய்?” என்றாள்.

ஜீவா :—இதற்காகவே நான் காத்துக் கொண்டிருக்கிறேனே! எதுவாயினும் செய்யத் தயார். உடனே சொல்லுங்கள்.

காந்தம் :—இதோ இந்த மூன்று பொட்டளங்களை நீ ஜாக்கிரதையாக வைத்துக்கொண்டு எப்படியாவது நிர்மலாவின் ஆகாரத்தில் சேர்த்துக் கொடுத்து விடவேண்டும். ஒன்று தவறினும் ஒன்றிருக்கட்டும் என்று மூன்று கொடுத்திருக்கிறேன்.

ஜீவா :—(பரபரப்புடன்) இதென்ன விஷமா!

காந்தம் :—ஐயோ! நீ ஏதோ பயப்படுகிறாப்போலிருக்கிறதே! அப்படியானால், நீ காரியத்தைக் கெடுத்து விடுவாய். உன்னைக் கேட்டதே பிசகு; இப்படிக் கொடுத்துவிடு. ஊஹூம்! கொண்டா; இப்படிக்கொடு.

ஜீவா :—ஐயையோ! நான் ஏதோ கேட்டால் நீங்கள் ஏதோ சொல்கிறீர்களே! எனக்குத்தான் அவள் பரம வைரியாயிற்றே! நீங்கள் தயங்காமல் சொல்லுங்கள். விஷமாயின் அதற்குத் தக்க ஜாக்கிரதையுடன் கொடுத்து நம்மீதெல்லாம் பழி வராது தப்பித்துக் கொள்ளவேண்டுமே என்று சொன்னேன்.

காந்தம் :—அப்படியா! மெத்த சந்தோஷம். விஷத்தைக் கொடுத்துக் கொன்றுவிடுவதில் உபயோகமில்லை. ஜாதி என்ற அபிமானமில்லாது சந்தி சிரிக்கவடித்து வேடிக்கைப் பார்க்க நினைத்தாளல்லவா! அதன்பலனாக அவளுக்கே பயித்தியம் பிடித்துப் பாயைப் பிராண்டி சந்தி சிரிக்கும்படிச் செய்துவிடலாம். இந்தப் பொட்டளத்தில் ஒன்று உள்ளே போனதும் சற்றுப் புத்தி தடமாட்டம் ஏற்படும். இரண்டும் செலுத்திவிட்டால், அடியோடு பைத்தியமாகிவிடும். பிறகு தெளிவது என்பது கனவு காணவேண்டியதுதான்; தெரிந்ததா! எப்படியாவது இக்காரியத்தைச் செய்து அவளைத் தலையெடுக்கவிடாது அமுக்கிவிடு—என்றாள்.

இம்மாதிரி ஏதேனும் ஒரு வகையில் அவளை அடியோடு தொலைத்துத் தலைமுழுகிவிடவே காத்திருக்கும் ஜீவாவுக்கு இது, சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்ததுபோல் ஆகிவிட்டது. மருந்தை வெகு ரகசியமாக வாங்கி மடியில் சொருகிக்கொண்டு, "காந்தம்மா! இந்த விஷயம் அத்தைக்குக் கூட தெரியக்கூடாது. தெரிந்தால் காரியம் கெட்டுவிடும். என்ன விருந்தாலும் பெத்தவளோன்னோ!

அஞ்ஞானம் சுத்திக்கொள்ளும்; தெரியுமா! ஆகையினல் வெகு ரகசியமாக விருக்கவேண்டும் ” என்ருள்.

காந்தம் :—“இது எனக்குத் தெரியாதா! இதற்காகத்தான் உன்னிடம் இக் காரியத்தை ஒப்படைத்தேன். இதற்குத் தக்க மனுஷி நீதான், தெரிந்ததா! நான் போய்வருகிறேன். நீயும் நானும் இங்கு பேசுவதை யறிந்தால், அவளுக்குச் சந்தேகம் உண்டாகும். நான் போய் வருகிறேன்” என்று கூறிவிட்டு நகர்ந்தாள்.

இவர்கள் அவ்வறையைவிட்டு நகரும்போது அவ்வறையின் ஜன்னலுக்குப் பின்புறம் ஒரு மனித உருவம் மெல்ல நகர்ந்து சென்றதுபோன்ற நிழலைப் பார்த்து இவர்கள் எல்லோரும் அப்படியே இடிவிழுந்து நின்றுவிட்டார்கள். காந்தம்மாளின் தேகம் ஒரு குலுக்கு குலுக்கியது. நடக்கக் கால் எழும்பவில்லை. அப்படியே ஆடித் துவண்டு போய்விட்டாள்.

32

உடம்பு வலியோடு புரண்டுகொண்டிருக்கும் நிர்மலாவிடம் ஒயிலாம்பாள் வந்தாள். நிர்மலாவின் முகமெல்லாம் வீங்கிப்போய் சிவந்திருந்ததையும், அவள் வலியினுல் முனகிக்கொண்டிருந்ததையும் பார்த்தாள். “ஏண்டீ! இதென்ன வேஷம்? ஜாதி, குலம், சுயமரியாதை முதலியவை ஒன்றுமில்லாமல் கதை எழுதுவது போதாமல், ஜாதிக்காரர்களை எல்லாம் அடித்தும், உதைத்துமா இம்சை செய்வது? அவர்களின் உடம்பிலுள்ள காயங்களைப் பார்த்தால் கண்ருவியாக இருக்கிறதேடீ! இந்தக் கொழுப்புப் பிடித்த முரட்டுத்தனம் உனக்கு எங்கிருந்தடீ வந்தது? என்மானம் போகிறதே! அவர்களெல்லாம் சேர்ந்து உன்மீது கேஸ் போட்டு உன்னைச் சந்தியிலிழுத்து மானத்தை வாங்கப்போகிருர்களாமே! இது உனக்குத் தெரியுமா?” என்று அதட்டியும் ஆகாத்தியம் செய்துகொண்டும் கேட்டாள்,

நிர்மலா, ஒயிலாம்பாளின் முகத்தையாவது திரும்பிப் பார்த்தால்தானே! ஒயிலாம்பாளின் வார்த்தைகளிலிருந்தே அந்தச் சாகஸக்கள்ளிகள் ஏதோ சொல்லிக் கலகத் தீயை மூட்டிவிட்டார்கள் என்று நன்ருகத் தெரிந்துவிட்டது. இச்சமயம் இவளுடன் பேசினுல் தூபம்போட்ட பிசாசுபோல் ஆடக் கிளம்பிவிடுவாள் என்று நிர்மலாவுக்குத் தெரியுமாதலால் அவள் வாய்திறக்காது ஊமைபோல் படுத்திருந்தாள். ஒயிலாம்பாளா சும்மாவிடுகிறவள். "ஏண்டீ! நான் கேட்பது ஒன்றும் காதில் விழவில்லையோ! நான் மனுஷியா! மாடாடீ! உனக்கு நம் ஜாதித் தொழில் பிடிக்கவில்லை என்ருல், நீ விருதமாக இருந்து தொலையேன். இருப்பவர்களை ஏன் சந்தியில் இழுக்கிருய்?

நிர்மலா! பெத்த பாசத்தினுல் நான் சொல்வதைக் கேளு. வீணுக இம்மாதிரி கெட்டுப் பாழாப்போகாதே! அந்தக் கைதி மகனேடு ஆடிப் பெயரைக் கெடுத்துக்கொள்ளாமல் முதலிலேயே மிஞ்சிக் கொண்டதுடன் அந்த நாடகத்தையே நிறுத்திவிட்டு, சிவனே என்று வேறு கதையில் நடிக்க ஏற்பாடு செய். என்ன தெரிந்ததா! பேசாமலிருக்கிருயே! உனக்கென்ன தைரியமடீ?.... என்று கத்தினுள்.

நிர்மலா சற்றும் தாக்ஷிண்யம் பார்க்காமல், ''அம்மா! நீ தான் எனக்குப் பெத்த தாயார் என்றும், நான் உன் மகள் என்றும் உலகமே அறியும். இப்போது புதிதாக ஒன்றும் தெரியவேண்டாம். எனக்கு உடம்பு சரியில்லை. இப்போது உன் மூளை குழம்பிப் போயிருக்கிறது. இச்சமயம் நீ என்னுடன் பேசினுல் பேசுவதெல்லாம் சண்டையாக மாறும். நான் ஒரே வார்த்தையில் சொல்கிறேன். நீ போய்விடு; வீண் கலகத் தீயை மூட்டாதே!" என்று கடுமையான குரலில் சொல்லிவிட்டுப் போர்வையை இழுத்துப் போர்த்துக்கொண்டு படுத்துவிட்டாள்.

ஒயிலாம்பாள், தன் போக்காகச் சற்றுநேரம் குலைத்துப் பார்த்தாள். பலனில்லாததால், திட்டிக்கொண்டே போய் விட்டாள். அன்று முற்றும் நிர்மலாவின் மனேபாதையும் தேகபாதையும் வாட்டி எடுத்தது. அதோடு ஜுரமும் வந்துவிட்டது. வீட்டிற்கு

வைத்தியரை வரவழைத்தால், எல்லோருக்கும் தெரிந்துவிடும். ஆகையினல், மறுதினம் தானே டாக்டர் வீட்டிற்கு காலையில் சென்ருன்.

ஸ்திரீகளுக்காகத் தனியாக விருக்கும் விடுதியில் நிர்மலா போய் உட்கார்ந்தாள். அதற்குப் பக்கத்திலேயே புருஷர்கள் உட்காரும் இடமாதலால், அங்கு எது பேசினுலும் காதுகேட்கும்படி அமைந்திருந்தது. புருஷர்கள் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து சிலர் பின்வருமாறு பேசிக்கொண்டார்கள். அது நிர்மலாவின் காதில் விழுந்ததும் அப்படியே தூக்கி வாரிப்போட்டது. தன்னைச் சற்றுச் சமாளித்துக்கொண்டு, அதையே உற்றுக்கேட்க வாரம்பித்தாள்.

முதல்வன் :—என் சார்! ஆள் பிழைத்துக் கொள்வாஞ, அல்லது கயாதாஞ? பலமான அடியாமே!

இன்னெருவன் :—காரியம் விபரீதமாக முடிந்து விட்ட பிறகு தானே தெரிகிறது. ஐயோ பாவம்! சுரேந்திரனுக்குக் கூட விரோதிகள் இப்போது நிறைய இருக்கிருர்களாமே! அவர்களில் தான் எவனே ஒருவன் இவ்விதம் செய்திருக்கவேண்டும்.

வேருெருவன் .—என் சார்? யாருக்கு என்ன நேர்ந்துவிட்டது? என்ன சமாசாரம்? யாருக்கு அடி?

முதல்வன் :—உங்களுக்கு விஷயமே தெரியாதா? சுரேந்திரனைத் தெரியுமா உங்களுக்கு?

மற்ருெருவன்:—கேள்வியுண்டு. சர்க்கார் பணத்தைக் கையாடிவிட்டவரின் மகன்தானே! பிளேட்டுகளில் பாட்டுக் கொடுத்திருக்கிருனே, அவன்தானே!....இப்போது கூட ஏதோ 'பிலிமில்' நடிப்பதாகக் கேள்விப்பட்டேனே!

முதல்வன்:—ஆமாம்; ஆமாம்! அவன்தான். உண்மையில் அவன் மிகவும் நல்ல பையன்தான். நானும் அவனும் சிறுவயதில் ஒரே பள்ளிக்கூடத்தில் படித்தோம். அவன் நேற்று இரவு 8 மணிக்கு பீச்சில் உட்கார்ந்திருந்தாஞம். அப்போது யாரோ முரடர்கள் வந்து அவனை நன்ருக அடித்துப் படுகாயப் படுத்தி

விட்டுப்போய்விட்டார்களாம். இது திருடன் செய்த காரியமாயின் கை விரலிலிருக்கும் மோதிரத்தையாவது கழட்டிக்கொண்டு போகாது விடுவானு? அது அப்படியே இருக்கிறதாம். இதிலிருந்து இது வேண்டுமென்று யாரோ சதி செய்தது என்பது தெரியவில்லையா! அவனுக்குப் பிரக்ஞை யற்றுப்போய்விட்டதாம். சமுத்திரக் கரையில் நடு நிசியில் யார் இருப்பார்கள். பாவம்! அனுதையைப் போல் இருந்திருக்கிறுன். யாரோ மீன் வலேஞர்கள் அதிகாலேயில் வந்தபோது பிரக்ஞை தப்பிப் பிணத்திற்குச் சமமாகப் படுத்திருக்கும் கோரக்காட்சியைப் பார்த்ததும் இவன் யாரோ என்னவோவென்று தூக்கிக் கிடத்தி வீட்டிலிருந்து பால் கொணர்ந்து சற்றுத் தெளியச் செய்தார்களாம்.

பிறகு அவன், தன் வீட்டைச் சொல்லி அங்குக்கொண்டு விடும்படிக்குக் கேட்டுக்கொண்டானும். செம்படவர்களும் வீட்டில் கொண்டுவந்துவிட்டார்களாம். அவர்கள் செய்த உதவிக்குத் தன் விரலில் இருந்த மோதிரத்தை எடுத்துக்கொடுத்துவிட்டானும். வீட்டிலோ அவன் வாராததால் இரவு முற்றும் தவித்தார்களாம். பிறகு சிகிச்சைசெய்து வருவதாகக் கேள்விப்பட்டேன். இந்த டாக்டரே போனதாகவும் கேள்வி. அவரையே கேட்டுவிட்டால் தெரிந்துபோகிறது” என்று பேசிக்கொண்டார்கள்.

இந்த வார்த்தைகளேக் கேட்கக் கேட்க நிர்மலாவின் உள்ளம் துடிக்கிறது. அவளுக்கு இருந்த காய்ச்சலும் வலியும் எங்கேயோ மாயமாய் மறைந்துவிட்டன. அங்கு உட்காரவே மனம் இடங்கொள்ளவில்லேயாதலால், முதலில் சுரேந்திரனின் வீட்டுக்குச் சென்று பார்த்துவிட்டு வந்துதான் மறு காரியம்செய்யவேண்டும் என்ற கடும் வேட்கை அவள் நெஞ்சைக் கப்பிக்கொண்டதால், உடனே எழுந்து தன் காரில் நேரே சுரேந்திரனின் வீட்டை நோக்கிப் புறப்பட்டாள்.

33

"ஹா! கடவுளே! என் மனமறிய நான் ஒரு குற்றமும் பிறருக்குச் செய்ததில்லையே! உபகாரம் செய்தது உபத்திரவமாக முடிந்து என் பிதாவின் மானத்திற்கு ஹானி விளைவித்ததோடு மட்டும் நின்று விடும் என்று பார்த்தேனே! என் ஜீவிதம் முற்றிலும் என் விதி என்னைச் சுழல் காற்றுபோல் சுழற்றியடிக்கிறதே என்ன செய்வேன்? என்னால் தாங்கமுடியவில்லையே. எதற்காக என்னை இவ்விதம் தண்டனைக்குள்ளாக்குகிறாய்? என்மீது உனக்கு இத்தகைய கடினசித்தம் உண்டாவதற்கு நான் என்ன அத்தனை கொடிய பாபத்தைச் செய்தேனோ தெரியவில்லையே?" என்று சுரேந்திரன் தனக்குள் அலற்றிக்கொண்டே புரளுகிறான்.

அவன் தாயார் கோதுமைத் தவிட்டை வறுத்து ஒத்தடங் கொடுத்துக்கொண்டிருக்கிறாள். அலமுவும் பக்கத்தில் உட்கார்ந்து தடவியவாறிருக்கிறாள். அச்சமயம் வீதியில் கார் வந்து நின்ற சப்தத்தைக் கேட்டு அலமு எழுந்துவந்து நடைப்பக்கம் எட்டிப் பார்த்தாள். நிர்மலா வருவதை யறிந்ததும் அலமு தன்னை மறந்து தலைகால் தெரியாத கோபத்துடன், "வந்துவிட்டாயாடியம்மா! என் தர்மதேவதையே! உன்னால் எங்கள் குடும்பத்திற்கே ஆபத்துதான் வந்து சுற்றிக்கொண்டுவிட்டது. என்ன இருந்தாலும் தேவடியாள் புத்தி மாறுமா என்ன? போரும்! போரும். நீ போய் விட்டு வா! மகராஜீ!" என்று துடுக்காகவும், சுடுசரம்போன்றும் கூறினாள்.

இம்மாதிரி ஒரு கேள்வி இங்கு பிறக்கும் என்பதைக் கனவிலும் நினையாது வந்த நிர்மலாவுக்கு இதைக் கேட்டதும் ஆகாயமும் பூமியும் ஒரேயடியாகச் சுழல்வதுபோலாகிவிட்டது. துக்கமும் ஆச்சரியமும் அவள் நெஞ்சில் பெரும்பாறையைப்போல் அடைக்கின்றன. கண்கள் அணைகடந்த வெள்ளம்போலாகிவிட்டன. தன்னையொருவாறு சமாளித்துக்கொண்டு, "அலமு! நீயா பேசுகிறாய்? என்னைப் பார்த்தா பேசுகிறாய்! என்னை வேறு யாரோ என்று நினைத்துப் பேசிவிட்டாயா?" என்று முடிப்பதற்குள்....

அலமு படபடத்த குரலில் "எனக்கு இன்னும் அத்தனை ஆள்மாருட்டம் வந்துவிடவில்லை. தாசிகளின் மாணிக்கமாகிய நிர்மலா தேவிதான் தாங்கள் என்று அறிந்துதான் பேசுகிறேன். உன்னை யாரோவென்று மிரண்டுபோகவில்லை. நீ என் அண்ணன் மீது கண்ணைவைத்ததானது எங்கள் குடிக்கே கொள்ளிவைத்தது போலாகிவிட்டது. போதும் உன் சகவாஸம். போகலாம். இங்கு உனக்கு ஒரு வேலையுமில்லை" என்று அலக்ஷியமாகக் கூறினுள்.

நிர்மலா :—(தழதழத்த குரலில்) அலமு! என்னுலா உங்கள் குடிக்கு அனர்த்தம்? என்னுலா உங்களுக்கு ஆபத்து? நீ என்ன காரணத்தினுல் இப்படிப் பேசுகிருய்? நான் உனக்கு இன்று புதிதாகத் தோன்றுபவளல்லவே? ஆதிமுதல் பள்ளிக்கூடத்தில் படித்த சிநேகிதை என்பதைக்கூடவா மறந்துவிட்டாய்! நான் உன் அண்ணனை என்ன செய்துவிட்டேன்? அவரை நான் தெய்வமாக வல்லவோ எண்ணியிருக்கிறேன். அத்தகையவருக்கா நான் தீமை செய்வேன்? ஐயோ! அலமு! என்மீது பழி சுமத்தாதே! என் மனத்தை நோகவைக்காதே!

அலமு :—போருமடீ! உன் மனம் நோகச் செய்துவிட்டால், மகா உத்தமியாகிய உன் சாபத்தால் எரிந்து போய் விடுவேனே! நீ என்ன விருப்பினும் தேவடியாள் என்பதை மறந்து பேசுகிருயா? தேவடியாளுக்கு அன்பு சுரக்குமல்லவா! ஐயோ பாவம்! கறப்பதற்கு என் அண்ணனிடம் ஒன்றுமில்லையாதலால் அவனை வெறுப்பதற்கு இதையொரு கருவியாக உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிருய்.

நிர்ம:—ஹா....ஹா....என்ன! என்ன! உன் அண்ணனிடம் நான் பணங்கறப்பதற்கா அன்புள்ளவள் போல் நடித்தேன் என்கிருய்! நானு இந்த ஆபத்தை விளைவித்தேன். ஐயோ! கடவுளே! கடவுளே! அலமு! நீ என்னைப் பற்றி என்னதான் எண்ணிய போதிலும் நான் எத்தகையவள் என்பது எல்லாம் வல்ல இறைவனுக்குக் கூடவா தெரியாமல் போய்விடும். அது ஒரு நாளும் போகாது. அலமு! நீ என்னை மடக்குவதைப் பார்த்தால் நான் அவரைக் கண்ணுல் பார்க்கக் கூடாது என்று தடுப்பது

போலிருக்கிறதே. நான் ஒரு நிமிடம் அவரைப் பார்த்துவிட்டுப் போய்விடுகிறேன்.

சுரேந்திரனிடமிருந்த ராஜமும் பரபரப்புடன் எழுந்து வந்து விரைப்பான பார்வையுடனும் முடுக்கான குரலுடனும் பேசத் தொடங்கி 'அம்மா! அலமூ! உள்ளே எழுந்துவாடியம்மா! உன் அண்ணன் தேவடியாளுடன் ஊர் சுத்துகிறுன் என்கிற அபவாதத்திற்கே உன்னைக் கட்டவருகிறவர்களெல்லாம் போய் விடுகிறுர்கள். நம் போதாக்காலத்தினுல் நீயே தேவடியாளுடன் பேசிக்கொண்டிருப்பதை யாரேனும் பார்த்துவிட்டால் அதுவே நமது தலைக்குக் கொள்ளி. போதும்; எழுந்து உள்ளே போ!" என்றுள்.

அலமு நிர்மலாவை கோபமும் அலக்ஷியமும் கலந்த ஒரு பார்வை பார்த்துவிட்டு உள்ளே போனுள். இந்தப்பார்வையும் ராஜத்தின் சுடுசரம்போன்ற வார்த்தைகளும் நிர்மலாவின் இதயத்தில் நெருப்புத்தணலை அள்ளிக்கொட்டியதுபோல் தாங்கவியலாத அபாரமான வேதனையை உண்டாக்கிவிட்டன. அவள் தத்தளித்துக் கொண்டிருக்கையில், "நீ போய் வாடியம்மா! என் குடித்தனத்தை இம்மட்டும் உருப்படவைத்ததுபோதும். உனக்குக் கோடி புண்ணியமுண்டு. அவனைப் பார்த்துப் பார்த்துத்தான் முடிந்துவிட்டதே. இன்னும் என்ன பார்வை. உயிர்மட்டும் போகாதிருக்கிறது" என்று ராஜம் ஆவேசத்துடன் கூறினுள்.

நிர்மலாவினுல் தாங்கவே முடியவில்லை. கண்ணீர் பெருக "அம்மா! நீங்களுமா என்னை இப்படிப் பேசுகிறீர்கள்? அலமுவுடன் நான் படிக்கையில் 'நீ தப்பித்தவறி அந்த பாழுங்குப்பையில் பிறந்துவிட்டாய். நீயும் அலமுவைப்போல் ஒரு குழந்தைதான்' என்று சொல்லியதை மறந்துவிட்டீர்களா! நீங்களா அதே வாயால் என்னை இவ்விதம் சொல்வது? என் மீது ஒரு குற்றமும் இல்லை. என்னுயிர்நிலையை ஒருதரம் பார்த்துவிட்டுப் போய்விடுகிறேன்" என்று கெஞ்சிக்கேட்டாள்.

ராஜம் சற்றும் சளைக்காமல் "ஐயோ! விதியே! விஷத்தைப்போய் அமிருதம் என்று ஏமாந்தது என் குற்றந்தான்

அதற்கு நான் படும் அவஸ்தை போதும். வீண்பேச்சு எதற்கு? போய்விடு" என்ருள்.

நிர்மலாவும் பிடிவாதமாய் "அம்மா! என் வயிறெரியச்செய் வதைக் கடவுள் சகிக்கமாட்டார். அவர் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுதானிருக்கிருர். நீங்கள் என்னை என்னதான் திட்டி உதா சீனமாகப்பேசினுலும் நான் என் இன்பவடிவை ஒருமுறை பார்க் காமல் போகமாட்டேன்" என்று உரத்துக்கூறினுள்.

அதற்கு ராஜம் "ஊஹூம். முடியாது. வெட்கங்கெட்டவளே! இன்பமாம்.வடிவமாம். நீதான் மாயாவடிவம்கொண்டுப் பாழாக்கி விட்டது போதும். போடீ" என்று பின்னும் கடுமையாகப்பேசி ளுள். அப்போதுதான் இந்த தர்க்கத்தை கவனித்த சுரேந்திரனு க்கு நிர்மலாவின் வார்த்தைகள் அவன் மனத்தை உருக்கியதால், அவனல் ஊமை போலிருக்க முடியவில்லை. "அம்மா! அம்மா! நிர்மலாவைத்திட்டாதே. துரத்தாதே!....நிர்மலா! நிர்மலா! உள்ளே வா! உள்ளே வா! அம்மா! அவளை விடு; விடு."என்று கத்தினுன்.

ராஜம் ஆத்திரத்துடனேயே, "ஐயோ! வெட்கக்கேடே! வயித் தெரிச்சலே. எனக்கு மானம் போகிறதே. அக்னி சாக்ஷியாகத் தொட்டுத்தாலி கட்டியவர்கள் கூட லஜ்ஜையினுல் அஞ்சுவார்கள். உங்கள் பவிஷுக்கு அந்த லஜ்ஜை கூட செத்துப்போய்விட்டதா? நீ கூப்பிடும் அழகும் அவள் வரும் அழகும் யாராவது பார்த்தால் காரித்துப்பிக் கைகொட்டிச் சிரிப்பார்கள். போய்விடு. உன் குலா வல் போதும். என் கண் முன்பும் உன் நடனம் வேண்டாம். போ போ; மரியாதையாய்ப்போ" என்ருள்.

அதே சமயம் அலமு "அம்மா 'மயிலே! மயிலே! இறகு போடு, என்ருல் போடுமா! இந்த தேவடியாள் சிறுக்கியின் தாக்ஷிண்யம் நமக்கு எதற்கு? இவள் மான்யத்தில்தான் நாம் பிழைக்கிருேமா! மரியாதையாய் போகாவிடின் கழுத்தைப் பிடித்துத்தள்ளிவிடுகி றேன் பாரு"என்று கூறிக்கொண்டே ஓடிவந்தாள்.

இந்த வார்த்தையும் காதில்பட்ட சுரேந்திரன் மனத்தில் ஆயிரம்வாள்கொண்டு அறுப்பதுபோலாய்விட்டது. "அலமு! அலமு! வாயை மூடு; வாயை மூடு. நிர்மலா! நிர்மலா!" என்று கூவிக்

கொண்டே நடக்கமாட்டாது தத்தளித்தபடியே எல்லோரும் வியக்கும் வண்ணம் நடைக்கு வந்தான். அவனுடைய அலங்கோலத்தையும் பரிதாபத்தையும் பார்த்துசகியாத நிர்மலா, "ஆ! என் ஸ்வாமி! இதென்ன அலங்கோலம்? நீங்கள் ஏன் எழுந்து வந்தீர்கள்? ஐயோ ! போய் படுத்துக்கொள்ளும். இப்படி தத்தளிப்பதைப் பார்க்க நான் என்ன பாபம் செய்தேனே?" என்று வாய் விட்டு அலறிவிட்டாள்.

சுரேந்திரன் தன் தாயும் சகோதரியும் வியக்கும்படி "நிர்மலா நிர்மலா! நேற்றே இப்பொழும் உயிர் போயிருந்தால் நிம்மதியாகி இருப்பேன். அதை நீ தடுத்துக் காப்பாற்றி விட்டாய். இன்றும் உன்னுடைய அன்பே என்னைக் காப்பாற்றி விட்டது. கண்ணே! உள்ளே வா. வா. ஏன் தியக்கம்? வா! வா...." என்று அன்போடு அவள் கையைப் பிடித்துக் கொண்டான்.

நிர்மலா:—அன்பரே! தங்களை இப்பொழும் கண்ணால் பார்க்க பாக்கியம் கிடைத்ததே அதுவே போதும். இப்பாவியின் இதயம் குளிர்ந்தது. நான் கேவலம் ஓர் தேவடியாள் சிறுக்கி. நீங்கள் உயர் குடும்பத்துப் புனிதர்கள். நான் உங்கள் தாயாருக்கும் சகோதரிக்கும் விரோதமாக உள்ளே வரவில்லை. நான் போகிறேன். என்னை மன்னியுங்கள். கடவுள் உங்களைக்காப்பாராக. வந்தனம்....அம்மா! அலமு! இருவருக்கும் என் வந்தனம்" என்று மாலை மாலையாகக் கண்ணீர் பெருகியவாறே சுரேந்திரனின் கைகளைக்கண்ணில் ஒத்திக்கொண்டு திரும்பிக்கூடப் பார்க்காமல் சடக்கென்று காரில் அமர்ந்து போய் விட்டாள்.

சுரேந்திரன் "நிர்மலா! நிர்மலா!" என்று எத்தனை அழைத்தும் உபயோகமற்று விட்டதும், அவன் இதயம் உடைந்து எங்கும் இருள் சூழ்ந்து கொண்டதுபோலாய்விட்டது. அவனால் தாங்க முடியாத துக்கத்துடன் மீண்டும் தள்ளாடியவாறு நடந்து சென்று தடாரென்று படுக்கையில் விழுந்தான்.

34

தன்னிறை யழிந்த நிர்மலா விசனப் பதுமைபோல் காரில் வந்து உட்கார்ந்ததும், தான் கார் ஓட்டினால் கண்டிப்பாக விபத்து நேருமென்று தெரிந்துவிட்டதால் ட்ரைவரைக் கார் ஓட்டச் சொல்லிவிட்டு உள்புறம் உட்கார்ந்தாள். தான் முதலில் டாக்டர் வீட்டிற்குச் செல்லவேண்டுமென்று வந்த எண்ணமும் அடியோடு மறந்துபோய்விட்டது. தனக்கு இத்தகைய அவமானம் நேரிடுமென்று அவள் கனவிலும் நினைக்கவில்லையாதலால் இங்கு நடந்த சம்பவமும், சுரேந்திரனின் நிலைமையும் அவளை முற்றிலும் பித்துப்பிடித்தவள்போலச் செய்துவிட்டன.

ட்ரைவர் "அம்மா! காரை எங்கு ஓட்டுவது? டாக்டர் வீட்டிற்கா! வீட்டுக்கா?" என்று பலமுறை கேட்டும் நிர்மலாவின் செவியில் விழவே இல்லை. அலமுவும் அவள் தாயாரும் சொல்லிய இழிவான கடுமையான வார்த்தைகளும் சுரேந்திரன் கூறிய வார்த்தைகளும் காதிலேயே ஒலித்துக்கொண்டிருந்ததால் ட்ரைவர் சொல்லியது எதுவுமே காதில் விழவில்லை. அந்த மோட்டாரின் உள்ளுக்குள்ளேயே கிறுகிறு என்று சினிமா சுற்றுவதுபோல் சுற்றுவதால் அந்த உணர்ச்சியின் அதிர்ச்சி அவள் முகத்தில் ஜ்வலிக்கின்றது.

அவள் எந்தவிதமான பதிலும் சொல்லவில்லையாதலால் ட்ரைவர் எவ்விதம் காரையோட்டுவது என்று தெரியாமல் திகைத்தான். சற்று காரை நிறுத்திவிட்டு நிர்மலாவைத் திரும்பிப் பார்த்தான். அவள் உட்கார்ந்திருக்கும் கண்ராவி ட்ரைவரைத் தூக்கி வாரிப்போட்டது. 'என்ன காரணம் இப்படி கண்ணீர் வருகிறது' என்று தனக்குள் நினைத்தபடியே "அம்மா! காரை எங்கே விடுவது? ஸ்டுடியோவுக்கா, வீட்டிற்கா? டாக்டர் வீடும் தாண்டிவிட்டதே!" என்று கேட்டான்.

ஸ்டுடியோவுக்கா என்று உரத்துக் கேட்டபோதுதான் சிறிது உணர்ச்சிபெற்ற நிர்மலா "ஸ்டுடியோவுக்கு வேண்டாம். டாக்டர் வீட்டிற்கே திரும்பிப்போ" என்றாள். உடனே டாக்டர் வீட்டு

வாசலில் கார் வந்து நின்று நிர்மலா பழயபடி லேடீஸ் ரூமில் போய் உட்கார்ந்தாள். அங்கு இன்னும் சில பெண்கள் இப்போது உட்கார்ந்திருந்ததால் அவளால் அங்கு உட்கார முடியாது சங்கடமாயிருந்தது.

அடுத்த நிமிடமே டாக்டர் அங்கு வந்தார். அவர் நிர்மலாவைப் பார்த்ததும் "ஓ! என்ன உடம்பு?" என்றார். 'ஒன்றுமில்லை. கொஞ்சம் ஜுரமாக விருக்கிறது' என்றாள். மற்றபெண்கள் வெகு நேரமாகக் காத்திருப்பதால், டாக்டர் அவர்களைப் பார்த்து மருந்து சீட்டு கொடுத்து மருந்து செய்யும் இடத்திற்கு அனுப்பிவிட்டு, நிர்மலாவுக்குக் கை பார்த்தார்.

அவள் முகத்திலும் கையிலும் பலத்த அடிகளின் வீக்கத்தையும் ரத்தங் கட்டிக்கொண்டிருக்கும் உருண்டைகளையும் பார்த்து "இதென்ன நிர்மலா! ஜுரம் என்று சொன்னாயே. இத்தனை காயங்கள் எப்படி உனக்கு ஏற்பட்டன? சுரேந்திரனைப்போல் உனக்கும் ஏதாவது அம்மாதிரி சம்பவித்ததா என்ன? ஏனெனில், இரண்டு பேரும் ஸ்டாராயிற்றே!" என்று கேட்டார்.

நிர்மலா:—எனக்கு அப்படிக்கொன்றும் சம்பவிக்கவில்லை. சுரேந்திரனுக்கு நீங்கள்தான் வயித்தியம் செய்கிறீர்களா. அடி ரொம்ப ஜாஸ்தியாமே. அபாயமொன்று மில்லையா?—என்று ஒரு விதமான அன்புடன் கேட்டாள்.

டாக்டர்:—இன்றைக்கே என்னத்தை சொல்ல முடியும்மா! அடி என்னமோ பலமாகத்தான் பட்டிருக்கிறது. மனிதன் தாங்குகிற அடியல்ல அது. என்ன சினிமாவோ, என்ன க்ஷாத்திரமோ தெரியவில்லை. அவன் தாயும் சகோதரியுங்கூட என்னிடம் கெஞ்சி அழுகிறார்கள். நான் என்ன செய்வேன்? தைரியங் கூறிக்கட்டுக் கட்டி விட்டு வந்திருக்கிறேன். இதுயார் செய்திருப்பார்கள் என்று ஏதாவது தெரியுமா?....அது கிடக்கட்டும் உன் உடம்பில் என்ன அடி இது?

நிர்மலா:—டாக்டர்! இது என் தலைவிதியின் கூற்று. இந்தப் பாழாப்போன ஜாதியில் நான் ஏன் பிறந்தேன் என்று இரவுபகலாகக்கதறுவது தான் உங்களுக்குத் தெரியுமே. அந்த ஜாதி விபரீதத்

தின் விளைவு இது. நேற்று என்னைக் கண்டிக்க வேண்டி தாசி களில் சிலர் கூட்டம்போட்டுப் பேசிக்கொண்டிருக்கையில், அங்கு, நான் சென்று எதிர்த்துப் பேசினேன். அதற்குப் பலன் இது. இதற்காகவா நான் பயப்படப்போகிறேன். உங்களைப்போன்ற பெரிய மனிதர்களின் தயவு மட்டும் எனக்குப் பரிபூர்ணமாக இருக்குமாயின், என் ஜீவியத்திற்குள்ளேயே நான் எடுத்த காரி யத்தின் வெற்றியைக் கண்டு, இதயம் பூரித்துப் பின்னர் சாவேன். அதற்குள் என்னைக் கொலை செய்தாலும், என் பைசாசமும் இதற்குத்தான் அலைந்து திரிந்து தாசிகளைப் பிடித்து ஆட்டும்.

டாக்டர் :—நிர்மலா! என்ன ஆவேசம் உனக்கு? வெகு நாட்க ளாக வேரூன்றிப் போய்விட்ட இப் பாழும் ஜாதித் தொழில் இவ் வளவு சீக்கிரம் விட்டுப்போய் விடுமா! கொஞ்சங் கொஞ்சமாகத் தான் ஒழியவேண்டும். இதற்காக நீ உன்னைப் பாழாக்கிக் கொண் டால், அது நல்லதா! உன்னுடைய தேகத்தில் இந்த முரட்டு அடி தாங்குமா?

நிர்மலா :—டாக்டர்! இதென்ன! நீங்கள் கூடவா இவ்விதம் பேசுவது? படித்தவர்களும் அறிவாளிகளும், பெரிய மனிதர்களும் இதுபோன்ற அக்கிரமத்திற்கு எதிர்த்துப் போராடினுல் ஏன் நிற் காது? 'தேவதாசிகள் சீர்குலைந்த வாழ்க்கை நடத்தக் கூடாது. எல்லோரும் கட்டாயம் கல்யாணம் செய்துகொண்டுதான் ஆக வேண்டும்' என்று ஒரு சட்டம் வந்து விடுமாயின், அதன்பிறகு இம்மாதிரி நடக்க முடியுமா?

டாக்டர் :—நிர்மலா! எத்தனையோ படித்தவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இப்போது பலவித சட்டங்கள்தான் கொண்டுவந் திருக்கிறார்கள். அதை நீ பார்க்கவில்லையா? எல்லோரும் கல்யாணம் செய்துகொண்டுவிட்டால், கோவில் கைங்கரியங்களை யார் பார்ப் பார்கள்?

நிர்மலா :—டாக்டர்! தற்போது கோவில் கைங்கர்யத்தை நூற் றுக்கு எத்தனை பேர்கள் செய்கிறார்கள் என்று நினைக்கிறீர்கள்? கோவில் மானியத்தைத் தின்றுகொண்டு முறையே செய்யாது மோசம் செய்வதைவிட அது குறைந்து விட்டதா! பக்தி சிரத்தை

யுடன் பகவானுக்குக் கைங்கர்யம் செய்வதைத் தவிர வேறு பிரவர்த்தகத்தில் தலையிடாதபடி சீரிய ஒழுக்கத்துடன் புராதனகொள்கையைச் செய்ய சக்தியுள்ளவர்கள் செய்யட்டும். அது செய்ய இயலாதோர் வீணாக மானங்கெட்டுப் பிழைக்க வேண்டாமல்லவா?....

டாக்டர் :—நிர்மலா! மணி போய்க்கொண்டே இருக்கிறது. பேஷண்டுகள் நிறையக் காத்திருக்கிறார்கள். நான் வருகிறேன். இந்த ஆயிண்ட்மெண்டைத் தடவி வெந்நீர் ஒத்தடம் கொடு. இந்த மருந்தைச் சாப்பிடு; எப்படி இருக்கிறதென்று சொல்லியனுப்பு.

நிர்மலா :—சரி! நான் வருகிறேன். சுரேந்திரனைச் சற்று ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுங்கள்—என்று கூறிவிட்டு மருந்துகளை வாங்கிக்கொண்டு போய்விட்டாள்.

வீட்டிற்குச் சென்றால், அவள் மனநிலை நிம்மதியாக விருக்கவில்லை. யார் சுரேந்திரனுக்கு இத்தகைய பேராபத்தை விளைவித்திருப்பார்கள்? நடிகக் கூட்டமாக விருக்குமா? அன்றி, தேவதாசிகளின் சூழ்ச்சியாக இருக்குமா? டைரெக்டரின் சதியாலோசனையாக விருக்குமா? அல்லது அவருக்கே யாரேனும் பகைவர்கள் இருப்பார்களா?

ஐயோ! மகா பாவியாகிய நான் அவர்மீது அன்புசெலுத்தியதால்தான் என்னுடைய விதி அவருக்கும் வாடை அடித்துவிட்டது போலிருக்கிறது. கடவுள் என்னை ஏன் இப் பாழுங் குலத்தில் பிறப்பிக்க வேண்டும். அம்மாதிரி பிறந்ததனால்தான் என் பெயரைச் சொல்லுகிறவர்களுக்கும் இழிவு உண்டாகிறது. ரகஸ்யத்தில் அந்தரங்கமாய் ஆயிரம் பிரபுக்களும் உயர்தரத்தினரும் உறவு கொண்டாடினாலும் பகிரங்கத்தில் விலக்கித் தள்ளும் கொடுமையைச் சகிக்கமுடியவில்லையே!

ஆம்! எப்படி பகிரங்கமாகக் கொண்டாட முடியும்? இப் பாழும் ஜாதியினர் செய்யும் ஊழல்களின் துர்மணம் தலைக்கேறி யிருக்கையில், யார்தான் அந்த நாத்தத்தைச் சகிப்பார்கள். அவஸ்தைப் பட்டுச் சாகவேண்டுமென்று என் தலையில் எழுதி யிருக்கையில், அதை மாற்ற யாரால் முடியும்? "நிர்மலா! உன் கதி இதுதான்; உன் ஜீவியச் சுழல் இன்னும் என்னென்ன விதமாக சுழலப்போகின்

றதோ; அதை யனுபவிக்கத் தயாராக விரு. தயங்காதே! பயப் படாதே! எது எப்படி அனுபவித்தாலும் நீ எடுத்த காரியத்தை மட்டும் முடிக்காது சாகாதே!....உன் காதலைக் கடலில் எறிந்து தலைமுழுகு. தேவடியாளுக்குக் காதலா? இல்லை. இல்லை. அவஸ்தைப் பட்டுச் சாதல்தான் உன் தலைவிதி. உன் காதல் இனி அக்னி பக வானுக்குத்தான் இரை. ஜாக்ரதை. மறு பிறவிக்காவது உயர்ந்த ஜாதியில் பிறக்க உனக்கு அனுக்ரகம் செய்ய வேண்டி பகவானைப் பிரார்த்தனை செய். உன் உயிர்க்காதலனின் உடம்பு குணமாக வேண்டுமென்று பகவானை இரவு பகல் வேண்டு. இதுதான் உன் காதலுக்குப் பலன்" என்று பைத்தியம் பிடித்தவள்போல், தன் போக்காகப் பேசிக்கொண்டே படுத்திருந்தாள்.

அச்சமயம் ஒரு கடிதம் ஸ்டுடியோவிலிருந்து வந்தது. அதை வாங்கி, நிர்மலா அசிரத்தையாக உடைத்துப் படிக்க வாரம் பித்தாள்.

"நடிகை நிர்மலாவுக்கு!

நீ உன் அக்ரிமெண்டின்படி நடந்துகொள்ளாத தால், எங்களுக்கு ஆயிரக்கணக்கில் நஷ்டம் ஏற்பட்டு விட்டது. இப்போதும் இதை எச்சரிக்கைக் கடிதமாக எழுதுகிறேன். இரண்டு நாட்களாய் நீ ஸ்டுடியோ வுக்கு வாராததால் இந்த இரண்டு நாளைக்குமட்டும் ஆயிரம் ரூபாய் நஷ்டமாகிவிட்டது. இனியும் வராது நஷ்டத்தை யுண்டாக்கினுல், சரியானபடி நஷ்ட ஈடு வழக்கு உன் மீது தொடரப்படும். உன்னுடன் கதாநாயகனுக நடிப்ப தற்கு டைரெக்டரையே அமர்த்தியாகிவிட்டது. அனு பவமும் திறமையும் வாய்ந்த நடிகர் இனி அவரைவிட அகப்படமாட்டார்கள். எங்கள் பணத்திற்கு நஷ்ட மில்லாது நாங்கள் பார்க்கக் கடமைப்பட்டிருப்பதால், நீ தேர்ந்தெடுத்த மனிதனுல் எங்களுக்கு நஷ்டந்தான் வரும் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. ஆத லால், உடனே ஸ்டுடியோவுக்கு வந்து, உன் வேலையை

நிறைவேற்று. மறுத்தாலோ பெரிய கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் உள்ளாவாய் என்பது மட்டும் ஞாபகமிருக்கட்டும்.

இங்ஙனம்,

முதலாளி"

அதைப் படித்ததும் கடிதத்தை அலக்ஷியமாக வீசி மேஜைமீது எறிந்தாள். "முதலாளீ! மற்ற நடிகர்களை எல்லாம் ஆட்டி வைப்பது போல், இந்த நிர்மலாவையும் ஆட்டி வைக்கலாமென்று நினைக்காதே! அக்ரிமெண்டைச் சரியாகக் கவனிக்காமல் கடிதம் எழுதிவிட்டால், அது ஒருபலனும் தராது என்பதை மறந்து ஏமாறுதே!" என்று தனக்குள் சொல்லிக்கொண்டிருக்கையில், ஓயிலாம்பாள் அலையக்குலைய அங்கு ஓடிவந்தாள்.

அவளுடைய பதட்டத்தில் தாறுமாருகப் பேசத் தொடங்கி, "அடீ பாவி! இப்படி செய்யலாமா! அந்த முதலாளி ஒரு ஆளை யனுப்பி, திட்டு திட்டு என்று திட்டிவிட்டுப் போகிருனே! உன்மீது நஷ்ட வழக்குப் போட்டு உன்னையும் என்னையும் ஜெயிலில் வைத்து விடப்போகிருனுமே! ஐயோ! அவமானமே! உனக்கு மானஹீனமில்லையா! நாம் பிறந்த பெருமை என்ன? நம் பெரியோர்களின் கண்ணியமென்ன? இப்போது பிழைக்கும் பிழைப்பென்ன? நீ நாசமாய்ப்போக! ஜெயிலிலாடீ நம்மளை வைத்து ஜனங்கள் சிரிக்க வேண்டும்?" என்று தலையிலடித்துக்கொண்டாள்.

நிர்மலா அலக்ஷியமாயும், ஆத்திரமாயும் ஒரு சிரிப்பு கல்லென்று சிரித்துவிட்டு, முகத்தைச் சுளித்துக்கொண்டு, "உம். இந்தப் பாழும் ஜாதியை அப்படியே ஜெயிலில் வைத்துவிட்டால், என்மனம் சந்தோஷமாயிருக்கும். அப்போது மானங்கெட்டுப் பிழைக்க முடியாதல்லவா? இல்லையேல் ஒரு பெரிய பிரளயம் வந்து அக்கிரமம் செய்யும் தாசிகளின் கூட்டத்தைமட்டும் அடித்துக் கொண்டு போய்விட்டால் நான் ஆனந்தப்படுவேன். அம்மா! இந்தப் பாழும் ஜாதியில் பிறந்து மானங்கெட்டுப்போய் பலர் முன்பு உலாவுவதைவிட ஜெயிலில் நிம்மதியாகவிருப்பதே நலம். ஆகையால், அந்த முதலாளி மறுபடியும் வந்தால் 'ஜெயிலில் இருக்கத் தயாராகவிருக்

கிறுளாம்' என்று தைரியமாகச் சொல்லிவிடு. தெரிந்ததா! சரி போய் வா!" என்று கூறினுள். ஒயிலாம்பாளுக்கு எப்படித் தானிருக்கும். கண்களில் நெருப்புப் பொறி பறக்கிறது. வெந்த புண்ணில் மிளகாய்த் தூளைத் தூவியதுபோல் உடம்பு எரிகிறது. "ஆஹா! இத்தனை மண்டைக்கொழுப்பாடீ உனக்கு? இருக்கட்டும் இருக்கட்டும்" என்று பெரிதாக உறுமினுள். நிர்மலா அதைக்கண்டு அலக்ஷியமாக நகைத்தாள். இருவரின் சப்தங்களும் அவ்வறையில் போட்டியிட்டன.

35

ஒருவார காலம் எப்படியோ ஓடி மறைந்து விட்டது. ஜீவா தன் முயற்சிக்கு எந்தக் காரணத்தைக் கருவியாகக் கொள்ளலாம் என்று யோசனை செய்து பார்த்து, கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தாள். அதாவது, தான் ஒரு சிறிய வீட்டை விலைக்கு வாங்கி, அதில் கிரகப்பிரவேசம் செய்யும் மூலம் எல்லோரையும் டீ பார்டிக்கு அழைத்து, அந்த சமயம் எப்படியாவது சாகசக்யம் செய்து நிர்மலாவுக்கு அந்த மருந்தைச் செலுத்திவிட வேண்டும். இந்த சமயத்தை விட்டால், அந்தக் காரியம் நடப்பது துர்லபம் என்று மணியும் அவளுமாகத் தீர்மானம் செய்து, முடிவு கட்டிக் கொண்டாள்.

திடீரென்று வீடு வாங்க பணம் எப்படிக் கிடைத்தது என்ற வதந்தியும் பரவாதிருப்பதற்காக தன்னுடைய நகைகளில் சிலவற்றைப் பகிரங்கமாக விற்பதுபோல் அபிநயங் காட்டிப் பணத்தைச் சேர்த்துக்கொண்டாள். குடி யிருக்கும் வீட்டில் கஷ்டப்பட முடியவில்லை என்றும், எப்படியாது ஒரு சிறிய குடிசையாவது தனக்கென்று சொந்தமாக இருந்தால்தான் நல்லது என்றும், அதற்காக நகைகளையும் விற்று வீடு வாங்குவதாக எல்லோரிடமும் கூறிக் கொண்டாள்.

உண்மையில் பணம் வந்த வழி பகவானுக்கே அர்ப்பணம். நிர்மலாவுக்குத்தான் பயித்தியம் பிடித்துவிடப்போகிறது. இனி பணத்தைப்பற்றி அவளுக்கு ஒன்றும் தெரியாது. ஒயிலாம்பாளும்

கவலையில் மூழ்கி விடுவாள். ஆதலால், அவளுடைய சினிமாவுக்காக வாங்கிய பணம் முற்றும் ஜீவா தன்னுடையது என்ற வரையில் தீர்மானம் செய்துகொண்டாள். ஆனல், இந்த யோசனையை ஒயிலாம்பாளிடம் வெளியிடுவாளா!

ஒயிலாம்பாளிடம் ரகஸ்யமாக, "அத்தே! கம்பெனிக்காரன் என்னமோ சும்மா விடமாட்டான். நஷ்ட ஈடு என்ருல் சாமான்ய மாயிருக்காது. ஒரு லக்ஷ ரூபாய்க்குக் குறையாமல் கறந்து விடுவானும். அவள் என்னவோ வெகு அலக்ஷியமாக விருக்கிருள். இப்போது பெட்டியிலுள்ள பணம் நகை எல்லாவற்றையும் அவன் எடுத்துக்கொண்டு போய்விடுவான். நீ முன்ஜாக்கிரதையாக அவைகளையாவது ஒளித்து வைத்திருந்தால், உன் பிற்காலத்திற்கு உதவும். நீ யோசனை செய்து பத்திரமாய் காரியத்தைச் செய்" என்று மெல்ல ஊசி ஏற்றுவதுபோல் வார்த்தையை விட்டாள்.

ஒயிலாம்பாளுக்கு இன்னும் அதிகமாக பயம் பிடித்துக் கொண்டது. ஒயிலாம்பாள் ஜீவாவின் கையைப் பிடித்துக்கொண்டு, "ஜீவா! என்னை எந்தச் சமயத்திலும் காப்பாத்துவது உன் கடமையாக விருக்கிறது. இதோ பாரு. இன்று இரவு நிர்மலா தூங்கிய பிறகு சகலமானவற்றையும் எடுத்து மூட்டை கட்டி உன்னிடம் கொடுத்துவிடுகிறேன். நீ ஜாக்கிரதையாக அவற்றை வைத்திருந்து என்னிடம் கொடு. நானே அவைகளை எப்படி மறைப்பது என்று தான் யோசனை செய்துகொண்டிருந்தேன். நல்ல வேளை உனக்கும் அது தோன்றியது" என்று சந்தோஷமாகவே கூறினாள்.

மறுதினமே ஜீவாவின்மீது வீட்டுப் பத்திரம் ரிஜிஸ்தராய் விட்டதென்ருல், அதற்குள் எல்லாம் அடங்கி விட்டதல்லவா? வீட்டுக்கு 'ஜீவமணி' என்ற பெயரைச்சூட்டி போர்ட் மாட்டிவிட்டாள். டீ பார்ட்டி வெகு அழகாயும் உயர்தரமாயும் செய்யும் பொருட்டு ஏற்பாடுகள் செய்துவிட்டாள். முதலாளியின் காரை இரவலுக்காக எடுத்துக்கொண்டு, மணியும் ஜீவாவும் பறக்கிருர்கள். கடைக்குப் போகவும் பர்னிசர்கள் வாங்கவும் மின்சார விளக்குத் தோரணங்கள் வாங்கவும் தடபுடல் படுகிறது.

ஜீவா அனேகம் பெயரை நேரிலேயே அழைக்கும்போது 'எனக்கென்ன குழந்தையா! குட்டியா! அல்லது அக்கா தங்கைகள் தான் உண்டா? ஒரு கல்யாணத்திற்கும் கார்த்திக்கும் வழியில்லை. இந்த வீட்டுக்கிரகப்ரவேசத்தையாவது சிறப்பாகச்செய்து பார்க்க வேண்டுமென்ற ஆசையினால் இதைச் செய்கிறேன். தவறாது வரவேண்டும்" என்று பல்லவி பாடிவந்தாள்.

நிர்மலாவிடம் இந்தப் பல்லவி பலிக்குமா? நிர்மலாவுக்குத் தக்கபடி அவளை அணுகி, "நிர்மலா! எங்களை அனாதியாக எங்கள் தாயார் போட்டுவிட்டு மறைந்ததற்கு உன்தாயாரே என்தாயார் போல் வளர்த்தாள். அவள் ஆசியால் இந்தமட்டும் விருத்தியாகி ஒரு வீடு வாங்கும் பாக்யம் கிடைத்தது. நீ கட்டாயம் அன்று முற்றும் என்னுடனேயே இருக்கவேண்டும். நீ வராவிட்டால், என் மனம் பொறுக்காது" என்று எல்லாம் கூறி அழைத்தாள்.

நிர்மலாவும் தான் வருவதாக மட்டும் கூறியனுப்பிவிட்டாள். சினிமாக் கம்பெனி வேலையாட்கள் முதல் நடிகர் வரையில் எல்லோருக்கும் ஜீவா அழைப்பு அனுப்பிவிட்டாள். பெரிய தோட்டத்தில் பார்ட்டிக்கு வேண்டிய சகலத்தையும் ஏற்பாடு செய்தாள்.

மாலை 5 மணியாகிவிட்டது. தோட்டத்தில் எங்கு பார்த்தாலும் கலர் பல்புகளால் தோரண விளக்குகள் ஒரே ஜகஜ்ஜோதியாய்ப் பிரகாசிக்கின்றன. ஆண்களும் பெண்களும் கும்பல் கும்பலாக வந்து குமிழுகிறார்கள். மோட்டார்கார்களின் ஹாரன் சப்தம் ஒன்றையொன்று போட்டியிட்டுப் பேரொலி செய்கின்றது ஜீவாவும் மணியும் முன்புறம் நின்று வருகிறவர்களை எல்லாம் முகமன் கூறி வரவேற்கிறார்கள். வரும் கார்களை எல்லாம் இமை கொட்டாமல் பார்க்கும் ஜீவாவுக்குக் கண் பூத்துப்போகிறது.

யார் யாருடைய காரோ வருகிறது. நிர்மலாவின் கார் இன்னும் வராதது பெருத்த கவலையாகிவிட்டது. காந்தம்மாளும் ஜீவாவின் பக்கத்திலேயே நின்று வரவேற்பவள்போல் அபிநயித்து "என்ன செய்வது ஜீவா! இன்னும் நிர்மலா வரவில்லையே! முதலாளி உள்பட பலரும் வந்துவிட்டார்களே! இன்னும் பார்ட்டி ஆரம்பிக்கா

விட்டால், ஏதாவது நினைக்கமாட்டார்களா? நிர்மலா ஒரு வேளை ஏமாற்றி விடுவாளோ?" என்று கேட்டாள்.

"அது தான் எனக்கும் யோசனையாக விருக்கிறது. நம் காரியம் ஜெயமா; அபஜெயமா ஒன்றுந்தெரியவில்லையே? நானும் தயாராக எல்லாவற்றையும் அவளுக்கு எடுத்து வைத்திருக்கிறேன்....ஆ.... அதோ! அதோ! இதுதான் நிர்மலாவின் கார்; வந்துவிட்டாள்" என்று தலைகால் தெரியாத சந்தோஷத்தினால், இருவரும் காரிடம் ஓடினார்கள்.

'பூங்கொடியோ! பொற்பாவையோ' என்று ஐயுறும்படி, ஆடும் மயில் போல் வரும் நிர்மலாவை ஆனந்தமாய் அவர்கள் வரவேற்றார்கள். கபடமறியாத காரிகை—நிர்மலமான இதயத்தையுடைய வனிதாமணிக்கு—இந்தச் சதியாலோசனையின் சூழ்ச்சி எப்படித் தெரியும்? களங்கமற்ற இதயத்துடன் அவள் கபடம் நிறைந்த அந்த விஷப் பூச்சிகளுடன் சென்று ஆசனத்தில் அமர்ந்தாள்.

தாய்!

தந்தை!

தாரம்!

இவர்களுக்குரிய
கடமைகளைச் செய்வது மேலானதா?
தான் செய்த பாவத்திற்குப்
பிராயச்சித்தம் செய்வது மேலானதா?

இதற்குச் சரியான பதிலை அளிக்கும்

மகிழ்ச்சி உதயம்

விலை அணா 10 : சந்தா நேயர்களுக்கு அணா 8.

183026
சென்னை-600 006

உங்கள் வோட்டை

எப்படிக் கொடுக்கப் போகிறீர்கள்?

ஹரிஜனங்களின் தேவாலயப் பிரவேசத்திற்கு ஹிந்துக்களில்
எத்தனைபேர் ஆதரவளிக்கிறார்களென்பதை

சென்னை ஸர்க்கார்

“பொதுஜன வாக்கு”

மூலமாக சீக்கிரம் தெரிந்துகொள்ளப்போகிறது.

“ஸாரதி பிலிம்ஸா” ரின்

தெலுங்கு சமூகச் சித்திரம்

“மால பில்ல”

படத்தைப் பார்த்து, நியாய அநியாயங்களைப் பரிசீலனை செய்யாமல்
உங்களது தீர்மானத்திற்கு வராதீர்கள்

ஸெப்டம்பர்மீ 12-ம் தேதி

ஏக காலத்தில் வெளியாகிறது; அன்று எல்லோரும் ஆதரியுங்கள்



புக்கிங் விவரங்களுக்கு :—

ஸரஸ்வதி டாக்கிஸ் லிமிடெட்., பெஜவாடா.

"JAGANMOHINI" Vol. XV No. 9 Regd. No. M. 2210



தலை வலிக்கு

Headaches

ஆஸ்பிரினை விலக்குங்கள்
இருதயக் கோளாறுகளையும்
விலக்குங்கள்



அம்ருதாஞ்சனை
உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது.

அம்ருதாஞ்சன் லிமிடெட்.,
சென்னை கல்கத்தா பம்பாய்

Printed & Published by V. M. Parthasarathy
at "Jaganmohini" Press, 26, Car St. Triplicane, Madras.